YARL OSAI
# யாழ் ஓசை

ஓசை : 01 நாதம் : 05 வெள்ளிக்கிழமை 03.12.2010 வார இதழ் விலை : ரூபா 15.00

# ஒக்ஸ்போர்ட் உரை இரத்தானது குறித்து ஜனாதிபதி கவலை!

## எனது எண்ணங்களை வெளியிடும் இடத்தை தேடுவேன் என்கிறார்

பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஆற்றவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டமை குறித்து அவர் தனது கவலையை வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் புதன்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் யூனியனின் அழைப்பை ஏற்று லண்டனுக்கு பயணமானார். நேற்றைய தினம் அவரது உரை மேற்படி யூனியனில் இடம்பெறவிருந்தது. இருந்தபோதிலும் ஜனாதிபதியின் வரவை எதிர்த்து அங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக அவரது உரை ரத்துச்

(6 ஆம் பக்கம் பார்க்க)



நாடளாவிய ரீதியில் அரசாங்க தாதியர் சங்கத்தினர் தமது கோரிக்கையை முன்வைத்து ஒரு மணி நேர பணிப் பகிஷ்கரிப்பு நடத்தினர். யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற பகிஷ்கரிப்பை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு:- வண்ணார்பண்ணை திருபர்)

## பாராளுமன்றத்தில் கனேபரம் ஜயலத் மீது தாக்குதல் முயற்சி

(ஜே.ஜி. ஸ்டீபன், ப. பன்னீர் செல்வம்)

லண்டன் ஒக்ஸ்போட் யூனியனில் ஆற்றவிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உரை ரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணகர்த்தாவாக ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன செயற்பட்டார் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று சபையில் தெரிவித்ததையடுத்து அங்கு பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மே மாதம் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்ந்து வடக்கு மாகாண சபை தேர்தல்

அடுத்த வருடம் மே மாதமளவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பின்னர் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருந்த போதிலும் தற்போது அதனை மே மாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த உள்ளூராட்சிமன்ற தேர்தல் புதிய தேர்தல் முறைமைக்கு அமைய நடத்தப்படவுள்ளது. அதாவது 70 வீதம் தொகுதி முறைமையிலும் 30 வீதம் பிரதேசவாரியான முறைமையிலும் தேர்தல் நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான உள்ளூராட்சிமன்ற திருத்தச் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தூதுவர் அனுப்பிய ரகசிய தகவல் அம்பலப்படுத்துகின்றது விக்கிலீக்ஸ் தளம்

இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்ட போரில் நிகழ்ந்த போர்க்குற்றங்களில் ஜனாதிபதிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கும் தொடர்பிருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுர் பற்றீசியா புட்டனிஸ் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமன்றி அவரது இரண்டு சகோதரர்கள் ஆகியோருக்கும் போர்க்குற்றங்களில் தொடர்பிருப்பதாக அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரால் உத்தியோக பூர்வ ரீதியில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பியிருந்த தகவல் குறிப்பிலேயே மேற்கண்டவாறு அவர் கருத்துத்

(6 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை ரத்து; ஒக்ஸ்போர்ட் யூனியன் வருத்தம் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட்டில் நேற்று வியாழக்கிழமை ஆற்றவிருந்த சிறப்புரை பாதுகாப்பு காரணமாக இரத்து செய்யப்பட்டதாக ஒக்ஸ்போர்க்ட் யூனியன் அமைப்பு அறிவித்திருந்தது. இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை ஜனாதிபதி பிரிட்டனுக்கு வருகை தந்ததையடுத்து இங்கு வாழும் தமிழர்கள் அதனை வன்மையாக கண்டித்து விமான நிலையத்தில் ஓர் ஆர்ப்பாட்டமே நடத்தியிருந்தார்கள்.

இந்த நிலையிலேயே பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அவரது உரை இரத்து செய்யப்படுகின்றது என அதில் குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த உரை இரத்து செய்யப்படுவது தொடர்பில் தாம் வருத்தமடைவதாகவும் ஒக்ஸ்போர்ட் யூனியன் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயத்தையொட்டி அவர் தங்கியிருக்கும் ஐந்து நட்சத்திர விடுதி உட்பட பல்வேறு இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008 ஆம் ஆண்டு இதே போன்று ஜனாதிபதி ஒக்ஸ்போக்ட் யூனியனின் அழைப்பின் பேரில் இங்கு உரையாற்றியிருந்தார். அவ்வேளையில் ஆயிரக் கணக்கான தமிழர்கள் வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற சதுக்கத்தில் இதே போன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, லண்டனில் சுமார் 3 இலட்சம் புலம் பெயர் தமிழர்கள் வசிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி லண்டன் கீத்ரூ விமான நிலையத்தை செவ்வாயன்று சென்றடைந்த சமயம் ஆயிரக் கணக்கான தமிழர்கள் அங்கு திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அவர் அங்கிருந்தும் சுரங்க வீதி வழியாக லண்டன் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி லண்டன் ஒக்ஸ்போர்ட் யூனியன் மற்றும் ஒக்ஸ்போக்ட் பல்கலைக் கழக இலங்கை சமூகத்தின் அழைப்பை ஏற்று திங்களன்று லண்டன் புறப்பட்டுச் சென்றிருந்தார். அன்றைய தினம் இரவு 8 மணி முதல் லண்டன் கீத்ரூ விமான நிலையத்தில் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின. அவர் பயணம் செய்த விமானம் தரை இறங்கியதும் அங்கு கூடியிருந்த மக்கள் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். விமான நிலையத்தில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த போதும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதுவித இடையூறும் செய்யவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரித்தானியாவின் செனல்-4 தொலைக்காட்சி அலைவரிசையில் இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்து வெளியிடப்பட்ட வீடியோ காட்சிகளை இலங்கை அரசாங்கம் உண்மைக்கு புறம்பானது எனக் கூறி நிராகரித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தக் காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் வீடியோ காட்சியினை கடந்த செவ்வாய்க்கிழமை செனல்-4 தொலைக் காட்சி ஒளிபரப்பியது. இந்த வீடியோ காட்சி உண்மைக்குப் புறம்பானது என நிராகரித்துள்ள பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தையொட்டி துர் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகுமென விமர்சித்துள்ளது.

கண்கள் கட்டப்பட்ட நிர்வாண நபர்கள் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகள் அடங்கிய வீடியோவினை பதினாறு மாதங்களுக்கு முன்னர் செனல் - 4 தொலைக் காட்சி வெளியிட்டிருந்தது. புதிய வீடியோவும் அதே சம்பவம் தொடர்பானது. எனினும், இக்காட்சிகளில் குறைந்த பட்சம் ஏழு பெண்களின் நிர்வாணமான சடலங்களும் காணப்படுகின்றன. இந்த வீடியோ காட்சி தொடர்பில் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகம் கடந்த வருடம் செனல்-4 தொலைக்காட்சி இதேபோன்ற ஒரு வீடியோ காட்சியை வெளியிட்டிருந்தது. அது உண்மையானதல்ல என்று கண்டித்துள்ளது. இதேவேளை, என்னதான் ஆர்ப்பாட்டங்கள் செய்தாலும் வீடியோ காட்சிகளை வெளியிட்டாலும் சர்வதேசத்தால் ஒரு போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையோ, படைத் தளபதிகளையோ போர்க் குற்றத்தின்கீழ் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் மண்டியிட வைக்க முடியாது என ஜாதிக்க ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இதனிடையே, லண்டன் ஒக்ஸ்போக்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உரையாற்ற விடாது தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.க. எம்.பி. ஜயலத் ஜெயவர்த்தன பங்கு பற்றியதன் மூலம் அரசியலமைப்புக்கு எதிராக செயற்பட்டுள்ளார். எனவே, அவரை சபாநாயகர் விசாரணைக்குட்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆளும்கட்சி எம்.பி.யான ஏ.எச்.எம். அஸ்வர் நேற்று முன்தினம் சபையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

## வீதிப் போக்குவரத்து விதிகளை மீறுவோர் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தப்படுவர்

### யாழ். போக்குவரத்துப் பிரிவு அதிகாரி அறிவிப்பு

(அலுவலக நிருபர்)

"யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் பலர் உயிரிழந்தும் பலர் கடுங்காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர். இதற்கு வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்து நடக்காமையே பிரதான காரணமாகும்."

இவ்வாறு யாழ். போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி கீர்த்தி குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு வருட காலத்திற்குள் யாழ்.ரயில் பாதையை சீர்செய்ய இந்தியா திட்டம்

வடபகுதியில் இந்தியா பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து உள்ளது.அதன் முதல் கட்டமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கு ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது.

அதனை தொடர்ந்து ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைகளை திருத்தும் பணிகள், பலாலி விமான நிலையத்தை சீரமைக்கும் பணிகள் காங்கேசன்துறைமுகத்தை சீர் செய்யும் பணிகள் என பல்வேறு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஓமந்தை தொடக்கம் காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை புனரமைப்பு சுமார் 2வருட காலத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் என தெரியவருகின்றது.அதே போன்று பலாலி விமான தளத்தை சர்வதேச தரத்திற்கு உயர்த்த இந்திய அரசின் உதவியுடன் அபிவிருத்தி ப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்கும் இந்தியா உதவியளிக்கவுள்ளது. மேலும் இந்திய வங்கிகளும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளன.முதலில் இந்திய வங்கி தனது கிளையை நிறுவவுள்ளது.இதற்கான அனுமதியை இலங்கை மத்தியவங்கி வழங்கியுள்ளதாக தெரிவருகின்றது.

இந்திய அரசின் உதவியுடனான வடமாகாண அபிவிருத்தி பணிகள் யாவும் விரைவில் ஆரம்ப்பிக்கப்படவுள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

அதேபோன்று தென்பகுதியிலும் கிழக்கிலும் இந்தியா தனது அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு நாடுகளின் கடற்படைத் தளபதிகள் செவ்வாயன்று இலங்கை வருகின்றனர்

இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஏழு நாடுகளின் கடற்படைத் தளபதிகள் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கை கடற்படையின் பேச்சாளர் கப்டன் அத்துல சேனாரத் இது குறித்து தகவல் வெளியிடுகையில்,

இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள கருத்தரங்கில் பங்கேற்பதற்காக ஏழு நாடுகளின் கடற்படைத் தளபதிகள் இலங்கை வரவுள்ளனர்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, மலேஷியா, பாகிஸ்தான், ஐக்கிய அரசு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளின் கடற்படைத் தளபதிகளே எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள கருத்தரங்கில் பங்கேற்பதற்காக கொழும்பு வரவுள்ளனர். அத்துடன், 21 நாடுகளின் கடற்படை அதிகாரிகளும், ஆறு நாடுகளின் போர்க் கப்பல்களும் இலங்கைக்கு வரவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்த சர்வமதக் குழுக்கள் அவசியம்

### ஒன்றிய பிரதிநிதிகள் சாட்சியம்

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், சமூக ஒருமைப்பாடு உடைந்துபோகாமல் பாதுகாக்கப்படவும் நாட்டில் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் அவசியம். எனவே தேசிய மனச் சாட்சிக் குழு,

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-குவைதா தொடர்பில் முஷாரப் தகவல்: விக்கி லீக்ஸ்' ஆவணங்கள் மூலம் அம்பலம்

அல்-குவைதா இயக்கத்தை சேர்ந்த சிலர், பாகிஸ்தானின் எல்லை பகுதிகளில் பதுங்கியிருப்பதாக அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் ஒத்து கொண்டார் என்பது, 'விக்கிலீக்ஸ்' ஆவணங்கள் மூலம் வெளிவந்துள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் புற மாகாணத்திற்கும், ஆப்கானிஸ்தானுக் கும் இடைப்பட்ட பகுதியில் அமைந் திரு ப்பது தான், பழங்குடிப் பகுதிகள். பஜா வுர், முகமது, கைபர், ஒராக்சய், குர்ரம், வடக்கு வாசிரிஸ்தான், தெற்கு வாசிரிஸ் தான் என, மொத்தம் ஏழு பழங்குடிப் பகுதிகள் இதில் அடங்கியுள்ளன.

இவை அனைத்தும் 'கூட்டு நிர்வாக பழங்குடிப் பகுதிகள்' (எப்.ஏ.டி.ஏ.,) என்றழைக்கப் படுகின்றன. இப்பகுதிகளில் உள்ள பழங்குடியினர், தலிபான்களுக்கு ஆதரவளிக்கின்றனர்.

இவர்கள்தான் தலிபான்கள் ஆப்கானில் இருந்து பாகிஸ்தானுக்கும், அதேபோல் பாகிஸ்தானில் இருந்து ஆப்கானுக்கும் ஊடுருவ உதவி செய்கின்றனர். ஆனால், இன்று வரையிலும் பாகிஸ்தான் அரசு, அல்-குவைதாவினரோ, பின்லேடன் மற்றும் அவரது உதவியாளர் அய்மன் அல் ஜவாகிரி ஆகியோர் பாகிஸ்தானில் இல்லை என திரும்ப திரும்ப சொல்கிறது. இதுகுறித்து, பர்வேஸ் முஷாரப் பாகிஸ்தான், ஜனாதிபதியாக இருந்த போது, அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் பேசியுள்ளார். அப்போது, பஜாவுர் பகுதியில் அல்-குவைதாவினர் சிலர் இருப்பதாக அவர் ஒத்து கொண்டார்.

அமெரிக்க பிரதிநிதி ஒருவர், நியூயோர்க்கில் உள்ள தலைமையகத்திற்கு தெரிவித்த தகவலில் கூறியிருப்பதாவது: பஜாவுர் பகுதியில் அல்-குவைதாவினர் பதுங்கியிருப்பதாக முஷாரப் ஒத்துக் கொண்டார். மேலும் அங்கு வாழும் பஸ்துன் பழங்குடியினர் மீது பாகிஸ்தான் அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஏழு பழங்குடிப் பகுதிகளில், வடக்கு மற்றும் தெற்கு வாசிரிஸ் தான் பழங்குடியினர், தலிபான் ஊடுருவுவதற்கு வெளிப்படையாக உதவி வருகின்றனர்.

மற்ற பகுதிகள் அமைதியாக இருப்பதாகவும், குர்ரம் பகுதியில் தலிபான் ஊடுருவ முயன்றால் உள்ளூர் வாசிகளே அடித்து துரத்துவதாகவும் முஷாரப் கூறுகிறார். இவ்வாறு அமெரிக்க பிரதிநிதி கூறியுள்ளார்.

அப்போதைய அமெரிக்க பிரதி நிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி, முஷாரப்பிடம் பேசும் போது, 'தலிபான் தலைவர்கள் முல்லா ஓமர் எங்கிருக்கிறார்?' என்று கேட்ட போது, 'அவர்கள் பாகிஸ்தா னில் இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

# ஆறு குட்டிகளுடன் அமைதியாக குடும்பம் நடத்தும் சிறுத்தை



தனது ஆறு குட்டிகளுடன் அமைதியாக குடும்பம் நடத்தும் சிறுத்தையை படத்தில் காணலாம். இது கென் யாவின் மவாய் மாரா தேசிய சரணாலயப் பகுதியில் எடுக்கப்பட்ட காட்சிகள். இந்தக் காட்சிகள் இத்தாலியப் படப் பிடிப்பாளர் போர்லோ டோச்யோவால் நீண்ட தூரம் பின் தொடர்ந்து சென்று எடுக்கப்பட்ட வையாகும்.

சிறுத்தைகளுக்கு பிறக்கின்ற குட்டிகளுள் பத்து வீதமானவை மட்டும் தான் ஆறு மாதங்கள் தாண்டியும் உயிர் வாழ்கின்றன. ஏனையவை விரைவாக இறந்து விடுகின்றன.

பொதுவாக சிறுத்தைகள் இப்போது உலகில் அருகி வரும் உயிரினம் என்பது குறிப்பிடத்தக்கது.

# விலைவாசியை சமாளிக்க சீன அரசு புதிய திட்டம்

சீனாவில் உள்ள ஏழைகள் விலைவாசி உயர்வை சமாளிப்பதற்காக, அவர்களுக்கு மாதந்தோறும், நிதியுதவி அளிக்க சீன அரசு திட்டமிட்டுள்ளது.

சீனாவில் நாளுக்கு நாள் பணவீக்கம் அதிகரித்து விலைவாசி ஏறிவருகிறது. அதைச் சமா ளிக்க முடியாமல் அங்குள்ள சாதாரண மக்கள் தடுமாறி வருகின்றனர்.

இதனால், அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கோபத்தை தணிக்கும் வகையில், சீனாவின் மேற்குப் பகுதிகளில் உள்ள வயதானோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோரு க்கு, மாதந்தோறும், 20 யுவான் (சீன நாணயம்) வழங்க அரசு திட்டமிட்டுள் ளது. சீனாவின் நாணய மதிப்புக் கணக் குப்படி அமெரிக்க டொலர் மூன்றுக்கு 20 யுவான் சமம்.

ஒரு மாதத்திற்கு கிட்டத் தட்ட 150 ரூபாய் வரை ஒருவருக்கு தரப்படும். இத்திட்டத் தில் முதல்கட்ட மாக 46 லட்சம் பேர் பயனடைகின்றனர்.



சீனாவிலுள்ள ஹியுனன் மாநிலத்தில் முட்டை வடிவில் ஒரு குடிசையை அமைத்து கடந்த இரு மாதங்களாக இளைஞன் ஒருவன் வாழ்ந்து வருவதை படத்தில் காணலாம். இவர் தான் பணிபுரியும் அலுவலகத்திற்கு அண்மையிலேயே இக்குடிசையை அமைத்துள்ளார்.

இதை அமைப்பதற்கு சுமார் 1000 அமெரிக்க டொலர் செலவழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இயற்கைக்கு ஏற்ப மூங்கில் தடிகளால் அமைக்கப்பட்டுள்ள இக்குடிசை நவீனத்துவமிக்கதாக காணப்படுகின்றது.

# குளோனிங் டொலியிலிருந்து நான்கு குட்டிகள் உருவாக்கம்



விஞ்ஞானிகள் குளோனிங் முறையை அறிமுகப்படுத்தியபோது உலகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. இதை மீறி பல சாதனைகளை படைத்து வருகின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அந்த வரிசையில் அறிவியல் உலகில் சாதனை படைத்தது 1996இல் குளோனிங் முறையில் பிறந்த டொலி செம்மறி ஆடு.டொலிக்கு தற்போது 14 வயது. அதன் ஜீன்களில் இருந்து குளோனிங் முறையில் மீண்டும் 4 செம்மறி ஆட்டுக்குட்டிகளை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.

இங்கிலாந்தின் நட்டிங்காம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கெய்த்கேம்பெல் தலைமையில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் வெற்றி கிட்டியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து கேம்பெல் கூறியதாவது: குளோனிங் முறையில் உருவான அசல் செம்மறி ஆட்டில் இருந்து 14 ஆண்டுகளுக்கு பின் அதன் ஜீன்களைக் கொண்டே 4 நகல்கள் உருவாக்கப்பட்டுள்ளது. குளோனிங் உலகில் இது முதல் உலக சாதனை. இத்தகைய முறையில் உருவாக்கப்பட்ட உயிரினங்கள் நோய்த் தொற்று, எதிர்ப்புசக்தி குறைபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விரைவில் உயிரிழந்து விடும். 14 வயது டொலியும் அதன் 7ஆவது வயதில் நுரையீரல் தொற்று, ஆர்த்ரைடிஸ் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகி மிகவும் ஆபத்தான நிலையில் இருந்து உயிர்பிழைத்தது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பாதிப்புகளில் இருந்து குளோனிங் முறையில் உருவாக்கப்படும் உயிரினங்களை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட சிறப்பு ஆராய்ச்சியின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்டவையே தற்போதைய 4 செம்மறிஆட்டுக் குட்டிகளும். இந்த 4 குட்டிகளும் ஒன்றுபோலவே உள்ளன.

வித்தியாசம் கண்டுபிடிப்பது கடினம்.தாய் ஆட்டின் பால்மடியில் இருந்து எடுக்கப்பட்ட திசுக்கள் பாதுகாக்கப்பட்டு குட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு பிரபல மேற்கத்திய பாடகர் டொலி பார்ட்டன் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

# ஹிலாரி ராஜினாமா செய்யமாட்டார்

## அமெரிக்கா உறுதி



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி பதவி விலக வேண்டும் என்ற விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசேஞ்சின் கோரிக்கையை அமெரிக்கா திட்ட வட்டமாக மறுத்துள்ளது.

விக்கிலீக்ஸ் நிறுவ னம் அண்மையில் வெளி யிட்ட கேபிள்கள் சர்வதேச அளவில் பெரிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. வெளிநாடுகளுக்கான அமெரிக்க தூதர் களை ஹிலாரி உளவு பார்க்க தூண்டினார் என்பது விக்கிலீக்ஸ் நிறுவனரின் புகார். எனவே இதற்கு தார்மீக பொறுப்பேற்று ஹிலாரி பதவி விலக வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் ஜூலியன் பிரச்சினையை திசை திருப்புவதாகவும், ஹிலாரி பதவி விலகும் பேச்சுக்கே இடமில்லை என்றும் அமெரிக்கா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaal Osai
# யாழ் ஓசை
*2010 டிசம்பர் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*
**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# வடக்கில் ஆலயங்களையும் விட்டுவைக்காத கொள்ளையர்கள்

வலி.வடக்கு விழிசிட்டிப் பகுதியில் உள்ள சிவகுருநாதர் ஆலயத்தில் இருந்து பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். வலி.வடக்கில் மூன்று கிராமசேவையாளர் பிரிவில் மீள் குடியேற அனுமதிக்கப்பட்டதையடுத்து மக்கள் அப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் பாதுகாப்பு மண் அணைக்கு சமீபமாக உள்ள இவ் ஆலயத்தை ஆலய நிர்வாகத்தினர் பார்வையிட்டு வீடியோ படமும் எடுத்துள்ளனர். எனினும் கடந்த வாரம் அவர்கள் ஆலயத்தைச் சென்று பார்த்த போது ஆலயத்தில் இருந்த பித்தளைப் பொருட்கள், ஆலய கண்டாமணி, ஆலய வாகனம் போன்ற பெறுமதி வாய்ந்த பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனிடையே மீள் குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் அதன் அருகேயுள்ள இடங்களில் இருக்கும் வீட்டு ஜன்னல்கள், தகரங்கள், ஓடுகள், கூரை மரங்கள் என்பனவும் களவாடப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் ஒருபோதும் இல்லாதவகையில் களவுகள், கொள்ளைகள் என்பன அதிகரித்துள்ளன. ஆலயங்களைக் கூட விட்டு வைக்காத கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர். இதனால் மக்கள் மிகுந்த பயப் பிராந்தியுடனே காலத்தைக் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் வடபகுதி ஆலயங்களில் இருந்து திருடப்படும் மிகவும் பெறுமதி வாய்ந்த பொருட்கள் தென்பகுதியில் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதன் உண்மைத் தன்மை பற்றி ஆராய்ந்து அறிய வேண்டியது பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களின் கடப்பாடாகும்.

இதனிடையே வடக்கில் யுத்த காலத்தில் மூடப்பட்ட ஆலயங்களில் இருந்த விலைமதிக்க முடியாத விக்கிரகங்கள், தேர்கள், மணிகள் மற்றும் கோயில் உபகரணங்கள் புராதன பொருட்கள் என்பன கொழும்பு பாமன் கடைப்பகுதிக் கடைகளில் காணப்படுவதாகவும் இவற்றைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் குருக்கள் பிரம்ப ஸ்ரீ எஸ்.பத்மானந்த சர்மா தெரிவித்திருந்தார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில், விலைமதிக்க முடியாத இந்த விக்கிரகங்கள் மற்றும் புராதன பொருட்களை நாங்கள் இந்து மக்களின் சொத்துக்களாகப் பார்க்கவில்லை. மாறாக இலங்கை நாட்டின் சொத்தாகவே பார்க்கின்றோம். வன்னியில் மக்கள் நெல் சேமிப்பதற்காகப் பாவிக்கப்பட்ட பெட்டகங்களும் சில இடங்களில் விற்பனைப் பொருட்களாக இருக்கின்றன. இவை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் அதிகரித்திருக்கும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்து பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் கூடிய அக்கறையும் சிரத்தையும் காட்டுவது அவசியமாகும். இவ்வாறு திடீரென வடக்கில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பது மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனை யார் செய்கிறார்கள் என்பது கண்டறிய முடியாதவொன்றாகவே உள்ளது. முழுத்துக்கு முழம் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள போதும் கத்தி, வாள், துப்பாக்கிகளுடன் வரும் கொள்ளையர்கள் தங்கள் காரியங்களை இலகுவாக சாதித்துச் செல்கின்றனர். வடபகுதி மக்கள் மத்தியில் இன்று உருவாகியுள்ள ஒரே பிரச்சினையாக இந்த இரவு நேரக் கொள்ளைகள் அமைந்துள்ளன. எனவே இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பாகும்.

கொள்ளைச் சம்பவங்கள் குறித்து பொதுமக்கள் இலகுவாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தவும் அதேபோன்று துரிதமாக பொலிஸார் ஸ்தலத்திற்கு விரையவும் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமானாலோ அன்றேல் இரவுவேளைகளில் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்படுமானாலோ இவ்வாறான சம்பவங்களை ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு பிரிவினருக்கு வடக்கில் இன்று பாரிய சவாலாக மாறியிருக்கும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த காத்திரமான நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். இன்றேல் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகள் மீது நம்பிக்கை இழக்கும் நிலைமைகளே மிஞ்சுவதாக இருக்கும்.

# ஒரு நாடகாசிரியரின் கதை

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

**கேந்திரமுக்கியத்துவமான இடம்**

அராலிக் கிராமம் யாழ்.குடாநாட்டில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அருகில் ஒன்பது தீவுகள் உள்ளன. அவற்றில் ஏழில் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வருவதற்கு அன்று மூன்று வழிகளே இருந்தன. ஒன்று ஊர்காவல்துறை காரைநகர் பாதை மற்றது மண்டைதீவு அல்லைப்பிட்டி அலுப்பாந்திப் பாதை, மூன்றாவது அராலி, வேலணைப் பாதை. முன்னைய இரண்டு வழிகளிலும் ஆழமான பகுதிகள் இருக்கின்றன. அந்தக் காலத்தில் சாதாரண மீன்பிடிப் படகுகளின் தான் மக்கள் பயணம் செய்வார்கள். ஆழமான பகுதிகளில் விபத்துக்கள் நடந்து உயிரிழப்புக்களும் நேர்ந்திருக்கிறது.

அராலிக் கடல் ஆழமில்லாதது. கோடை காலத்தில் எந்த இடத்தில் நின்றாலும் மார்பளவு தண்ணீர்தான். எனவே பயம் இல்லாத இந்த வழியில்தான் அதிக மக்கள் பயணித்தனர். ஆண்கள் மட்டும் தான் வருவார்கள். ஏதும் வேலை இருந்தாலல்லாது பெண்கள் வருவதேயில்லை. தாங்கள் இழைக்கின்ற பாய், கடகம், பெட்டி, சுளகு போன்றவற்றைக் கொண்டு வந்து தலைச் சுமையுடன் வயல் வரம்புகளில் நடந்து சங்கானை, பண்டத்தரிப்பு சந்தைகளுக்கு கொண்டு போய் விற்று விட்டு மாலையிலோ அடுத்த நாளோ வீடு திரும்புவர். சில வேளைகளில் இருவர் இருவராக வந்து மாறி மாறிச் சுமப்பார்கள். அந்த வரம்புப் பாதை இப்பொழுது றோட்டாக்கப்பட்டுவிட்டது.

பெரிய மீன்களையும் இந்த வழியாகவே தடியில் கட்டிச் சுமந்து செல்வர். தீவுகளில் விற்க முடியாது. இங்கே கொண்டு வந்தால் நல்ல காசு. தீவுகளில் மித மிஞ்சிய தேங்காய்களும் அராலித் துறைக்கு வரும். சுருக்கமாகச் சொன்னால் அராலி அந்தக் காலத்தில் தீவகத்தாருக்கு ஒரு ஜீவாதாரப் பாதையாக விளங்கியது. 1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பண்ணை வீதி திறக்கப்பட்டதும் அராலியை எல்லோரும் மறந்தனர். ஆராலித் துறையில் காகம் கூடப் பறப்பதில்லை.

**கலாபூசணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

போராட்ட காலத்தில் இந்திய அமைதிப்படை வருவதற்கு முன்பு இலங்கை இராணுவம் பண்ணைப் பாதையை மூடிற்று. காரைநகரில் கடற்படை எல்லோரும் மீண்டும் அராலித் துறைக்கு ஓடி வந்தனர். முன்பு ஆண்கள் மட்டும் வருவார்கள். இப்பொழுது ஆண்கள், பெண்கள் குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்கள் எல்லோரும் வந்தனர். முன்பு கடல் வழியாக சைக்கிள்கள் கூட எடுத்துச் செல்லப்படுவதில்லை. இப்பொழுது கார்கள், பஸ்கள், மினி பஸ்கள், லொறிகள், டிராக்டர்கள், மோட்டார் சைக்கிள்கள்...... இலங்கையில் உள்ள மோட்டார் வாகனங்கள் எல்லாம் அராலித்துறைக்கு வந்தன.

இந்திய அமைதிப்படை மீண்டும் பண்ணைப் பாதையை திறந்து விட்டது. புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் போர் துவங்கியது. அராலிக்கு மீண்டும் யோகம் அடித்தது. அந்த யோகம் சில மாதங்களே நீடித்தது.

இந்திய அமைதிப்படை திரும்பிய பிறகு இலங்கை இராணுவம் ஊர்காவற்றுறையில் இறங்கி யாழ். கோட்டையை நோக்கி முன்னேறிய பொழுது வேலணை மக்கள் அராலித்துறைக்கூடாகவும் ஓடி வந்து தப்பித்துக் கொண்டனர். பின்வாங்கிச் சென்ற இராணுவம் மீண்டும் ஒரு முறை படையெடுத்து எல்லாத் தீவுகளையும் கைப்பற்றிக் கொண்ட போது தீவுப்பகுதி மக்களில் பெரும்பாலானவர்கள் குடாநாட்டிற்கு ஓடி வந்து விட்டனர். அராலித்துறை தீவக மக்களை காலம் காலமாகக் காப்பாற்றி வந்திருக்கிறது. இருந்தாலும் எங்கள் கிராமம் போரினால் அதிகம் பாதிக்கப்படாமலும் தப்பித்துக் கொண்டது.

**இலக்கியப் பணிகளுக்கு நிலைக்களமாக விளங்கியது**

எனது நாடகச் செயற்பாடுகள் அராலியில்தானே நடந்தன. சும்மாவா? (1954 - 74) இருபது ஆண்டுகள், 25 நாடகங்கள். அதால்தான் எனது பெயருடன் அராலியூரையும் இணைத்துக் கொண்டேன்.

அராலி பலமுறை எனக்குப் புகலிடம் அளித்திருக்கிறது. முதலில் இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்கு வந்த பொழுது 1987ஆம் ஆண்டு ஒரு மாத காலம். அடுத்து 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் கோட்டையைக் கைப்பற்ற முன்னேறிய பொழுது ஒரு மாத காலம். அப்பொழுதெல்லாம் ஊரில் மக்கள் இருந்தார்கள்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வலிகாமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த 5 இலட்சம் மக்களும் தென்மராட்சிக்கும் கிளிநொச்சிக்கும் சென்று கஷ்டப்பட, நான் அராலியில் 6 மாதங்கள் மனைவியுடன் நிம்மதியாக வாழ்ந்தேன். ஊரில் 150 பேர் வரை இருந்தார்கள். ஒருவரும் வெளியில் தலைகாட்டுவதில்லை.

வீட்டிலிருந்து வெளியே சென்றால் அராலி மண்ணும் மரம், செடி, கொடிகளும்தான் கண்ணில்படும். வடக்கே மாதகலில் இருந்து கிழக்கே கோண்டாவில்வரை போய்ப் பார்த்திருக்கிறேன். வீதியில் மக்களையே காண முடியாது. மாடுகள் திரியும். நாய்கள், பூனைகள் செத்துக் கிடக்கும். மனிதர்கள் எல்லோரும் வீடுகளில் பதுங்கி இருப்பர். நிவாரணம் கொடுக்கப்படும் அன்று எல்லோரும் வந்து குவிவர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவ்வளவு மக்கள் இருக்கிறார்களா என்று வியப்பு ஏற்படும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாக். மீது இந்தியா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுப்போம் அமெரிக்காவுக்கு சர்தாரி கூறியதாக 'விக்கிலீக்ஸ்' தகவல்

**புதுடில்லி:**

இந்தியா எங்களைத் தாக்கினால் நாங்கள் சரியான பதிலடி கொடுப்போம் என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி அமெரிக்காவுக்கு தெரிவித்ததாக பாகிஸ்தான் தொடர்பான சில தகவல்களை 'விக்கிலீக்ஸ்' கசியவிட்டுள்ளது.

மும்பைத் தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையின் போது தான் சர்தாரி இந்த எச்சரிக்கையை அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளார்.

மும்பைத் தாக்குதலுக்குப் பின்னர் ஜனவரி 2 ஆம் திகதி தன்னை வந்து சந்தித்த பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதர் ஆன்னி பீட்டர்சனுடன் பேசிய சர்தாரி, இந்தியா எங்களை இராணுவ ரீதியாக தாக்கினால், எங்களுக்கு வேறு வழியில்லை, நாங்களும் சரியான பதிலடி கொடுப்போம். எங்களது நாட்டின் கொள்கையை எங்களைத் தவிர வேறு யாரும் செயற்படுத்தவோ, இயக்கவோ திணிக்கவோ முயன்றால் அதை அனுமதிக்க மாட்டோம்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரை காஷ்மீரை விட மிக அரசியல் பிரச்சினை எதுவுமே இல்லை என்று கூறியுள்ளார் .

**பாக்.கில் பதுங்கியிருக்கும் அல்கொய்தா**

இதேபோல அல் கொய்தா அமைப்பின் மிச்சம் மீதித் தலைவர்களும் பாகிஸ்தானில் தான் பதுங்கியிருப்பதாக முஷாரப் அமெரிக்காவிடம் கூறியுள்ளதாகவும் 'விக்கிலீக்ஸ்' தகவல் தெரிவிக்கிறது.

ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தான் மலைப் பகுதியில் தான் இவர்கள் பதுங்கியிருப்பதாகவும் முஷாரப், அமெரிக்காவிடம் தெரிவித்துள்ளார்.

பின் லேடனும், அவரது உதவியாளருமான அய்மான் அல் ஜவாஹிரியும் பாகிஸ்தானில் இல்லை என்று பாகிஸ்தான் அரசு தொடர்ந்து கூறி வந்த நிலையிலேயே, அமெரிக்க எம்.பிக்கள் குழுவிடம் முஷாரப் இவ்வாறு கூறியுள்ளார்.

பின்லேடன் உள்ளிட்டோர் குறித்து தாங்கள் முஷாரப்பிடம் கேட்டபோது அவர்கள் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள மலைப் பகுதியில், பாகிஸ்தான் பகுதிக்குள் தான் பதுங்கியிருப்பதாக ஒப்புக் கொண்டார் என எம்.பிக்கள் குழு கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல்கள் தெரிவிக்கின்றது.

# அழகர்கோவில் கோட்டைச் சுவர் இடிந்து விழுந்தது

**மதுரை**



சுமார் 1,100 ஆண்டுகள் பழமையான புகழ் பெற்ற மதுரை அழகர் கோவில் கோட்டைச்சுவர் இடிந்து விழுந்தது.

மதுரை மாவட்டத்தில் அமையப்பெற்ற இக்கோவில் வைணவர்கள் போற்றும் 108 திவ்வியத் தலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. மலைப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள இந்தக் கோயிலில் சுமார் 1200 ஆண்டுகள் பழைமையான இரணியன் கோட்டைக்கு நடுவே தான் அமையப் பெற்றுள்ளது.

கோயிலுக்கு அரண் போன்று அமைந்த இந்தக் கோட்டைச் சுவர், கடந்த சில நாள்களாக பெய்து வரும் கனத்த மழையினால் சுமார் 60 அடி நீளத்துக்கு சரிந்து விழுந்தது. இதனால் கோட்டைச் சுவரின் முக்கியப் பகுதிகள் சேதமடைந்துள்ளது. எனினும் இச்சம்பவத்தில் யாரும் காயமடையவில்லை.

# பிரதமரின் அறிவுரையை மதிக்கவில்லை: ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ராஜாவை கைவிட்ட மத்திய அரசு

**டில்லி:**



ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் இதுவரை ராஜாவுக்கும் சேர்த்தே வாதாடி வந்த மத்திய அரசு முதல் முறையாக ராஜாவைக் கைவிட்டுள்ளது. பிரதமர் கூறிய அறிவுரைகளை ராஜா மதிக்கவே இல்லை என்று உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் அனைத்துத் தரப்பிலிருந்தும் கடும் கண்டனங்களை சம்பாதித்து வருகிறது மத்திய அரசு. முதலில் உயர் நீதிமன்றத்தின் கடும் கண்டனங்களை சந்தித்தது. தற்போது கடந்த 2 வாரங்களாக ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஜேபிசி விசாரணை அவசியம் என்று கோரி பாராளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைத்து வருகின்றன எதிர்க்கட்சிகள்.

பிரதமர் மன்மோகன் சிங் இதுவரை இந்த விவகாரத்தில் வாய் திறந்து பேசாமலேயே உள்ளார். ஆனால் ராஜாவைக் கைவிடாமல் தொடர்ந்து அவருக்கும் சேர்த்தே ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் வாதாடி வருகிறது மத்திய அரசு. சமீபத்தில் கூட முரசொலி மாறன் நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன் சிங், ராஜாவைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறுவது போல நடந்து கொண்டார். இதையும் எதிர்க்கட்சிகள் சர்ச்சையாக்கின.

இந்த நிலையில், தற்போது மத்திய அரசு, ராஜாவை கீழே தூக்கிப் போட்டுள்ளது. மொத்தப் பழியையும் தற்போது ராஜா மீது திருப்பும் வகையில் மத்திய அரசு ஒரு பதில் மனுவை நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இதுகுறித்து சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்ரமணியம் உயர் நீதிமன்றில் கூறுகையில்,

“ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக பிரதமரும், சட்ட அமைச்சரும் சில கருத்துக்களை வைத்திருந்தனர். அதற்கு தொலைத் தொடர்பு அமைச்சகம் (ராஜா) உரிய முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் பிரதமரின் அறிவுரைகளை தொலைத் தொடர்பு அமைச்சர் பின்பற்றவில்லை. மதிக்கவில்லை. இந்த விவகாரத்தில் தொலைத் தொடர்புத்துறை மிகவும் வெளிப்படையான துறையாக இருந்திருக்க வேண்டும் என்றார்.

ஸ்பெக்ட்ரம் வழக்கில் பிரதமருக்காக முதலில் கோபால் சுப்ரமணியம் தான் ஆஜராகி வந்தார். பின்னர் அவரது செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்த அரசு, அட்டர்னி ஜெனரலை இதில் இறக்கியது. தற்போது தொலைத் தொடர்புத் துறைக்காக ஆஜராகி வருகிறார் கோபால் சுப்ரமணியம் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜாவை அம்போ என கைவிடும் வகையில் கோபால் சுப்ரமணியம் உயர் நீதிமன்றத்தில் பேசியிருப்பது தி.மு.க. வட்டாரத்தை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# ஆண்டிபட்டி அருகே பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து: ஸ்தலத்தில் 17 பேர் பலி; 89 பேர் காயம்

**ஆண்டிபட்டி :**

ஆண்டிபட்டி அருகே தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் 7 பெண்கள் உட்பட 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 89 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



தேனி மாவட்டம், சின்னமனூரில் இருந்து மதுரை நோக்கி எம்.ஆர்.டி. நிறுவன பஸ்ஸும், திருமங்கலத்தில் இருந்து போடிக்கு சோலைமலை நிறுவன பஸ்ஸும் சென்று கொண்டிருந்தன. இரண்டு பஸ்களிலும் மொத்தம் 104 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8.10 மணிக்கு இரண்டு பஸ்களும் ஆண்டிபட்டி அருகே, எஸ்.எஸ்.புரத்தில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாயின. இதில், சோலைமலை நிறுவனத்தின் பஸ் தலைகுப்புற கவிழ்ந்து உருண்டது. எம்.ஆர்.டி. பஸ்ஸின் பக்கவாட்டுப் பகுதி முழுவதும் சேதமடைந்தது.

இதனால் குறித்த இரு பஸ்களிலும் பயணித்தவர்களில் இரு சிறுவர்கள், 7 பெண்கள் உட்பட 17 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பஸ்களில் பயணம் செய்த 89 பேர் காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஆந்திராவில் 39 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு

**ஐதராபாத்.**

ஆந்திரா முதலமைச்சர் ரோசய்யாவின் ராஜினாமாவைத் தொடர்ந்து, அவருக்குப் பதிலாக கிரண்குமார் ரெட்டி புதிய முதலமைச்சராக கடந்த 25 ஆம் திகதி பதவியேற்றார். அப்போது அமைச்சர்கள் யாரும் பதவி ஏற்கவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் 39 அமைச்சர்கள் பதவியேற்றனர். அவர்களில் 7 பேர் புதியவர்கள்.

கடந்த அமைச்சர் சபையில் இருந்த 5 பேர் நீக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேர் ஜெகன் மோகன் ரெட்டியின் ஆதரவாளர்கள்.

இதனிடையே மறைந்த முதலமைச்சர் வை.எஸ்.ராஜசேகர ரெட்டியின் இளைய சகோதரர் விவேகானந்த ரெட்டி இந்த அமைச்சர் சபையில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக ஒருமைப்பாடு** (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணத்துக்கும் சமாதானத்துக்குமான குழு மற்றும் சமூகத்தை செயற்பாட்டுக்கு இட்டுச்செல்லும் குழு என முக்கிய மூன்று குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று நல்லிணத்துக்கான வடக்கு - கிழக்கு சர்வமத ஒன்றியம், கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளித்த நல்லிணத்துக்கான வடக்கு - கிழக்கு சர்வமத ஒன்றியப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன்தினம் கொழும்பில் ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, நல்லிணத்துக்கான வடக்கு - கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் பிரதிநிதிகள் சாட்சியமளித்தனர். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் மற்றும் பௌத்தம் ஆகிய மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மதகுருமார் சாட்சியமளித்தனர். இதன்போது, தேரர் ஒருவர் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் சாட்சியமளித்தார்.

அந்த வகையில், நல்லிணத்துக்கான வடக்கு - கிழக்கு சர்வமத ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தமது சாட்சியங்களில் முன்வைத்த பரிந்துரைகள் வருமாறு:-

### சர்வமதக் குழுக்கள்

பல்வேறுபட்ட சமயப் போதனைகளால் அடித்தளமிடப்பட்டு பலப்படுத்தப்பட்ட ஆன்மிக அம்சங்களும், பொதுவான மனித விழுமியங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் ஏற்படுத்தும் வளமான விடயங்களாக ஏற்கப்பட்டு ஊக்கப்படுத்தப்படல் வேண்டும். அந்த வகையில், சர்வமதக் குழுக்கள் உருவாக்கப்படுவதுடன், இக்குழுக்கள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கும் மீள்குடியேற்றக் கிராமங்களுக்கும் விஜயம் செய்வதற்கு ஒத்துழைப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

மேலும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கின்ற பிரதேசங்களுக்கு கிரமமான முறையில் இந்தக் குழுக்கள் சென்று பார்வையிடுவதற்கும், அம் மக்களுக்கு மன ஆறுதலை பெற்றுக்கொடுக்க ஆலோசனைகளை வழங்கவும் அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

### சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடக் கூடாது

சுதந்திரம் கிடைக்கப்பெற்ற காலத்திலிருந்து பிரிவினைவாத சக்திகள் இந்நாட்டு மக்களை இன ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் பிளவுபடுத்துவதற்கு தத்தமது வழிகளில் செயற்பட்டுவந்தன. இந்நிலையில், இலங்கையானது முரண்பாட்டுக்குப் பலியான ஒரு நாடாகும். எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தற்போது எமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நாங்கள் தவறவிடக் கூடாது. இதற்கு தேசிய நல்லிணக்கமானது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

### மூன்று முக்கிய குழுக்கள்

மக்கள் குழுக்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது குறுகிய காலத்தில் செய்யப்படுவது கடினமாகும். எனவே, நல்லிணக்கமானது நீண்டகால அடிப்படையிலான மீள்கட்டமைத்தல் செயல்முறையின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், சமூக ஒருமைப்பாடு உடைந்துபோகாமல் பாதுகாக்கப்படவும் நாட்டில் நிறுவன ரீதியான ஏற்பாடுகள் அவசியம். எனவே, தேசிய மனச்சாட்சிக் குழு, நல்லிணத்துக்கும் சமாதானத்துக்குமான குழு மற்றும் சமூகத்தை செயற்பாட்டுக்கு இட்டுச்செல்லும் குழு என முக்கிய மூன்று குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்கின்றோம்.

### சமயத் தலைவர்கள் முன்மாதிரியாக செயற்பட வேண்டும்

சமயத் தலைவர்கள் சமூகத்துக்கு முன்மாதிரியாக மாறவேண்டும். நேர்மைக்காக முன்னின்று செயற்படுபவர்களாக இருக்வேண்டும். தமது மனிதநேய சேவைகள், சமூக மாற்றத்தை சாதித்தல் என்பவற்றின் அடிப்படையில் அவர்கள் சமூகத்தில் பெற்றுக்கொண்ட அங்கீகாரத்தின் மூலமாக சமூகத்தில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் உருவாக்குபவர்களாக இருக்கவேண்டும்.

### தவறிவிட்டது

நூற்றாண்டு கால ஆன்மிகப் பாரம்பரியங்களையும், சமாதானமாக வாழ்வதற்கு மனித குலத்திற்கு சமயங்களின் வழிகாட்டல்களும் இருந்துள்ளபோதிலும், நமது நாடு ஒட்டுமொத்தமாகவே சமூக ஒற்றுமையின் உடைவைத் தடுத்து நிறுத்துவதற்கும் தவிர்ப்பதற்கும் அவசியமான ஆன்மிக பெறுமானங்களில் இருந்து பயன்பாட்டைப் பெறத் தவறிவிட்டது.

இக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிட்ட பங்கு சமயத் தலைவர்களுக்கும் உள்ளது என்பதுதான் இதுவரையில் நாம் கற்றுக்கொண்டுள்ள பெரிய படிப்பினையாகும்.

இந்நாட்டினை மீளக் கட்டியெழுப்புவதற்காக பகையினால் பிளவுபட்டுக் கிடக்கும் சமூகங்களை ஒன்றுபடுத்தும் நோக்குடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நீண்ட செயல்முறையில் ஒரு சிறந்த வாகனமாக சமயத் தலைவர்கள் நிச்சயம் மாற முடியும் என்ற எமது சிந்தனைகளைத் தான் நாங்கள் இங்கு முன்வைத்துள்ளோம்.

---

**வீதி போக்குவரத்து** (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் போதும் பாடசாலையை விட்டு வரும் போதும் போக்குவரத்து விதிகளை முற்றாகப் புறக்கணித்து துவிச்சக்கர வண்டிகளில் சகாக்களுடன் சமாந்தரமாகச் செல்லுதல் , போக்குவரத்து அடிப்படை ஒழுங்கு விதிகளை அனுசரிக்காது விடுதல் போன்ற தவறுகளைச் செய்கின்றனர்.

குடிபோதையில் வாகனங்களை அதிவேகமாகச் செலுத்துதல் , சன நடமாட்டமுள்ள யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வேகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கத் தவறுதல் மற்றும் முக்கிய சந்திகளில் வேகத்தைக் குறைக்கத் தவறுதல் முதலான அடிப்படை ஒழுங்கு விதிகளைச் சாரதிகள் மீறிச் செயற்படுகின்றனர். இவை விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதற்கு ஏதுவாய் அமைந்துள்ளன.

எனவே இதனைத் தடுப்பதற்கு போக்குவரத்து விதிகளை அநுசரித்துப் போகுமாறு பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் வாகனச் சாரதிகளை கேட்டுக் கொள்வதுடன் போக்குவரத்து விதிகளை மீறுவோர் உடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவர் எனவும் அவர் விடுத்துள்ள பொது அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

---

**மே மாதம்** (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டிருந்தது. அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் நாடு முழுவதிலும் ஒரே தடவையில் நடத்தப்படவுள்ளமை விசேட அம்சமாகும் என்று அண்மையில் அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார். உள்ளூராட்சின்ற திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் புதிய தொகுதிகளை மீள்நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் உள்ளூராட்சிமன்ற தேர்தலின் பின்னரே வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தலும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும் ஒரே தடவையில் நடத்தப்படும் சாத்தியமும் இருப்பதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைய நிலைமையில் கிழக்கு மாகாண சபை இயங்கி வருகின்ற நிலையில் வடக்கு மாகாண சபை இயங்குவதற்கும் அப்பகுதி மக்கள் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுதிக்கொடுக்கப் படவேண்டும் என்றும் அந்த அமைச்சா குறிப்பிட்டிருந்தார்.

---

**அமெரிக்க தூதுவர்** (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். விக்கிலீக்ஸ் இணையதளம் நேற்று முன்தினம் வெளியிட்ட இரகசிய ஆவணங்களில் இந்த ஆவணமும் உள்ளடங்கியிருந்தது. அத்துடன் போர்க்குற்றம் இழைத்ததாக குற்றம் சாட்டப்பட்ட அரசு பதவியில் இருக்கும் வேளையில் தன் மீதான குற்றச்சாட்டுக்களை தானே விசாரிப்பதாக ஆணைக்குழுக்களை நியமித்தலும் தனக்குக் கீழ் இருக்கும் இராணுவத்தினர் செய்த குற்றங்கள் தொடர்பில் தான் மட்டுமே விசாரிக்க வேண்டும் என்று அடாத்தாக நிற்பதும் கேலிக்கூத்துக்களை ஒத்த விடயங்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

மேலும் இது போன்ற சம்பவங்கள் உலகில் வேறெங்கும் நடைபெற்றதில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். இந்த தகவல் படிவம் இவ்வாண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் இதுவரை இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை வேண்டும் என்பதாக அமெரிக்க அரசாங்கம் எதுவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**ஒக்ஸ்போர்ட் உரை** (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. பாதுகாப்பு காரணங்கள் காரணமாகவே இந்த உரை ரத்துச் செய்யப்பட்டதாக பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் யூனியன் தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலை புலிகளின் ஆதரவாளர்களின் அழுத்தம் காரணமாகவே ஒக்ஸ்போர்ட் யூனியன் இந்த உரையை ரத்துச் செய்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க கூறியதாக ஏ.எப்.பி. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமை கவலையளிக்கின்றது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் எதிர்காலம் தொடர்பான எனது எண்ணங்களை வெளியிடுவதற்கான இடம் ஒன்றை பிரிட்டனிலோ அல்லது வேறு எங்கோ தொடர்ந்து தேடுவேன் என குறிப்பிட்டதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே இந்த நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டமை ஒக்ஸ்போர்ட் யூனியனின் ஒருதலைப்பட்ச முடிவாகும். விடுதலை புலிகளின் அழுத்தம் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இத் தீர்மானம் குறித்து ஒக்ஸ்போர்ட் யூனியன் விடுத்துள்ள அறிக்கையில், இந்த முடிவை தாங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை என்றும் இந்த நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டமை குறித்து ஒக்ஸ்போர்ட் யூனியன் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் முக்கிய பேச்சாளர்களின் உரையை நடத்துவதையும் பேச்சு சுதந்திரத்தை நிலைநாட்டுவதையும் நீண்ட பாரம்பரியமாக தனது அமைப்பு கொண்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

---

**பாராளுமன்றத்தில்** (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜயலத் எம்.பி. யைப் பார்த்து கொட்டியா(புலி) துரோகியா (துரோகி) என்று ஆளும்கட்சி எம்.பி.க்கள் பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள் என சகலரும் உரத்த சத்தத்தில் கத்தி தீர்த்தனர்.

அல்லோல கல்லோலப்பட்ட சபையை சுமுக நிலைக்கு கொண்டு வருவதற்கு சபாநாயகரால் எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

இதற்கு மத்தியில் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்களான அனுரபிரியதர்ஷன யாப்பா, ஜகத் புஷ்பகுமார மற்றும் பிரதியமைச்சர்கள், ஆளும் கட்சி எம்.பி.க்கள் என சகலரும் சபையின் குறுக்காக பாய்ந்து சென்று ஜயலத் எம்.பியைத் தாக்குவதற்கு முயற்சித்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் சபையின் படைக்கல சேவிதர்கள் ஓடிவந்து அமைச்சர்களை பிடித்து விலக்கினர். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் ஜோன் அமரதுங்க எம்.பி.யும் கூடவே சேர்ந்து தாக்குதவதற்கு வந்த அமைச்சர்களை கடுமையாகப் போராடித் தடுத்தனர்.

ஏககாலத்தில் சபையில் கூச்சல் குழப்பம் எதிர்ப்புக்கோஷம் எழுப்பப்பட்டது. ஒருவரை ஒருவர் பிடித்து இழுத்துக் கொண்டனர். அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.யை தாக்குவதற்கு பல தடவைகளில் எத்தனித்தார். இதன் போது அவர் ஜயலத்தின் கையைப் பிடித்து இழுத்தபோது ஜயலத்தின் ஷேர்ட் அகப்பட்டதால் ஷேட்டைப்பிடித்து இழுத்துக் கத்தியவாறு கடுமையான வார்த்தைகளால் திட்டித்தீர்த்தார்.

இதே பாணியில் அமைச்சர் தினேஷ்குணவர்தன, பிரதியமைச்சர் லலித் திசாநாயக்க ஆகியோரும் ஜயலத் எம்.பி.யை தாக்குவதற்கு பாய்ந்து கொண்டிருந்தனர். அத்துடன் சபையில் எழுப்பட்ட சத்தங்களாலும், நடவடிக்கைகளாலும் சபை சண்டைக்களமாக காட்சியளித்தது மட்டுமல்லாது சுமார் 14 நிமிடங்களுக்கு அதிர்ந்து கொண்டிருந்தது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடாவின் குற்றச்சாட்டை ஜயலத் எம்.பி. நிராகரித்ததுடன் தான் அவ்வாறு நடந்து கொண்டிருந்தால் தன்மீது தாராளமாக விசாரணைகளை நடத்த முடியும் என்று தெரிவித்தார். இவ்வாறு அவர் தெரிவித்துக் கொண்டிருக்கையிலேயே அவரை தாக்குவதற்கு அமைச்சர்கள் ஓடிச் சென்றனர். எனினும் அவர் தாக்கப்படாதவாறு சேவிதர்களாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாலும் பாதுகாக்கப்பட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் யாரும் தமது ஆசனங்களில் இருக்கவில்லை. சபையின் நடுவிலேயே நின்று சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். இதில் பிரதமரும் இணைந்து கொண்டார். இந்த சந்தர்ப்பத்தில் ஜயலத் எம்.பியைப் பார்த்து ஆளும் தரப்பினர் தகாத வார்த்தைகளாலும் திட்டியதுடன் திருடன், புலி தேசத்துரோகி, காட்டிக் கொடுத்தவன் என்று பலதரப்பட்ட வசனங்களால் வசைபாடினர். வெளியில் செல்லுமாறு கேட்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா என்கிற யோகம்

உலகம் முழுவதும் இந்தியா என்றதும் நிமிர்ந்து உட்கார்ந்து வியக்கும் விஷயம் 'யோகா'. மேலைநாடுகளில் யோகா கற்றுக் கொள்வது என்பது அடிப்படைக் கல்வி போல ஆகிவிட்டது. யோகா மூலம் மனதை ஒரு முகப்படுத்தி இறைவனைக் காண முற்பட்ட யோகியரின் காலம் போய் நவீன விஞ்ஞான யுகத்தில் யோகா இன்னொரு விதமாக பயன்படுகிறது.

யாரைப் பார்த்தாலும் மன அழுத்தம், வேலைப்பளு, இரத்தக் கொதிப்பு என்று ஆளுக்குப் பல வியாதிகளைத் தங்களது தன்விவரக் குறிப்பில் பதிவு செய்து வைத்திருக்கும் அளவுக்கு இயந்திரமயமாகிவிட்ட வாழ்க்கையில் 'யோகா' மனத்திற்கு புத்துணர்ச்சியையும், உடலின் ஆரோக்கியத்தையும் பேண பெரிய அளவில் உதவுவதாக மருத்துவர்கள் கருதுகிறார்கள்.



யோகாவைப் பற்றிய தெளிவுகளை ஏற்படுத்துவது 'யோக வசிஷ்டா' என்கிற நூல். இந்த நூலில் வசிஷ்ட முனிவர் யோகாவின் முக்கியத்துவத்தையும், பிரயோகங்களையும் ராமருக்கு உபதேசிப்பதாகக் கூறப்படும் பாடங்கள்தான் யோக சாஸ்திரத்தின் அடிப்படை. பதஞ்சலி முனிவரும் யோக சாஸ்திரம் பற்றி எழுதி இருக்கிறார்.



இன்றைய சூழ்நிலையில் ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் 'யோகா' மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது என்பது மனோதத்துவ நிபுணர்களின் தேர்ந்த முடிவு. கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்டிருக்கும் வாழ்க்கை முறை மாறுதல்கள் பெண்களுடைய மனநிலையையும், உடல்நிலையையும் பெரிய அளவில் பாதித்திருக்கின்றன. கூட்டுக் குடும்பங்களில் இருந்தவரை, வீட்டு வேலைகள் அதிகம் இருந்தாலும், அசாதாரணச் சுமைகள் அவர்களுக்கு இருக்கவில்லை. மேலும், அவர்களது அன்றாட வீட்டு வேலைகளேகூட தகுந்த உடற்பயிற்சியைத் தந்து உதவின.

இப்போது நகர வாழ்க்கையும், சிறிய வீடுகளும், வீட்டைச் சுத்தம் செய்ய வேலைக்காரர்களும் என்று உடல் ரீதியான வேலைகள் குறைவு. அலுவலகம் செல்லும் பெண்கள் கார்களிலும், ஸ்கூட்டர்களிலும், பஸ்களிலும் பயணிப்பதால் உடற்பயிற்சியைவிட மனச்சோர்வும், அழுத்தமும்தான் அதிகரித்திருப்பதாக மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். அலுவலகத்தில் உழைப்பது போதாது என்று வீட்டிற்கு வந்தாலும் அன்றாட சமையல் வேலைகள், குடும்பப் பொறுப்பு என்று அவர்கள் ஏராளமான மன அழுத்தத்துக்கு ஆளாக நேரிடுகிறது.

முன் எப்போதும் இல்லாத அளவில் பெண்களும் குடும்ப வரவு செலவுகள், பொருளாதாரப் பிரச்சினைகள் என்று தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் நிலையில், துரித உணவுகள், அதிகமாக கோப்பி, தேநீர் குடிப்பது என்று உடல்நிலையைப் பாதிக்கும் விஷயங்களும் சேர்ந்து கொள்கின்றன.

இந்த நிலையில், பெண்கள் யோகா கற்றுக் கொண்டு, ஒரு சில குறிப்பிட்ட ஆசனங்களைத் தொடர்ந்து செய்து வருவதன் மூலம், தங்களது மன அழுத்தத்தைக் குறைத்துக் கொள்வதுடன் உடல் வனப்பையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதைப் பல வல்லுநர்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

உணவுக் கட்டுப்பாடு, தவறாமல் யோகா என்று வகுத்துக் கொண்டால், இடுப்பு, அடிவயிறு, தொடைகள் போன்ற பாகங்களில் அளவுக்கு அதிகமான கொழுப்புச் சேர்வது தடுக்கப்படுகிறது. கால்கள் மற்றும் கைகள் தங்களது இயல்பான நிலையைத் தக்கவைத்துக் கொள்வதுடன், வயிற்றில் சதை போடாமல் இருக்கவும் சில ஆசனங்கள் உதவுகின்றன.

ஓய்வே எடுக்காமல், எப்போதும் டென்ஷனாகவே இருக்கும் பெண்களின் கண்களைச் சுற்றிக் கருவளையம் விழுவது, அளவுக்கு அதிகமான பருமனாகி விடுவது, என்று அழகிழந்து காணப்படுவர். யோகா முறையாகக் கற்று, தொடர்ந்து ஆசனங்களை தினசரி அரை மணி நேரம் செய்து வந்தால் பெண்கள் 60 வயதிலும் கூட இளமையாகக் காட்சி அளிப்பார்கள். இதற்குக் கண்கூடான உதாரணம் இந்தி நடிகை ரேகா..!

மகப்பேறு நேரத்திலும், மாதவிடாய் நாட்களிலும் தவிர, பெண்கள் 'யோகா' செய்வதற்கு எந்தவிதத் தடையும் கிடையாது. யோகா செய்து பாருங்கள், அழகும் பூரிப்பும் இளமையும் ஊற்றெடுப்பதுபோல மீண்டும் வந்துவிடும்!

## யாழ்ப்பாண சமையல்

### வெண்டிக்காய் பொரித்த குழம்பு



**தேவையான பொருட்கள்**

கழுவி ஒரு அங்குல நீளத்திற்கு வெட்டிய வெண்டிக்காய் - 10 அல்லது 12 காய்கள், உரித்து கழுவி வெட்டிய சின்ன வெங்காயம், ஒரு கைப்பிடிகருவேப்பிலை, கழுவி வெட்டிய பச்சை மிளகாய் - 4 அல்லது 5, உடைத்து, சிறிதாக வெட்டிய உள்ளி - 10 பல், வெந்தயம் - ஒரு கைப்பிடி, பெருஞ்சீரகம் - தாளிப்பதற்கு சிறிதளவு, கடுகு - தாளிப்பதற்கு சிறிதளவு, தேங்காய் - பாதி ( முதல் பால் , இரண்டாம் பால் ஆகியவற்றை பிழிந்து எடுத்து வைக்கவும்), புளி - ஒரு பாக்கு அளவு ( மூன்றாம் தேங்காய்ப்பாலில் கரைத்து வைத்துக் கொள்ளவும்), கருவேப்பிலை - தேவையான அளவு, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு, மிளகாய்த் தூள் - காரத்திற்கு ஏற்ற அளவு

**செய்முறை**

01) தாச்சியை அடுப்பில் வைத்து தாச்சி காய்ந்த உடன் தேவையான அளவு எண்ணெய்விட்டு, வெட்டிய வெண்டிக்காய்த் துண்டுகளைப் போட்டு சிவக்க பொரித்து எடுக்கவும்.

02) இன்னொரு தாச்சியை அடுப்பில் வைத்து தாச்சி காய்ந்த உடன் சிறிதளவு எண்ணெய்விட்டு உரித்து, கழுவி வெட்டிய சின்ன வெங்காயம், கழுவி வெட்டிய பச்சை மிளகாய், உடைத்து சிறிதாக வெட்டிய உள்ளி, கருவேப்பிலை ஆகியவற்றைப்போட்டு நன்றாக வதக்கவும்.

03) அதன்பின்னர் சிறிதளவு பெருஞ்சீரகம், சிறிதளவு கடுகு, ஒரு கைப்பிடி வெந்தயம் ஆகியவற்றைப்போட்டு தாளிக்கவும்.

04) பொரித்த வெண்டிக்காய்த் துண்டுகளைப்போட்டு மூன்றாம் பாலில் கரைத்த புளிக்கரைசல், இரண்டாம் பால், தேவையான அளவு உப்பு, தேவையான அளவு மிளகாய்த்தூள் ஆகியவற்றைப்போட்டு மூடிக் கொதிக்கவிடவும்.

05) பின்னர் முதல் பாலை விட்டு குழம்பு நன்றாக கொதித்ததும் இறக்குங்கள்.

06) சூடான, சுவையான வெண்டிக்காய்க் குழம்பு தயார்!

### கத்தரிக்காய் பாற்கறி



**தேவையான பொருட்கள்**

கத்தரிக்காய் - 250 கிராம், தேங்காய் பால் - ஒரு கப் முதற்பால் மற்றும் இரண்டாம், மூன்றாம் பால், சிறிய வெங்காயம் - சிறிதளவு பச்சை மிளகாய் - 2/3, தேசிக்காய் - பாதி, உப்பு - தேவையான அளவு

**தாழிப்பதற்குத் தேவையான பொருட்கள்**

எண்ணெய், கடுகு, பெருஞ்சீரகம், செத்தல் மிளகாய், சிறிய வெங்காயம், கறிவேப்பிலை.

**செய்முறை**

1. உரித்து, கழுவி, நீளவாக்கில் வெட்டிய சிறிதளவு சிறிய வெங்காயம் மற்றும் நீளவாக்கில் வெட்டிய 2/3 பச்சை மிளகாய்த் துண்டுகள் ஆகியவற்றை கத்தரிக்காயுடன் சேர்த்து நன்கு கழுவி மண் சட்டியில் போடவும்.
2. இரண்டாம், மூன்றாம் தேங்காய் பால் மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றைச் சேர்த்து அவிய விடவும்.
4. கத்தரிக்காய் நன்கு அவிந்ததும் முதற்பால் சேர்த்து கொதிக்க விடவும்.
5. பாதி தேசிக்காய்ப் புளி சேர்க்கவும்.
6. இறுதியாக தாழிதத்தை கத்தரிக்காய் பாற்கறியுடன் சேர்த்துப் பிரட்டவும்.
7. சுவையான கத்தரிக்காய் பாற்கறி தயார்!

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு



யாழ்.ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் என்..சுப்பிரமணியத்தின் பிரியாவிடை நிகழ்வு புதிய அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரனின் வரவேற்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றபோது அதிபர்களுடன் விருந்தினர்கள் நிற்பதை படத்தில் காணலாம். (படம் ஏழாலை நிருபர்)



யாழ்ப்பாணம் புல்லுக்குளத்தில் பரவியுள்ள சல்பினியா தாவரத்தை மாநகர சபையால் அகற்றப்பட்டு வருவதை படத்தில் காணலாம்.



கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் (டெனிஸ்) கண்ணிவெடி அகற்றும் ஊழியர் ஒருவர் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.



கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், புதிய பார்வையாளர் அரங்கு ஒன்றை அமைப்பது தொடர்பாக பார்வையிடுவதையும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கே.சதாசிவம் கல்லூரி அதிபர் பி.சிவானந்தராசா ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம் வட்டுக்கோட்டை நிருபர்)



கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் அண்மையில் சமாதான நீதவான்களாகச் சத்தியப் பிரமானம் செய்து கொண்ட உறுப்பினர்கள் சபையின் தவிசாளர் இ.மயில்வாகனம் சகிதம் நிற்பதை படத்தில் காணலாம். (படம் நல்லூர் நிருபர்)



பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் இந்து நாதம் நூல் வெளியீட்டு விழாவின் போது இடம்பெற்ற கலைநிகழ்வொன்றை படத்தில் காணலாம். (தெல்லிப்பழை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## கூடி வாழ வேண்டும்



ஒரு மிருகத்தை வேட்டையாடிய இரண்டு சிங்கங்கள் அதன் இறைச்சிக்காக அடித்துக் கொண்டன. இரண்டும் சமபலம் பெற்றதால் தொடர்ந்தும் போராடின.

கிடைத்த உணவை சமமாகப் பங்கிட்டு உண்ணவும் அவை விரும்பவில்லை. எனவே இரண்டும் போராடிக் களைத்தன. எதிரில் கிடந்த இறைச்சி அருகே கூட நடந்து செல்ல முடியாத அளவிற்கு இரண்டும் களைப்படைந்தன.

அதற்குமேல் அவைகளால் போராடவும் முடியவில்லை. பசியின் களைப்பினாலும் அவை சோர்ந்து போயின. அந்த நேரத்தில் அங்கு நரி ஒன்று வந்தது. இரண்டும் சிங்கங்களும் கிடைத்த இறைச்சிக்காகப் போராடிச் சோர்ந்து படுத்துக் கிடப்பதை அறிந்த தந்திரமான நரி . இவை இரண்டும் இப்போதைக்கு எழுந்து வரமுடியாது என்பதைப் புரிந்து கொண்டது.

நரி மெல்ல இறைச்சி கிடந்த இடத்திற்குச் சென்றது. இரண்டு சிங்கங்களிடம் இருந்து எதிர்ப்புக் குரல் வருகிறதா எனப் பார்த்தது. பாவம் சிங்கங்கள் போட்ட சண்டையில் கர்ஜிக்கவும் பலமின்றிச் சோர்ந்து போய் இருந்தன. சரி நமக்கு இதுதான் நல்ல சமயம் என நினைத்தது நரியார். சிங்கங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பாய்ந்து சென்று இறைச்சியைக் கவ்விக் கொண்டு சென்றது.

நரி இறைச்சியைத் தூக்கிச் செல்வதை வேடிக்கைதான் பார்க்க முடிந்ததே தவிர இரண்டு சிங்கங்களாலும் எழுந்து சென்று தங்களது இரையைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

கூடி வாழ்ந்து உள்ளக் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். அதை மறந்து பகைமை கொண்டாடினால் மூன்றாவது ஆள் உள்ளே நுழைந்து அனைத்தையும் கெடுத்து விடுவான். எதிராளிக்கு என்றும் எளிதில் இடம் கொடுத்து விடாதீர்கள்.



நாம் தற்போது காது என்று அழைப்பது, உண்மையில் காதே கிடையாது. அதன் பெயர் காது மடல்'. காது என்பது நம்முடைய தலைக்குள் உள்ளது. நாம் தெளிவாகக் கேட்பதற்காக ஒலி அலைகளை காதுக்குச் செலுத்தும் அமைப்பு தான் இந்தக் காதுமடல். இது முயலுக்கு மட்டும் பெரியதாக இருப்பதற்கு காரணம் என்ன?

முயலுக்கு நிறைய எதிரிகள் உண்டு. அவைகளிடமிருந்து தப்பிக்கப் பெரும் உதவியாக இருப்பது இந்தக் காது மடல்கள்தான். மிகச்சிறிய ஒலியைக் கூட துல்லியமாகக் கேட்பதற்கு உதவும் இவைதான் ராடர் கருவியின் பெரிய கிண்ண அமைப்புப் போல உள்ளது. இதன் மூலம், மிகத்துல்லியமான ஒலியையும் முயலால் அறிந்து கொள்ள முடிகிறது.



- தலை இல்லாவிட்டாலும் கரப்பான் பூச்சி 9 நாட்கள் வரை உயிரோடு இருக்கும்.
- திமிங்கலத்தின் இதயத்துடிப்பு ஒரு நிமிடத்துக்கு 9 முறை.
- தேனீக்கு இரண்டு இரப்பைகள் உண்டு.
- கல்லீரலுக்கு ஒரு நிமிடத்துக்கு செல்லும் இரத்தத்தின் அளவு 14.50 மி.லீ.



வெட்டுக்கிளிகள் எந்த சூழ்நிலையிலும் வாழக்கூடிய பூச்சிகள். பூச்சியின் உருவம் 12 செ.மீ வரை நீளம் இருக்கும். அகன்ற தலையில் இரண்டு உணர்வு கொம்புகள் உண்டு. வாயில் உறுதியான இரு உதடுகளும் கடிக்கும் தாடையும் உண்டு. வாயிலுள்ள நுண்ணிய மொட்டுகள் ருசியை உணர்கின்றன. பார்ப்பதற்குப் பயன்படும் இருகூட்டுக் கண்களும் ஒளியை உணரும் மூன்று சாதாரண கண்களும் உண்டு. ஆறு கால்கள் உண்டு. பறப்பதற்கு இரு பின்பக்க இறகுகளை இரு கடினமான இறகுகள் மூடியிருக்கும். சில வெட்டுக்கிளிகளுக்கு இறகுகள் இல்லை.



வீனஸ்கோள் தான் கோள்களிலேயே சூடானது. ஈயத்தை கூட உருக்கிவிடும் இதன் வானம் பிரகாசாமான செம்மஞ்சள் வண்ணத்துடனும் மின்னல் கீற்றுகள் தோன்றியபடியும் இருக்கும் பூமி 24 மணி நேரத்திற்கு ஒரு முறை சுழலும் ஆனால் வீனஸ் ஒரு முறை சுழல 244 நாட்கள் ஆகும்.



சா.துஷ்ஜா தரம் 8E
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்



இந்தப் படத்திற்க அழகாக வண்ணம்தீட்டி எமக்கு அனுப்பிவையுங்கள்.



யோ.சசிந்தன் தரம் A/L (2012)
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி



பி.சியான் விதசன் தரம் - 5
யா/இளாலை றோ.க.த ஆண்கள் பாடசாலை

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலர் காட்டிய பாதையிற் சென்று சைவ, தமிழ்ப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கவேண்டும்

## தமிழ்த்துறை பேராசிரியர் சி. சிவலிங்கராஜா

(வட்டுக்கோட்டை நிருபர்)

"19 ஆம் நூற்றாண்டில் சைவத் தமிழ் மக்களின் விடிவெள்ளியாக அவதரித்த ஆறுமுகநாவலர் காட்டிய பாதையில் சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இன்று கை கழுவும் தினம் கொண்டாடுகிறோம். நாவலர் பெருமான் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே ஒரு மனிதன் காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குப் போகும்வரை கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்களை அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்".

இவ்வாறு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்த கொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தெரிவித்தார்.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்விலேயே பேராசிரியர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:

கிறிஸ்தவ பரம்பலுக்கு எதிராக சைவச் சூழலில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்திய நாவலர் பெருமான், சைவத்தையும் தமிழையும் காக்க அரும்பாடுபட்டார். கல்வியழகுந் தெய்வ நெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத் துடித்தவர் நாவலர் பெருமான்.

வசதியான உத்தியோகத்தைப் பெறும் வாய்ப்பிருந்தும் அதனை அவர் விரும்பவில்லை. இல்வாழ்வில் புகவில்லை. காரணம் சைவத்தையும் அதற்குக் காரணமாகஅமைந்த கல்வியையும் வளர்க்க வேண்டுமென்ற பேராவவாகும்.

முன்னிருந்த நாயன்மார் தாம் சென்ற தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். நாவலரோ தான் சென்ற இடமெல்லாம் பிரசங்கங்களைச் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தின் சிறப்பு நோக்கி தமிழ் நாடு திருவாவடுதுறை ஆதீனம் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. நாவலர் அவர்கள் கண்டனப் பிரசங்கம் செய்வதிலும் வல்லவராக விளங்கினார்.

எமது நாட்டுக்கே தனித்துவமான புராண படன முறையின் மூலம் முதியோருக்குக் கல்வியையும் இளையோருக்குச் சமயப் பற்றையும் ஊட்டினார். சைவத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டார்.

நெற்றியிலே நீறு பூசவும் வாழையிலையிலே அமுதுண்ணவும் கூட நம்மவர்கள் அஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த அவலங்கள் நீங்கவும் ஞானப் பிரகாசர் போன்றோரின் பிரார்த்தனைகள் பலிக்கவும் நாவலர் எழுந்தார்.

நாவலர் பெருமான் காட்டிய வழியில் சைவத்தையும் தமிழையும் நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

துர்க்காதேவி தேவஸ்தான இணைச் செயலாளர் நா. தவநாதன், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி பூ. செல்வவதியம்மா உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெற்றது.

# யாழில் சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினக் கொண்டாட்டம்

(அலுவலக நிருபர்)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. இன்று 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் மாற்றுவலுவுள்ளோரை வலுவூட்டல் எனும் தலைப்பில் ஜெய்ப்பூர் நிறுவன பயனாளி ஒருவர் உரையாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து மாற்றுவலுவுள்ளோரின் நடன நிகழ்வும் ஜெய்ப்பூர் நிறுவனத் தயாரிப்புக்களின் கண்காட்சியும் விழிப்புணர்வு குறுந் திரைப் படக் காட்சியும் மேலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# குடிதண்ணீர் வழங்குமாறு சங்குவேலி மக்கள் கோரிக்கை

மானிப்பாய்

தமது பகுதிக்கும் குடிநீரினை வாங்குமாறு சங்குவேலி கிராம மக்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரிடம் கேட்டுள்ளனர்.

சுன்னாகம் பிரதேச சபைக்குட்பட்ட சங்குவேலி கிராம மக்கள் தமக்கான குடிநீரினைப் பெற பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் மழை காலங்களில் தமது பகுதிகளில் சுத்தமான நீரினைப்பெறுவது மிகவும் அரிதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் சுன்னாக நகரப் பகுதிகளுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவ் விநியோகத்தினைத் தமது சங்குவேலிப் பகுதி வரையும் நீடித்து வழங்குமாறு மக்கள் வேண்டியுள்ளனர்.

அடிப்படை வசதிகளில் ஒன்றான குடிநீரினைப் பெறவே நாம் பல்வேறு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருவது மிகவும் வேதனையைத் தருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாயில் வயல் கிணறுகள் புனரமைப்பு

மானிப்பாய்

TRRO நிறுவனத்தினால் விவசாயிக ளின் நன்மை கருதி விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட விவசாயிகளின் விவசாயத் தேவைகளுக்குப் பயன்படும் விவசாயக் கிணறுகள் பலவும் பாழடைந்த நிலை யில் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் விவசாயிகள் தமது விவசாயச் செய்கைக்கு வேண்டிய நீரினைப் பெற பாரிய சிரமங்களை அநுபவித்து வருகின் றனர். மழை நேரங்களில் வயல்களில் வெள்ளம் நிற்பதால் ஒழுங்கான கட்டுகள் அற்ற இக் கிணறுகள் அடையாளம் தெரி யாமல் காணப்படுகின்றன.

இதனால் மழை நேரங்களில் இக் கிண றுகளால் பாரிய ஆபத்தும் காணப்படுகி றது.

இதனை அவதானித்த மேற்படி நிறுவ னத்தினர் விவசாயிகளுக்கு உதவும் நோக் குடன் இவ்வாறு பாழடைந்து காணப் பட்ட 68 விவசாயக் கிணறுகளைத் தெரிவு செய்து புனரமைப்புச் செய்து வரு கின்றனர். விரைவில் இப் புனரமைப்பு வேலைகள் முடிக்கப்பட்டு விவசாயிகளி டம் கிணறுகள் கையளிக்கப்படவுள்ளன.

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு

கைதடி

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உத விப் பணம் கோரிக் காத்திருந்தோர் 27 பேருக்கு ஒரு வருடக் கொடுப்பனவு இம் மாதம் வழங்கப்படுகின்றது.

குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்ப ரூபா ஆயிரத்து 200 முதல் 3 ஆயிரத்து 600 ரூபா வரையிலான தொகை வழங்கப் பட்டு வருகிறது.

நிதியை வட மாகாண சமூக சேவை கள் திணைக்களம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 10 ஆம் திகதி வரை தபால கங்களில், உப தபாலகங்களில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய் உதவிப் பணம் என்பவை வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.


வருட இறுதிக் கணக்கு வைப்பை நிறைவு செய்யும் பொருட்டு வருடாந்தம் இவ்வாறு வழங்கப்படுவது வழக்கமான தாகும்.

# இராமாவில் நலன்புரிநிலையப் பாடசாலையை வடமராட்சிக் கல்வி வலயம் பொறுப்பேற்பு

பளை

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையப் பாடசாலையை வடமராட்சிக் கல்வி வலயம் பொறுப்பேற்றுள்ளது. இது வரை காலமும் இப்பாடசாலை தென்ம ராட்சி வலயத்தின் கீழ் இயங்கிவந்தது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலா ளர் இ.இளங்கோவின் அறிவுறுத்தலுக் கமைய இப்பாடசாலையை வடமராட் சிக் கல்வி வலயம் பொறுப்பேற்றுள்ளது.

இப்பாடசாலையில் தரம்1 தொடக்கம் தரம் 11 வரையிலுள்ள வகுப்புக்களில் 273 மாணவர்கள் கல்விகற்று வருகின்றார் கள். இம்மாணவர்களில் 254 பேர் வடம ராச்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, போக்கறுப்பு, கேவில் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். அப் பகுதிகளில் மக்கள் இதுவரை மீளக்குடிய மர்த்தப்படாததனால் இம்மாணவர்கள் தமது பெற்றோர்களுடன் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளார்கள். ஏனைய 19 மாணவர்கள் வெளிமாவட் டங்களைச் சேர்ந்தவர்கள். இப்பாடசாலை யின் புதிய அதிபராக வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ரி.செல்வகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.



450 மில்லியன் ரூபா செலவில் இருவழிப்பாதையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொன்னாலைப் பால வீதியை படத்தில் காணலாம். (படம் வட்டுக்கோட்டை)




# டெங்குக் கட்டுப்பாட்டிற்கு ஒத்துழைக்காதவர்கள் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாண நிருபர்

அடைமழையைத் தொடர்ந்து வலி. தென்மேற்கு பிரதேசத்தில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் உற் பத்தியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வரும் சண்டிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பொலிஸாருடன் இணைந்து வீடுவீடாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டனர்.

இதன்போது இருபதிற்கும் அதிகமான வீடுகளில் நுளம்புக் குடம்பிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து இவர்கள் மீது டெங்கு நோய் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

குடா நாட்டில் தீவிரமாகப் பரவி வந்த டெங்கு நோய், சம்பந்தப்பட்ட அதிகாரி கள் எடுத்துக்கொண்ட முயற்சியினால் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட் டுள்ள போதிலும் பருவ மழையைத் தொடர்ந்து மீண்டும் டெங்கு பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் நுளம்பின் உற்பத்தியை தடுக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ள சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் பொலி ஸாருடன் இணைந்து சுதுமலை, ஆனைக் கோட்டை ஆகிய இடங்கிளில் உள்ள வீடுகளிற்குச் சென்று சோதனை நடத் திய போது இருபதுக்கும் அதிகமான வீடு களில் மழை நீர் தேங்கி நின்றதால் நுளம் புக் குடம்பிகள் உற்பத்தியாகி உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து இவர்கள் மீது மல்லாகம் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

# சண்டிப்பாயில் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை அமைக்க காணி அன்பளிப்பு

யாழ்ப்பாண நிருபர்

சண்லிப்பாய் பிரதேச சுகாதார வைத் திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கட் டடம் அமைப்பதற்கு சமூக சேவையாளர் ஒருவர் 4 பரப்புக் காணியை அன்பளிப் பாக வழங்க முன்வந்துள்ளார். இக் காணியை நேரில் சென்று பார்வையிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து இக் காணி அப்பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார சேவையை மக்கள் மத்தியில் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சுகாதார வைத்திய அதி காரி பணிமனை நிறுவப்பட்டுச் செயற் பட்டு வருகிறது. சில பணிமனைகள் சொந்தக் கட்டடங்களிலும் சில பணி மனைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தற்பொழுது மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. இப்பணிமனைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு நவாலியைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஒருவர் டச்சு வீதியில் உள்ள 4 பரப்புக்காணியை அன் பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக்காணியைச் சம்மந்தப்பட்ட அதி காரிகள் நேரில் சென்று பார்வையிட் டதைத் தொடர்ந்து, இப்பகுதி மக்களால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட் டுள்ளது.

## கட்டிடம் இராணுவத்தால் கையளிப்பு

கைதடி

கைதடி மத்தி குமரன் நகர் உதயசூரியன் சனசமூகக் கட்டிடத்தில் நிலை கொண்டி ருந்த இராணுவத்தினர் அண்மையில் வெளியேறியுள்ளனர். இராணுவத்தினர் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இங்கு நிலைகொண்டிருந்து கைதடி மத் தி, கைதடி வடக்கு, கைதடி கிழக்கு ஆகிய பிரதேசங்களின் பாதுகாப்பு மேற் பார்வைப் பணிகளைச் செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தை சுற்றயல் கூறு மருத்துவமனையாகத் தரமுயர்த்துமாறு மக்கள் கோரிக்கை

கைதடி

கைதடி ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு நிலையத்தை சுற்றயல் கூறு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துமாறு இப்பகுதிப் பொது அமைப்புக்கள் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சாவகச்சேரி - யாழ்ப்பாணம் நகர்களுக்கிடையிலான 16 கிலோ மீற்றர் தூரத்திற்கிடையில் விடுதி வசதியுள்ள எந்தவொரு அரச மருத்துவமனையும் இல்லை. கைதடி, நாவற்குளி, நுணாவில் பிரதேங்களிலுள்ள 14 கிராம அலுவலர் பிரிவு மக்களும் விடுதி வசதியுள்ள அரச மருத்துவமனை இல்லாமல் சிரமப்படுகின்றனர்.

விடுதி வசதியுள்ள அரச மருத்துவமனையைத் திறப்பதற்கு போதுமான சனத்தொகை இப்பிரதேசங்களில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கென வதிவிட மருத்துவ அதிகாரி இல்லாத நிலை உள்ளது. கைதடி ஆரம்ப மருத்துவப் பிரிவு அதிகாரி பி. அருள்நேசனே பகல் வேளைகளில் முதியோர்களுக்குத் தேவையான மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றார்.

இரவு வேளைகளில் முதியோர் நோய்வாய்ப்படும்போது மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு யாழ். போதனா வைத்தியசாலை அல்லது சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. வட மாகாண உள்ளூராட்சி, சமூக சேவைகள் அமைச்சின் அலுவலகங்கள் யாவும் இவ் வைத்தியசாலையின் அருகாமைக் கட்டிடங்களில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவ் அலுவலகங்களில் பணியாற்றவுள்ள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்களும் அவசர வைத்தியசேவைக்கு நீண்ட தூரம் செல்லும் நிலைமை ஏற்படவுள்ளது.

கைதடி ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவினை விடுதி வசதியுள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுமிடத்து இப் பிரதேச மக்கள் அனைவருக்கும் சிறந்த வைத்திய சேவை கிடைக்கும் நிலை ஏற்படும்.

போக்குவரத்து வசதியுள்ள இப் பிரதேசத்தின் வைத்தியசாலையில் கடமையாற்றத் தேவையான அதிகாரிகளையும் பெற்றுக் கொள்வது இலகுவாயிருக்குமென பொது அமைப்புக்கள் தமது கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளன.

## மூத்தோர் பேரவையில் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு

கைதடி

யாழ். மாவட்ட மூத்தோர் பேரவை பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்படும் முதியோரை கௌரவிக்கும் நிகழ்வை இம் மாதம் 18 ஆம் திகதி நடத்தவுள்ளது.

பிரதேசச் செயலகப் பிரிவுகளில் மிகச் சிறந்த சமூகப் பணியாற்றிய முதியோரைத் தெரிவு செய்யும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

கொக்குவில் சாந்திமாலா கட்டிடத்தில் உள்ள பேரவையின் அலுவலகத்தில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சமூக சேவை அதிகாரி உட்படப் பலர் இந் நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர்.

## கடந்த காலங்களில் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படவேண்டும்

### யாழ். மாநகர சபையில் கோரிக்கை

(நெடுந்தீவு நிருபர்)

பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டு பிணையில் செல்லவும் அனுமதியின்றி சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யுத்தம் முடிவடைந்து பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

1971 தொடக்கம் 1987 வரையான ஆண்டுகளில் பயங்கரவாத குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட ஜே.வி.பியினரை நிபந்தனையின்றி அரசு விடுதலை செய்ததுபோன்று தமிழ்க் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என இச்சபை ஜனாதிபதியையும் நீதி அமைச்சரையும் கேட்டுக் கொள்கிறது என யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாநகர சபை உறுப்பினர் ம. மங்களநேசன் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

நல்லூரில் இந்து ஹோட்டல் என்ற பெயரில் சைவ உணவு பரிமாறும் ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு மேக்கண்ட் வங்கி எடுத்துள்ள முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் சபையில் நிறைவேற்றப்பட்டது.

## மழை நீர் தேங்குவதனால் வீதிகள் பலத்த சேதம்

கைதடி

யாழ். குடாநாட்டின் புனரமைக்கப்படாத பெருந்தெருக்கள் பல அண்மையில் பெய்த கடும் மழையினால் குண்டுங் குழியுமாகச் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக யாழ். கண்டி வீதியில் கனரக வாகனங்கள், ஏனைய வாகனங்கள் தொடர்ந்து போக்குவரத்தில் ஈடுபடுவதால் வீதிகள் மிக வேகமாகச் சேதமடைகின்றன. அரியாலை தபால் கட்டைச் சந்தியிலும் கைதடிச் சந்தியிலும் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

பலாலி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, மானிப்பாய் வீதிகளும் சேதமடைந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் முன்னைய காலங்களை விட மிக அதிகளவான போக்குவரத்து இடம் பெறுவதாலும் வீதியில் நீர் பல இடங்களில் தேங்கி நிற்பதாலும் வீதிகள் பலத்த சேதமடைகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் திருத்த வேலைகள் செய்யப்பட்ட வீதிகளும் அண்மைய நாட்களில் மீளவும் சேதமடைந்துள்ளன.

வீதி ஓரங்களில் நீர் தேங்காது பாதுகாப்பதால் வீதிகள் பெரும் சேதமாவதைத் தவிர்க்க முடியும். பொது மக்களும் வீதிப் பராமரிப்பு அரச நிறுவனங்களும் இது குறித்துக் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லையெனச் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நிரந்தரக் கட்டடம் வேண்டி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

மானிப்பாய்

மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஓர் நிரந்தரக் கட்டடத்தை அமைத்துத் தருமாறு சண்டிலிப்பாய் வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் சிறந்த முறையில் தமது மகளிர் அபிவிருத்திச் சங்கம் செயற்பட்டு வருவதாகவும் இச் சங்கத்தினூடாகப் பல்வேறு உதவிகள் மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சிறப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இச் சங்கம் நீண்ட காலமாக அதற்கென ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையிலுள்ளது.

இதனால் இச் சங்கச் செயற்பாடுகளை நாளுக்கு நாள் வேறுவேறு தனியார் இடங்களுக்கு நகர்த்த வேண்டி இருப்பதனால் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதாகவும் தமது ஆவணங்கள், தளபாடங்கள் என்பவற்றை ஒழுங்கான முறையில் பராமரிக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையீடு செய்து தமக்கு ஓர் நிரந்தர கட்டிடத்தை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு சங்க நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர்.

## தேங்கியுள்ள மழை நீர்

(நெடுந்தீவு நிருபர்)

யாழ். மாநகர சபைப் பகுதியிலுள்ள கழிவு நீரை வெளியேற்றும் கால்வாய்களில் நீர் நிரம்பிக் காணப்பட்டபோதும் அது கடலுக்கு ஓடாத நிலையிலேயே கால்வாய்களில் தேங்கி நிற்கின்றன.

தற்போதைய மழை காரணமாக நகரப் பகுதியிலுள்ள சிறு குளங்கள் நீர் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் டெங்கு நுளம்புகளின் உற்பத்தியும் அதிகரிக்கலாம் எனப் பொது மக்கள் கவலையடைந்துள்ளனர்.

## சுயதொழில் முயற்சியாளர் அபிவிருத்திச் சங்கம்

மானிப்பாய்

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழிலாளர்களை ஒன்றிணைத்து சுயதொழில் முயற்சியாளர் அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிற்துறை திணைக்களத்தின் உதவியுடன் சுயதொழிலில் ஈடுபடுபவர்களின் நலன்களையும் உரிமைகளையும் பேரம் பேசலையும் பாதுகாக்கும் நோக்குடனேயே இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தினைக் கூட்டுறவுத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்வதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.



கச்சேரி சோமசுந்தரம் வீதி குறுக்கு வீதியில் கற்கள் குவிக்கப்பட்ட நிலையில் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதை படத்தில் காணலாம். (நெடுந்தீவு நிருபர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மயானத்தில் இடப்பற்றாக்குறையினால் பாதையில் சடலத்தை புதைக்க முயற்சி

## மொரதுமுள்ள பகுதியில் சம்பவம்

பதுளை,

மயான பூமியில் போதிய இடமில்லாத தால் சடலத்தை கிராம பாதை மத்தியில் புதைக்க கிராம வாசிகள் நடவடிக்கை எடுத்துள்ள சம்பவமொன்று பிபிலைப் பகுதியின் மொரதுமுள்ள கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

மொரதுமுள்ள கிராமத்தில் 500 குடும் பங்கள் வசித்து வந்த போதிலும், கிராம மயான பூமிக்கென 5 பேர்ச்சஸ் நிலப்ப ரப்பே ஒதுக்கப்பட்டுள்ளது.

இம் மயான நிலப்பரப்பில் சடலத்தை புதைக்க இடமில்லாததால், மொரது முள்ள கிராமப்பாதை மத்தியில் மேற்படி சடலத்தை புதைக்க கிராம வாசிகள் குழி யை வெட்டியுள்ளனர்.

மேற்படி கிராமத்தில் மரணமான வயோ திபப் பெண்ணொருவரின் சடலத்தைப் புதைக்கவே, கிராம வாசிகள் மேற்படி பாதை மத்தியில் இக்குழியை வெட்டி னர்,

இதையடுத்து இதுவிடயத்தை அறிந்த பிபிலை பிரதேச சபையினர் ஸ்தலத் திற்கு விரைந்து சுமூக நிலையினை ஏற்ப டுத்தி சடலத்தை ஒதுக்கப்பட்டிருந்த ஐந்து பேர்ச்சஸ் நிலப்பகுதியிலேயே புதைக்க ஏற்பாடு செய்ததுடன் மயான பூமியின் நிலப்பரப்பினை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறு தியளித்தனர்.

# ஆஜர்படுத்தவென அழைத்துச் செல்லப்பட்ட கைதி நீதிமன்ற வளவில் தப்பியோட்டம்

(பதுளை, பண்டாரவளை மேலதிக நிருபர்)

ஜீவனாம்ச வழக்கொன்றிற்கு ஆஜர் படுத்த, பொலிசாரினால் அழைத்துச் செல்லப்பட்ட கைதியொருவர், நீதி மன்ற வளவில் வைத்து தப்பியோடிய சம்பவமொன்று நேற்று முன்தினம் பண்டாரவளையில் இடம் பெற்றுள்ளது.

இந் நபர், ஏற்கனவே தொடரப்பட்ட ஜீவனாம்ச வழக்கொன்றில் குற்ற வாளியாகக் காணப்பட்டு, பதுளை சிறைச்சாலையில் சிறைவாசம் அனு பவித்து வந்த கைதியாவார்.

இந் நிலையில் பிறி தொரு ஜீவனாம்ச வழக்கொன்றிற்கு, இக் கைதி சிறைக் காவலர்களினால் பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவ் வேளையில், நீதிமன்ற வளவில் வைத்து, இக் கைதி தப்பியோடியுள்ளார்.

இக் கைதியை மீளவும் கைது செய்ய பண்டாரவளை, பதுளைப் பொலிசார் பாரிய தேடுதல் வேட்டையொன்றினை உடனடியாக ஆரம்பித்தபோதிலும் தப் பியோடிய கைதி இதுவரை கைது செய்யப்பட வில்லை.

பண்டாரவளைப் பகுதி கிராமமொன் றைச் சேர்ந்த சுசந்த செனவிரட்ன (40 வயது) என்ற நபரே, நீதிமன்ற வளவில் வைத்து தப்பியோடியவராவார்.

இது தொடர்பாக, பண்டாரவளை, பதுளைப் பொலிசார் தீவிர விசார ணைகளை மேற் கொண்டுள்ளனர்.

# பாதிக்கப்பட்ட வேவண்டன் தோட்டதொழிலாளர்களுக்கு புதிய வீடுகளை அமைக்க கடனுதவிகள் வழங்க ஏற்பாடு

கொத்மலை,

கொத்மலை வேவண்டன் தோட்ட லயன் அறைகள் சிலவற்றின் சுவர்கள் மற் றும் தரைகளில் வெடிப்புகள் தோன்றி யுள்ளதால் இடம்பெயர்ந்த குடும்பங்க ளுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொ டுக்கும் பொருட்டு தேசிய வீடமைப்பு அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன கடன் மற்றும் உதவித் தொகைகளை வழங்க முன்வந்துள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சம்பந் தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் மற்றும் உதவித் தொகைகளைப் பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதா கும்.

வேவண்டன் தோட்டத்தைச் சேர்ந்த மூன்று லயன்களின் அறைகளின் சுவர் கள் மற்றும் தரைகளில் அண்மை காலமா க வெடிப்புகள் தோன்றியுள்ளன. இத் தோட்டத்தின் சில வீதிகளிலும் வெடிப்பு கள் தோன்றியுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. வெடிப்பு நிலை காரணமாக தமது உயிருக்கும் உடைமைகளுக்கும் எந்த நேரத்திலும் பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்சத்தில் முப்பது குடும்பங் களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான வர்கள் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் வேவண்டன் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்ட தோடு இவர்களுக்கான உணவுப் பொ ருட்கள் கொத்மலை பிரதேச செயலாளர் அலுவலகத்தின் ஊடாக வழங்கப்பட் டன.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட குடும் பங்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத் துக் கொடுக்கும் பணிகளும் கடந்த கா லங்களில் முன்னெடுக்கப்பட்டன. இந்நி லையில் பாதிக்கப்பட்ட குடும்பங்க ளுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கும் முயற்சிகள் தற்போது முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தலா இருபதாயிரம் ரூபாவினை குடும்பமொன் றுக்கு உதவித் தொகையாக வழங்கி யுள்ளது. இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வேவண் டன் தோட்டத்தில் இடம்பெற்றது. மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.ரமேஷ், இ.தொ.கா.வின் உதவிச் செயலாளர் எம். எஸ்.எஸ்.செல்லமுத்து, அரச அதிபர் உள் ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு விரைவில் மேலதிக உதவி தொகை யினை வழங்க உள்ளநிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக விரைவில் ஒரு இலட்சம் ரூபாய் கடனு தவி வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதேவேளை செஞ்சிலு வைச் சங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி உடைகள் மற்றும் சமைய லறை உபகரணங்கள் என்பவற்றை வழங்கியுள்ளன. இதனடிப்படையில் விரைவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பட உள்ளதாக இ.தொ.கா.வின் உதவிச் செயலாளர் எம்.எஸ்.எஸ்.செல்லமுத்து தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க வேவண்டன் தோட்ட மலைப் பகுதியில் இருந்து கருங் கற் பாறைகள் உருண்டு வருவதன் கார ணமாகவும் மலையடிவாரத்தில் உள்ள பல குடும்பங்கள் பாதிப்பினை எதிர்நோக் கியுள்ளன. இக் குடும்பங்களும் விரை வில் தமக்கு பாதுகாப்பான இடத்தில் புதி ய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வரவு - செலவுத் திட்ட அறிக்கையின் பொது விவாதத்தில் ஆளுந்தரப்பு வெற்றி

(கண்டி - செங்கடகல)

மத்திய மாகாண சபையின் வரவு - செலவுத் திட்ட அறிக்கை தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற பொது விவாதத்தையடுத்து நடைபெற்ற வாக் கெடுப்பில் 35 மேலதிக வாக்குகளி னால் ஆளும் தரப்பு வெற்றி பெற்றது.

கடந்த 23 ஆம் திகதி முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா 2011 ஆம் ஆண்டிற் கான வரவு - செலவுத் திட்ட அறிக் கையை மத்திய மாகாண சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து இதற்கான விவாதங் கள் கடந்த முதலாம் திகதி முதல் மூன்று தினங்கள் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டது.

இதன்படி நேற்று முன்தினம் காலை சபையின் தலைவர் சாலியா திஸநாயக் கா தலைமையில் சபை கூட்டம் கூடிய போது முதலாவது பொது விவாதம் ஆரம்பமாகி மாலை வரை நடைபெற் றது.

மாலை 6 மணியளவில் பொது விவா தம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதன்போது எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத நிலையில் பொது விவாதத் திற்கு ஆதரவாக 35 அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப் பெற்று வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

# வெளிநாட்டில் தொழில் பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றிய நபருக்கு சரீரப்பிணை

செங்கடகல,

வெளிநாட்டில் தொழில் வாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி 60 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த நபர் ஒருவரை கண்டி நீதிமன்ற நீதவான் லலித் ஏக்கநாயக்க ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் ரூபா பிணை யில் செல்ல அனுமதித்தார்.

பேராதனை பொலிஸ் பிரதேசத்தில் நபர் ஒருவரை வெளிநாட்டில் தொழில் பெற்று அனுப்புவதாக கூறி தொழுவை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சுமார் 60 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றி வந்துள்ளார்.

தொழில் ஆர்வத்துடன் பணத்தைக் கொடுத்த நபர், ஒரு வருடம் கடந்தும் தொழிலும் கிட்டாது கொடுத்த பணமும் கிடைக்காமல் பணத்தைப் பெற்ற நபர் தலைமறைவாகியிருந்த நிலையில் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாட்டையடுத்து பேரா தனை பொலிசார் சந்தேகத்தின் பேரில் தொழுவ பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இதன்போது நீதவான் சந்தேக நபரை 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம்ரூபா சரீரப்பிணையிலும் செல்ல அனுமதித்து முறைப்பாட்டாள ருக்கு 25 ஆயிரம் ரூபா பணத்தை செலுத்துமாறும் மிகுதிப் பணத்தை அடுத்த வாரம் செலுத்துமாறும் உத்தர விட்டார்.

# நிதி ஒதுக்கீடு

இறத்தோட்டை,

மத்திய மாகாணத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக விவ சாய, கால்நடை மற்றும் மீன்பிடி அமைச்சு 60 இலட்சம் ரூபாவை ஒதுக்கி இருப்பதாக மத்திய மாகாண முதலமைச் சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரை நகருக்குத் தனியான கோட்டக்கல்வி அலுவலகம்

வட்டுக்கோட்டை

இதுவரை காலமும் ஊர்காவற்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த காரை நகர் பிரதேசத்துப் பாடசாலைகள் அடுத்த வருடம் முதல் தனியாக காரைநகர் கோட்டக்கல்விப் பணிமனையின் கீழ் இயங்கவுள்ளன. இதற்கு முன்னோடியாக காரைநகர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் தீவகக் கல்வி வலயத்தால் கோரப்பட்டுள்ளது.

காரைநகரில் கோட்டக்கல்விப் பணிமனை இயங்கத் தொங்கியதும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கடல் கடந்து ஊர்காவற்துறைக்குச் சென்றுவந்த மாணவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பொது மக்களின் சிரமங்கள் நீங்குமெனக் கூறப்படுகின்றது.

## தொலைக்காட்சி வசதி

ஏழாலை

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பொது மக்கள் பார்வையிடுவதற்கென தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை காத்திருக்கும் நேரத்தில் தொலைக்காட்சியினைப் பார்ப்பதற்காக அண்மையில் அங்கு தொலைக்காட்சிப் பெட்டி இணைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி பொது மக்கள் பிரதேச செயலகத்தில் காத்திருக்கும் நேரத்தில் பொழுதுபோக்கும் வசதிக்காக இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதற்கு ஆசிரியர்கள் அவர்களைச் சமய நெறியில் வழிப்படுத்த வேண்டும்

### யாழ்.இந்து ஆரம்பபாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம்

(வட்டுக்கோட்டை நிருபர்)

''மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதற்கு பாடசாலைகளில் ஆசிரியர்கள், அவர்களைச் சமய நெறியில் வழிப்படுத்த வேண்டும். ஆறுமுகநாவலர் காட்டிய சைவ நெறியில் மாணவர்களை வழிப்படுத்துவதன் மூலம் சிறந்த ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கமுடியும்''.

- இவ்வாறு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் குறிப்பிட்டார்.

சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற குருபூசை விழாவில் அதிபர் தொடர்ந்து பேசுகையில், மாணவர்கள் சைவ சமய விழுமியங்களைப் பின்பற்றுவதற்கு அவர்களை வழிப்படுத்த வேண்டும் எனது பாடசாலையில் மாணவர்கள் தினமும் விபூதி தரித்து சந்தனப்பொட்டு வைத்து வர வேண்டும் என்பது கட்டாயமாகக்ப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

நாவலர் காட்டிய வழியில் சைவ பரிபாலன சபை சைவத்தையும், தமிழையும் வளர்க்கச் சிறந்த சேவையாற்றி வருகிறது. சைவம், தமிழ் போன்ற பாடங்களில் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இப்பாடங்களில் பரீட்சை நடத்தி பரிசில்களை வழங்கி வருகிறது. இம் முறை தமிழ்மொழிப்பாடத்திலும் பரீட்சை நடத்தியமை பாராட்டத்தக்க விடயமாகும் என்றார்.

இவ் விழாவில், சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் பேசுகையில், பாடசாலைகளில் தமிழ்மொழி, சைவசமயம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கு அந்தந்தப் பாடங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

பாடசாலைகள் பலவற்றில் சுகாதாரமும் உடற்கல்வியும் என்ற பாடத்தைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் சைவ சமய பாடத்தையும் படிப்பிக்கின்றார்கள். ஒரே வகுப்பில் சமய பாடம் படிப்பிக்கும் போது புலால் மறுத்தல் பற்றிக் கூறிய ஆசிரியர் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் போது உடல்வளர்ச்சிக்கு புரதச்சத்து அவசியம். ஆகவே இறைச்சி, மீன், முட்டை நன்றாக சாப்பிடுங்கள் என்று கூறும் போது மாணவர்களின் நிலை என்னவாகும் என்பதைக் கல்விச் சமூகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார்.

தலைவர் த.சண்முகலிங்கம் தனது தலைமையுரையில் ஆறுமுக நாவலரின் நூல்கள் புதுப்பொலிவுடன் வெளியிடப்படவேண்டும். ஒவ்வொரு குரு பூசைத்தினத்திலும் அவரது நூல்களில் ஒன்றினை வெளியிட்டு வருகிறோம்.

இம் முறை சிவாலய தரிசன விதியும் நாவலர் நீதிவாக்கியங்களும் இணைத்து வெளியிப்பட்டுள்ளதாகவும் கூறினார். நாவலர் சோலை முன்பள்ளிச் சிறார்களின் காவடி, வேப்பிலை நடனம் என்பவையும் காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இராமாவில் நலன்புரி நிலயத்திலிருந்து க.பொ.த சா.த பரீட்சைக்கு 27 மாணவர்கள்

பளை

இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 27 மாணவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த சா.த பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

இவர்கள் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, கேவில், முல்லைத்தீவு ஆகிய இடங்களை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களாவர்.

இவர்களில் 4 மாணவர்கள் குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூலமும், 5 மாணவர்கள் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மூலமும் ஒருவர் வவுனியா கல்வி வலயத்திலுள்ள பரீட்சை நிலையம் மூலமும் தோற்றவுள்ளார்கள்.

# மண்ணில் வாழ்வாங்கு வாழ வழி சமைப்போம்

**சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட கட்டுரை**

'உள்ளம் நன்றாக இருந்தால் ஊனம் ஒரு குறையில்லை உள்ளம் ஊனப்பட்டால்
உடம்பிருந்தும் பயனில்லை'

பல்வேறுபட்ட காரணிகளால் உடல் அவயவக் குறைபாடுகள் உடையவர்களாய் இருந்தும் இயல்பு வாழ்க்கை மறுக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தும் பலரும் வியக்கும் வகையில் தன்னம்பிக்கையுடன் செயற்படும் எம் இனிய மாற்றத்திறன் உடையோர் மட்டில் சமூகத்தினரின் கடமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் சர்வதேச மாற்றுத்திறன் உடையோர் தினமாக டிசெம்பர் மாதம் 03 ஆம் திகதி பிரகடனப்பட்டுள்ளது.

அவயங்கள் சீராக உள்ள நிலையிலும் வாழத் தெரியாது வீணே காலம் கழிப்பவர்கள் பலர் எம்மில் உள்ள போதிலும் அவயங்கள் இழந்தாலும், பாதிப்புற்றாலும் தமது வலுவிழப்பில் வலிமையைத் தேடி தமது தன்னம்பிக்கை அயராத உழைப்பு, விடாமுயற்சி என்பனவற்றால் உயர்ந்து வாழ்வை அர்த்தமாக்கி வாழ்வோரையும், இன்னும் பலர் தமது வலுவிழப்புடன் எதிர் நீச்சல் போட்டு தமக்கும் பிறருக்கும் பயன்தரு கருவியாக வாழ்வோரையும் காண்கையில் எமது உள்ளம் பெருவகையும் பெருமகிழ்ச்சியுமடைகின்றது.

விண்கலயுகமாகி வளர்ந்துவரும் விஞ்ஞானத்திற்குப் போட்டியாக வலுவிழப்பு வளர்ந்து வருகையில் புனர்வாழ்வு பணிகளும் சேவைகளும் தொடர்கதையாகத் தொடரவேண்டிய கடமைப்பாட்டில் நாம் உள்ளோம் என்பது யாவரும் அறிந்ததே.

புனர்வாழ்வு என்பது ஒருவர் தமது வலுவிழப்பிற்கு எதிராகத் தனது குடும்பத்தில் தான் வாழும் சமூகத்தில் உடலிலுள்ள சமூக சமய ரீதியில் பரிபூரண நிலையை அடைவதற்கும் பிறரில் தங்கி வாழாது தன்னிச்சையாக தனித்துவமாக வாழ வழி சமைத்துக்கொடுத்தலாகும். வருமுன் காத்தல், வந்த தாக்கத்தை அதிகரிக்காது தடுத்தல் தாக்கத்திற்கு எதிராக சிறப்பு நிலையை அடைதல் என்பன சிறந்த புனர்வாழ்வுச் சேவையில் அமைய வேண்டிய சிறப்பம்சமாகும்.

இதற்காக உடல் ரீதியிலான புனர்வாழ்வு பணியில் தரமான செயற்கை அவயங்கள், சிறந்த குறைபாட்டு நிவர்த்தி உறுப்புக்கள், விசேடமாக நடமாட்டு உபகரணங்கள், இயன்மருத்துவ சிகிச்சை விசேட வைத்திய ஆலோசனை, வைத்தியசாலைத் தரிசிப்பு என்பனவும் பொருளாதா ரீதியில் மேம்பாட்டு நிலையை அடைய சுழற்சி முறைக்கடன் உதவி, கல்வியில் சிறப்பு நிலையை அடைய கல்வி ஊக்குவிப்பு மானியம்,புனர்வாழ்வு சேவையை இலகுவாகப் பெற வழிகாட்டும் முகமாகப் வெளிக்களப் புனர்வாழ்வுச் சேவைகளை 1987 ஜூலை முதல் இலைமறைகாயாக இயங்கிவந்த யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இலவசமாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

எமது பயனாளிகளை அவதானிக்கையில் பெரும்பானோர் இளம் சமூகத்தினராகக் காணப்படுகின்றனர். அதிலும் பலர் கல்வி கற்று தொழில் பயிற்சி தேடுபவராக, தொழில் வாய்ப்பு கிடைக்காதவர்களாக, தொழில் தகமை அனுபவம் இருந்தும் உரியதுறையில் சந்தர்ப்பம் வழங்கப்படாமை சுயதொழிலிற்கான போதிய முதலீட்டின்மை விசேட சாரதி அனுபவமிக்கோர் அதற்கான உரிமம் பெற முடியாதுள்ளமை போன்ற இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இன்னும் யாழ்.மண்ணில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு பணிகளை மாற்றவலுவுடையோர்க்கு மறு வாழ்வு வாழ வழங்கி வருகின்றனர். நாம் ஒன்று சேர்ந்து மாற்றுவலுவுடையோர்களின் தேவைகளை இனங்கண்டு,சரியான முறையில் திட்டமிட்டு உரிய முறையில், உரிய நேரத்தில் எமது வளங்கள் சேவைகளை வழங்குவது மட்டுமலலாது அவர்கள் திறமைகள், உழைப்பாவமுள்ள, அனுபவங்களிற்கேற்ப சந்தர்ப்பம் வழங்குதல், அவரவர் தேவைக்கேற்ப சேவைகளைப் பெற உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வழி காட்டல் போன்றவற்றின் முலம் தட்டிக்கொடுப்போமாகில் வாழ்வு நிச்சயம் மேம்படும் சுயாதீனம் மற்றும் உட்படுத்தல் ஊடாக நாம் ஊக்கப்படுத்தி எம்மவர் வாழ்வு சிறப்புற நாம் ஒன்றபட்டு உழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## இவரைப் பற்றி 25

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமிழுக்கும், சைவசமயத்துக்கும் தன் வாழ்நாளில் அரும்பெரும் தொண்டாற்றி பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். ஒரு பெண் தனித்து நின்று சாதிக்க முடியாதது எதுவும் இல்லை என்பதை தனது உலகளாவிய நற்பணிகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். யாழ்ப்பாண வரலாற்றில் பதிவான இவரைப் பற்றி சில வரிகள் இங்கே.......**

◆ அப்பாக்குட்டி - தையற்பிள்ளை தம்பதியினருக்கு இரண்டாவது பிள்ளையாக தங்கம்மா 1925 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி பிறந்தார்.

◆ பொருட் செல்வத்திலும் பார்க்க அருட் செல்வமே அதிகம் இவரிடம் இருப்பதாக சோதிடர் கணிப்பிட்டுச் சொன்னார். தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் இவருக்கு ஏடு தொடக்கப்பட்டது.

◆ இவர் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 1929 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார்.

◆ 'பெண் பிள்ளைதானே, தபால் தந்தி வாசிக்கக் கூடிய அறிவு இருந்தால் போதும்' என்று பெண்களின் உயர் கல்விக்கு தடை போடும் காலம் அது. அன்றைய காலகட்டத்தில் தங்கம்மாவின் அறிவுக் கூர்மையை நன்கு உணர்ந்த பெற்றோர் அவரை உயர் கல்வி கற்கவென, 1935 ஆம் ஆண்டு மல்லாகம் விசாலாட்சி வித்தியாலத்தில் சேர்த்தனர்.

◆ படிப்பில் கெட்டித்தனமிக்க தங்கம்மா, போட்டிகள், பரீட்சைகள் என அனைத்திலும் முதலிடம் பெற்றார். இதே போல் ஆசிரியர் பயிற்சிப் புதுமுகத் தேர்வில் சித்தி பெற்று 1941 ஆம் ஆண்டு இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கொண்டார்.

◆ ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு 1945 ஆம் ஆண்டு தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலையில் தற்காலிக ஆசிரியராக பணிபுரிந்தார். பின்னர் மட்டக்களப்பு புனித சிசீலியா ஆங்கிலப் பாடசாலைக்கு நிரந்திர ஆசிரியராக நியமனம் பெற்றுச் சென்றார்.

◆ 1949 ஆம் ஆண்டு கொழும்பு மருதானை பாத்திமா பெண்கள் பாடசாலை அதிபரின் வேண்டு கோளுக்கிணங்க அங்கு சென்று 11 ஆண்டுகள் ஆசிரியப்பணியை மேற்கொண்டார்.

◆ 1941 ஆம் ஆண்டில் பிரவேச பண்டிதத் தேர்விலும் 1952 ஆம் ஆண்டில் பால பண்டிதத் தேர்விலும், 1953 ஆம் ஆண்டில் பண்டிதத் தேர்விலும் சித்தி அடைந்து தமிழ் புலமையை மேலும் வளர்த்துக் கொண்டார்.

◆ கொழும்பில் பல இடங்களில் இவர் சமயச் சொற்பொழிவினை நிகழ்த்தினார். இதனால் இவரின் தனித்துவம் வாய்ந்த நாவன்மை கொழும்புத் தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

◆ ஈழத்துத் தனிப் பெருமையில் நாட்டமுள்ள இவர் எழுதிய 'ஈழத்துப் பிரபந்தங்கள்' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை 1954 ஆம் ஆண்டு ஆரிய திராவிட பாசாவிருத்திச் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

◆ சென்னை சைவசித்தாந்த சங்கம் நடத்திய சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்து 1958 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது பெண் சைவப்புலவரானார். இலங்கையில் சைவப்புலவர் சங்கம் நிறுவுவதற்கும் காரணமாக இருந்தார்.

◆ 1958 இல் கொழும்பில் நடந்த இனக்கலவரத்தினால் யாழ்ப்பாணத்திற்கு வந்த தங்கம்மா அப்பாக்குட்டி அளவெட்டி சதானந்த வித்தியாலயத்திலும் 1964 இல் இருந்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் தனது கற்பித்தல் பணியைத் தொடர்ந்தார். இவர் இக்கல்லூரியிலிருந்தே ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

◆ தாய்-தந்தையின் பிரிவுத் துயர் இவரை வாட்டிய போது அதை மறப்பதற்காக திருவாசகத்தை ஒரு வருடமாக இரவு பகலாகப் படித்தார். இதனால் திருவாசகம் இவருக்கு மிகுந்த பரீட்சயமாகிற்று.

◆ 'பேசப்படும் பேச்சின் பொருளை ஒழுங்கபடுத்தி கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டு, யாழ்ப்பாணத் தமிழில் ஓரெழுத்தையும் சிதைக்காது, விழுங்காது பேசும் திறமை சிவத்தமிழ்ச் செல்விக்கு உண்டு என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பாராட்டினார்.

◆ சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பை வானொலி மூலம் கேட்டறிந்த தமிழ் நாடு ஆதீனங்களும் தமிழ் மன்றங்களும் சொற்பொழிவு ஆற்ற அங்கு அழைத்தனர்.

◆ 1965 ஆம் ஆண்டு முதல் சிவத் தமிழ் செல்வியின் தமிழ்தூதுப் பயணம் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் என பல நாடுகளுக்குப் பயணிக்கத் தொடங்கியது.

◆ 1973 ஆம் ஆண்டு திருவாவ்டுதுறை ஆதீனத்தில் நடைபெற்ற மங்கையர் மாநாட்டில் தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்கினார். தமிழ் நாடு ஆதீனத்தின் மாநாடு ஒன்றில் ஈழத்துப் பெண் ஒருவர் தலைமை தாங்கிய பெருமை இவரையே சாரும்.

◆ இவரின் தமிழ்த் தொண்டையும், தழிழ்ப்பணியையும் பாராட்டி தமிழ்நாடு ஆதீனம் 'பொற்கிழி' வழங்கிக் கௌரவித்தது.

◆ 1971 ஆம் ஆண்டு சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று மலேசியா சென்ற அம்மையாருக்கு, அவர்கள் இவரின் நிகழ்ச்சிக்கான கால அட்டவணையை ஒழுங்கமைத்த விதம் வெகுவாக ஆச்சரியப்பட வைத்தது.

◆ செல்லுமிடம் எல்லாம் பாராட்டுக்களையும், பட்டங்களையும், பொன்னாடைக் கௌரவங்களையும் பெற்றுக் கொண்டார்.

◆ இவர் காரை நகர் ஈழத்து சிதம்பர ஆலயத்தினரால் 'சிவத்தமிழ்ச் செல்வி' எனப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மதுரை ஆதீனத்திதால் 'செஞ்சொற் செம்மணி' (1966), காஞ்சிபுர ஆதீனத்தால் 'சித்தாந்த ஞானாகரம்' (1971), மலேசியா இலங்கை சைவர் சங்கத்தால் 'திருவாசகக் கொண்டல்' (1972), தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானாத்தால் 'துர்க்காதுரந்தரி' (1974) வண்ணை வைத்தீஸ்வரன் ஆதீனத்தால் 'திருமுறைச் செல்வி' (1973), திருக்கேதீஸ்வர ஆதீனத்தால் 'சிவமயச்செல்வி' (1974), இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆதீனத்தால் 'திருமொழி அரசி' (1983) போன்ற பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

◆ 1970 ஆம் ஆண்டு 'ஈழத்து சிதம்பரம்' என்று இந்தியார்களால் அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் ஆதீனம் இவருக்கு 'சிவத் தமிழ் செல்வி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இப்பட்டமே இவரின் பெயருடன் ஐக்கியமாகி விட்டது.

◆ அம்மையாருக்கு 1982 ஆம் ஆண்டு காசிக்குப் போகும் வாய்ப்புக் கிட்டியது. காசிக்குச் செல்பவர்கள் இந்து சமயக்கோட்பாட்டின் படி தாம் பெறும் பற்றுக்களில் ஒன்றைத் துறக்க வேண்டும். அதற்கிணங்க இவரும் தனக்கு கிடைத்து வந்த பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கும் பற்றை இதன் பின் ஏற்க மாட்டேன் எனத் துறந்தார்.

◆ இவர் ஆற்றி வந்த தமிழ்மொழிப் பணிக்காகவும், சமயத் தொண்டுக்காகவும் 1998 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

◆ மக்களின் பொதுப்பணிக்காக நிலையங்களையும் கல்யாண மண்டபங்களையும் கட்டி சமூகத்தொண்டாற்றினார். தனது ஒவ்வொரு பிறந்த தினத்திலும் வைத்தியசாலைக்கும, கல்விக்கூடங்களுக்கும் நிதிக்கொடைகளைச் செய்து வந்தார்.

◆ சங்க காலத்தில் தமிழ் வளர்க்க, சமயம் வளர்க்க ஔவைப்பாட்டி தமிழுக்குக் கிடைத்தது போல் ஈழத்தில் தமிழ் வளர்க்கவும், சமயம் வளர்க்கவும் கிடைத்த தங்கம்மா அப்பாக்குட்டி 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி தனது 83 ஆவது வயதில் இவ்வுலகை விட்டுச் சென்றார்.



தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிக்கோட்டை




# அப்பனாவது ஆத்தாளாவது... வனிதா விஜயகுமார் ஆவேசம்!

**நானும்,** என் கணவரும் அசிங்கப்பட்டதற்கு பின் விஜயகுமாரை நான் சும்மா விடமாட்டேன். இரண்டு நாள் என் புருஷனை சிறையில் தள்ளிவிட்டனர். இந்த விஷயத்தில் அப்பாவாவது, ஆத்தாளாவது... உண்மை, நியாயம்தான் எனக்கு வேண்டும், என்று வனிதா விஜயகுமார் ஆவேசமாக கூறியுள்ளார். தான் கொடுத்த முறைப்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்காமல் பொலிஸார் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் புறநகர் பொலிஸ் அதிகாரியிடம் ஜாக்கிட்டிடமும் வனிதா விஜயகுமார் முறையிட்டுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:-

புறநகர் பொலிஸ் அதிகாரி ஜாங்கிடம் விளக்கம் அளித்தேன். நான் செய்ததில் ஏதாவது தவறு இருக்கிறதா, மீடியாவில் பேசக்கூடாதா? எனக் கேட்டேன். அதற்கு அவர், 'உங்களுக்கு எல்லாவிதமான உரிமையும் இருக்கிறது. இன்றைக்குத்தான் இந்த வழக்கு என் கையில் வந்திருக்கிறது. கண்டிப்பாக, உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கடந்த 20 ஆம் திகதி என் அப்பா விஜயகுமார் கொடுத்த முறைப்பாட்டுக்கு மட்டும் எப்படி உடனடியாக நடவடிக்கை எடுத்தனர் என்றுதான் நான் கேட்கிறேன். என்னுடைய குழந்தையை அழைத்துக்கொண்டு போக எனக்கு யார் அனுமதி தர வேண்டும். என் குழந்தையை காப்பாற்ற என் அப்பா யார்? என் அம்மா யார்? எனக்கு வக்கீல் கூட கிடையாது. எனக்கு ஓரளவிற்கு சட்டம் தெரியும். என்னுடைய பேச்சில் எந்த தவறும் இல்லை. என்னை பற்றி தவறான வதந்தியை கிளப்பி விட்டிருக்கின்றனர். பைத்தியம் லூசு என்று கூறுகின்றனர். அவர்கள் தவறான தகவல் கொடுத்துள்ளனர். குழந்தையிடமிருந்து தாயை ஆண்டவனே வந்தாலும் பிரிக்க முடியாது. அதுதான் உண்மை. அதுதான் சட்டம். இவ்வாறு வனிதா கூறினார்.

அமெரிக்க தூதரகத்தில் நடிகை வனிதா அளித்த முறைப்பாட்டின் பேரிலும் விசாரணை நடந்து வருகிறது. இதுபற்றி அவர் கூறுகையில்,

'அமெரிக்க குடியுரிமை பெற்ற எனது குழந்தை குறித்து பேசுவதற்காக அமெரிக்க தூதரகத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அங்கு நான் சென்றபோது, அனைத்து விடயங்களையும் அதிகாரிகள் விசாரித்தனர். அப்போது, 'இந்த வழக்கை உடனே கவனிக்கிறோம். எங்கள் தரப்பிலிருந்து உங்களுக்கு முழு ஒத்துழைப்பு தரப்படும். என்றனர்.



- ஜே.டி.சக்கரவர்த்தியுடன் சேர்ந்து 'கான்டிராக்ட்' என்ற தமிழ், தெலுங்கு படத்தில் நடிக்காறார் அர்ஜூன் அவருக்கு ஜோடி மினிஷா லாம்பா.
- முதன் முறையாக 'ஷிகாரி' என்ற கன்னட படத்தில் நடித்து வருகிறார் மம்முட்டி.
- விஜய் இயக்கும் தமிழ் படத்தில் முக்கிய வேடத்தில் கன்னட நடிகை திவ்யா பாண்டே நடிக்கிறார்.
- 'மன்மதன் அம்பு' படத்தில் நடிகை சங்கீதாவின் சிகை அலங்காரம், உடை அலங்காரங்களை நடிகை கௌதமி வடிவமைத்திருக்கிறார்.
- 'மேல் விலாசம்' என்ற மலையாள படத்தில் பார்த்தீபன் நடிக்கிறார். மலையாளத்தில் பார்த்தீபன் நடிக்கும் 2 ஆவது படம் இது.
- 'வானம்' படத்தில் சிம்பு யுவன்சங்கர்ராஜா இணைந்து பாடியுள்ள ஒரு பாடல் மட்டும் கொண்ட சிடி ரிலீஸ் செய்யப்பட்டது. மற்ற பாடல்கள் பின்னர் வெளியிடப்படுமாம்.
- சூர்யா நடிக்கும் 'ரத்த சரித்திரம்' படத்தை மறுதணிக்கை குழுவினர் பார்த்து, ஏ சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

# சாதனைப் புத்தகத்தில் 'சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி'

**உலகிலேயே** முதல்முறையாக HDSLR என்ற கமரா மூலம் படமாக்கப்பட்ட திரைப்படம் என்ற பெருமையைப் பெறுகிறது 'சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி'. இதற்காக அந்தப் படம் லிம்கா உலக சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.

'மதுரை டூ தேனி வழி ஆண்டிப்பட்டி' என்ற படத்தை தயாரித்து எஸ்.பி.எஸ் மீடியா ஒர்க்ஸ் பட நிறுவனம் இரண்டாவதாக தயாரித்து வரும் படம் 'சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி'. இப்படத்தின் ஒளிப்பதிவாளரும், தயாரிப்பாளருமான எஸ்.பி.எஸ். குகன் முதல் முறையாக HDSLR என்ற தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய கமராவினால் முழுப் படத்தையும் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். பெரும்பாலான ஆங்கிலப்படங்களில் ஒருசில காட்சிகளுக்காக மட்டுமே இந்தவகை தொழில்நுட்பம்பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தியாவில் 'ஸ்லம் டாக் மில்லினியர்' என்ற படத்தில் சில காட்சிகளுக்காகவும் பயன்படுத்தினார்கள்.

பார்ப்பதற்கு ஒரு ஸ்டில் கமரா வடிவில் சிறியதாக இருக்கும் இந்த கமரா முதல் முறையாக 'சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி' படத்தில் தான் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. படத்தில் இடம்பெற்றுள்ள எந்த காட்சிக்கும் வேறு வகையான கேமரா பயன்படுத்தப்படவில்லை.

இதுவரை உலகத்தில் உள்ள வேறு எந்த மொழிப்படங்களிலும் இந்த சாதனை நிகழ்த்தப்படவில்லை. இந்த சாதனை 2011 ஆண்டு வெளிவரவுள்ள லிம்கா உலக சாதனையாளர்கள் புத்தகத்தில் இடம்பெறுகிறது. இதற்கான சான்றிதழை லிம்கா சாதனைப் புத்தக நிறுவனம் சமீபத்தில் வழங்கியது. டிசம்பர் 3 ஆம் திகதி திரைக்கு வருகிறது இந்தப் படம்.



பரிமளா திரையரங்கம்



இன்ன
றார்கள்.
மாற்ற மு
டவில்ல
பதுபோல
பான உ
ணர்வு
அனுஷ்க
காதல்

# நடிகர் சங்க

**தமிழ்** மக்களின் ரசனையை நான்
கேரளாவைச் சேர்ந்த ஆர்யா தமிழ் சினிமா
டுபாய் பட விழாவில் ஆர்யா பங்கேற்று பே
நான் ஒரு மலையாளி. ஆனால் மலைய
இல்லை. நடிக்கவும் தெரிய வேண்டா
மலையாளத்தில்தான் தரமான படங்கள்
ஒளிபரப்பானது.
இதற்கு பெப்சி தலைவர் வி.சி. குக
விரட்டியடிப்போம் என்றும், தமிழனை இழி
இந்த விவகாரத்தில் திடீரெ
ராதாரவி
மூண்டது
கட்சியின்
இந்த
நடக்கிற
கலந்து
அந்த கம



காவலன்

கோ
செய்தி
நடிக்
வாங்கிட்
படங்கள்
இயக்குன
ராம்...
ஹன்
னும் பட
கட்டுதா
எடுக்கப்
ளைத்தா
களாம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சினிமா

* தமிழில் இப்போது ஏழாம் அறிவு படத்தில் நாயகியாக நடித்து வரும் கமல் ஹாஸன் மகள் ஸ்ருதி, அடுத்து உதயநிதிக்கு ஜோடியாக நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏழாம் அறிவு படத்தின் தயாரிப்பாளர் உதயநிதி ஸ்டாலின்தான் என்பது குறிப்பிடத்தக்கது. உதயநிதி ஸ்டாலின் முதல் முறையாக ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தில் ஹீரோவாக நடிக்கிறார்.

## செல்போன் போல் அதையும் வைத்துக்கொள்ளுங்கள்

**அனுஷ்கா,** முன்னாள் யோகா டீச்சர். நிம்மகட்டா பவுண்டே
ஷன் சார்பில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றிய முகாம் நடத்தி வருகிறார்.
ன்றை காலகட்டத்தில் இளைஞர்கள் பல்வேறு உறவு முறைகள் வைத்திருக்கி
ள். எத்தனையோ சமூக அமைப்புகள் இளைஞர்களின் போக்கை நல்வழிக்கு
ற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்ப
ல்லை என ஓர் ஆய்வு சொல்கிறது. எல்லா இளைஞர்களும் செல்போன் வைத்திருப்
போல் ஒரு பாக்கெட் ஆணுறையும் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். பாதுகாப்
உறவு எயிட்ஸ் போன்ற கொடிய நோயிலிருந்து காக்கும். எயிட்ஸ் நோய் விழிப்பு
வு பற்றி படம் எடுத்தால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நடிப்பேன். - இவ்வாறு
னுஷ்கா கூறினார்.
ாதல் வத்தாலே காலுரெண்டும் தன்னாலே டாடா காட்டுதே உந்தன் பின்னாலே''

## த்துக்கு ஆர்யா விளக்கம்!

ன் குறை கூறவில்லை என்று நடிகர் ஆர்யா நடிகர் சங்கத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.
ரிமாவில் குறிப்பிடத்தக்க நடிகராக முன்னேறியிருக்கிறார். இவரது பூர்வீகம் . சமீபத்தில் நடந்த
பேசும்போது, தமிழ் நடிகர்களை இழிவுபடுத்தியதாக செய்திகள் வெளியாகின.
லையாளத்தில் நடிக்கும் அளவு திறமை இல்லை. தமிழ் படங்களில் நடிக்க திறமை தேவை
டாம். ஆனால் மலையாள படங்களில் நடிப்பதற்கு நடிப்பு தெரிந்திருக்க வேண்டும்.
ங்கள் வருகின்றன என்றெல்லாம் அவர் பேசியிருந்தார். இது தொலைக்காட்சியிலும்

குகநாதன் கண்டனம் தெரிவித்தார். தமிழ், நடிகர்களை இழிவாக பேசிய ஆர்யாவை
இழிவுபடுத்தினால் குரல்வளையைக் கடிப்போம் என்றும் எச்சரித்தார்.
ரென நடிகர் சங்கம் தலையிட்டது. ஆர்யாவை விமர்சித்த வி.சி. குகநாதனை சரத்குமார்,
வி ஆகியோர் கண்டித்தனர். இதையடுத்து பெப்சிக்கும் நடிகர் சங்கத்துக்கும் மோதல்
டது. பெப்சி நிர்வாகிகள் ராதாரவியை கண்டித்து அறிக்கை வெளியிட்டனர். இந்து மக்கள்
யினரும் ஆர்யா உருவப் படத்துக்கு செருப்பு மாலை அணிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.
ந்த பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்க திரையுலகினரின் கூட்டுக்குழு கூட்டம் சென்னையில்
கிறது. தயாரிப்பாளர் சங்கம், நடிகர் சங்கம், பெப்சி உள்ளிட்ட பல்வேறு சங்கத்தினர் இதில்
து கொள்கின்றனர். இதற்கிடையில் நடிகர் சங்கத்துக்கு ஆர்யா விளக்க கடிதம் அனுப்பி உள்ளார்.
கடிதத்தில் தமிழ் நடிகர்களை இழிவாக பேசவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## கோடம்பாக்கம் தி கேட்டீங்களா?

முகி படத்தோட பார்ட் 2ல தல நடிகரு
டிக்க பேச்சு நடந்துச்சு. இப்போ நடிகரு ஜகா
கிட்டாராம்... வாங்கிட்டாராம்... அடுத்துத்து
கள் இருக்கு. பிறகு பார்க்கலாம்னு தாடிக்கார
குணர்கிட்ட சொல்லிட்டாராம்... சொல்லிட்டா

ன்ஸ் நடிகைக்கும், டொப் நடிகைக்கும் இன்
படமே வரலே. ஆனா வாய்ப்பு மட்டும் வரிசை
தாம்... வரிசை கட்டுதாம்... புது வருஷத்தில
கப்போற பெரிய ஹீரோ படங்களுக்கு இவங்க
ந்தான் புக் பண்றாங்களாம்.... பண்றாங்
ம்.... விஷயத்தை காத்துவாக்கில கேட்ட நம்பர் நடிகைங்க அதிர்ச்சி ஆயிட்டாங்களாம். பழக்கமான ஹீரோக்களுக்கு போன் போட்டு 'என்னை மறந்துட்டீங்களா'ன்னு கொஞ்சும் மொழியில கேட்கிறாங்களாம்.... கேட்கிறாங்களாம்.....

**ப**ஞ்ச் நடிகர் படத்துக்கு தியேட்டர்காரங்க எதிர்ப்பு தெரிவிக்கிறாங்க. அதை எப்படி சமாளிக்கிறதனு ரசிகர்களோடு நடிகரு ஆலோசனை பண்ணினாரு. இதுக்கிடையே அந்த படத்துல பிசின் நடிகையும் நடிச்சிக்கிறதால அவரோட இலங்கை பிரச்சினையை கிளப்பவும் சில அமைப்புகள் முடிவு பண்ணியிருக்காங்களாம்.. பண்ணியிருக்காங்களாம்... இதனால பஞ்ச் நடிகர் திணறிப் போயிருக்கிறாராம்... போயிருக்கிறாராம்....



## பறிபோகும் வாய்ப்பு நடிகைகள் அதிர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக இசைத் துறை வளர்ச்சி அடைவதற்கு இசையைக் குருகுல முறையில் கற்பதே சிறந்ததாகும்

இசை கற்றவர்களுக்கும் வெளிநாட்டு மோகம் உண்டு. வெளிநாட்டில் வாழுவதற்கு வாய்ப்புத்தேடி அவர்கள் செல்வதும் இந்நாட்டு மக்கள் மத்தியில் கர்நாடக இசையை இரசிக்கின்றவர்களின் தொகை குறைந்தமையும் எமது நாட்டில் இசை வளர்ச்சியில் பின்தங்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது என்ற இக்கருத்தை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான செல்வி. பரமேஸ்வரி கணேசனை யாழ் ஓசைக்காக நேர்கண்ட போது தெரிவித்தார். காரைநகர் நாதஸ்வர வித்துவான் அமரர் என்.கே.கணேசன் பாப்பாத்தி தம்பதியினருக்கு 15.3.1968 இல் மகவாகப் பிறந்த இவர், இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். இவரின் நேர்காணலின்போது தெரிவித்த கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

**யாழ். பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், இசைக்கலை மாணி செல்வி பரமேஸ்வரி கணேசனுடனான நேர்காணல்**

**கேள்வி: உங்களுடைய மாணவப் பருவத்தைப் பற்றி யாது குறிப்பிடுவீர்கள்?**

**பதில்:** நான் ஆரம்பக் கல்வியை காரைநகர் தியாகராஜ மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியிலும் இசைக் கல்வியை யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்திலும் கற்றேன். 1992 இல் இசைக் கலைமாணித் தேர்வில் முதல் வகுப்பில் சித்தியடைந்தேன். 1999 இல் வெளிவாரி மாணவியாக யாழ். பல்கலைக் கழகத்தில் கலை மாணி பரீட்சையில் சித்தியெய்தினேன். பின்பு 2001 ஆம் ஆண்டில் இசைக்கலைமாணி படத்தினையும் 2005 - 2007 ஆம் ஆண்டுவரை இந்தியா அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணி பட்டத்தை முதல் வகுப்பிலும் 2007 - 2008 ஆம் ஆண்டு வரை தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணி பட்டத்தைப் பெற்றுக் கொண்டேன். முதுகலைமாணி, முதுதத்துவமாணி ஆகிய பட்டங்கள் இசைத் துறையில் பெற்றுக் கொண்டவையாகும்.

**கேள்வி: இசைத்துறையில் உங்களை வளர்த்தெடுத்தவர்களான உங்கள் இசை ஆசிரியர்கள் பற்றிக் கூறமுடியுமா?**

**பதில்:** எனது ஆரம்ப குருவாக எனது பேரனார் நாதஸ்வர வித்துவான் அமரர் க.சுப்பையாக்கம்பரைக் குறிப்பிடுவேன். அவரிடம் குருகுலவாசம் செய்து கற்ற மாணவர்களுடன் நானும் சேர்ந்து 5 வயதில் இசை கற்கத் தொடங்கினேன். 12 வயதின் பின் அமரர் சங்கீத பூஷணம் நல்.கந்தையாவிடமும் பின்பு இசை ஆசிரியை விஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசகத்திடமும் பின்னர் சங்கீத பூஷணம் எஸ்.பத்மலிங்கத்திடமும் கற்றேன். எனது இசைக் கல்வி முடிந்து 1993 இல் இசை அரங்கேற்றம் செய்தேன்.

**கேள்வி: யாழ். பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளராக இருக்கும் நீங்கள் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

**பதில்:** நான் இளங்கலைஞர் மன்ற இசை விழாக்களில் பல தடவை பாடியிருக்கிறேன். கொழும்பு கம்பன் கழக இசை வேள்வி நிகழ்ச்சியில் 2002, 2003 ஆகிய ஆண்டுகளில் இரு தடவை பாடியிருக்கிறேன். யாழ் பல்கலைக்கழக இசை விழாவிலும், யாழ். பல்கலைகழக வெள்ளி விழாவிலும், யாழ். பல்கலைக்கழகம் நிகழ்த்திய சிலப்பதிகாரத்தில் பண் பாட்டுக் கோலங்கள் எனும் நிகழ்விலும் பாடியிருக்கிறேன். பல்கலைக் கழகத்தில் கலாவித்தகர் பட்டம் பெறுவதற்கான பரீட்சையில் மாணவர்களின் நடன அரங்கேற்றத்திற்கு ஐம்பதுக்கு மேற்பட்ட தடவைகள் பாடியிருக்கிறேன். இவற்றைவிட வெளியில் நடந்த நாட்டிய அரங்கேற்றங்கள் ஐந்து வரையில் பாடியிருக்கிறேன். இந்தியாவில் பத்துக்கு மேற்பட்ட நடன நிகழ்ச்சிகளில் பாடியிருக்கிறேன்.

**கேள்வி: இந்தியா தவிர்ந்த ஏனைய வெளி நாடுகளில் நீங்கள் நிகழ்ச்சி செய்திருக்கிறீர்களா?**

**பதில்:** ஆம். பிரான்ஸ் நாட்டு வானொலியில் கர்நாடக சங்கீதத்தைப் பற்றிய விளக்க நிகழ்வொன்று நிகழ்த்தியுள்ளேன். பின்லாந்தில் நடைபெற்ற சர்வதேச நாட்டிய விழாவில் பரதநாட்டிய நிகழ்ச்சியொன்றில் பாடியுள்ளேன். 2003 பெப்ரவரியில் சிங்கப்பூர் ஸ்ரீசெண்பக விநாயகர் ஆலயத்தில் இசைக் கச்சேரி ஒன்றை நிகழ்த்தியுள்ளேன். இந்தியா மயிலாடுதுறையில் நடைபெற்ற இசைவிழாவில் பாடியுள்ளேன். அத்தோடு மதுரை பல்கலைக்கழகத்திலும் பாடியுள்ளேன்.

**கேள்வி: எமது நாட்டில் கர்நாடக சங்கீத வளர்ச்சி எவ்வாறு இருக்கிறது?**

**பதில்:** எமது நாட்டைப் பொறுத்தவரையில் கர்நாடக சங்கீத வளர்ச்சி குறிப்பிட்டு கூறும் வகையில் அபரிமிதமாக வளர்ந்துள்ளது என்று கூற முடியாது. பல்கலைக்கழகத்தில் இருந்து வருடாவருடம் 40இற்கு உட்பட்ட அளவில் இசைப்பட்டம் பெற்றவர்கள் வெளியேறுகிறார்கள். ஆனால் இவர்களில் தனியாக இசைக் கச்சேரியைச் செய்கின்ற ஆற்றல் உள்ளவர்கள் 7 - 10இற்குள் மட்டுமே இருப்பர். இவர்கள் கூட இசைத்துறையில் தம்மை வளர்த்து மேலோங்குகின்ற நிலைக்கு வருவதற்கு வாய்ப்புகள் அற்றவர்களாகவே இருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையானோர் இசைத்துறையில் ஆர்வத்தை இழந்துவிடுவர். ஆசிரியர்களாக இருப்பவர்கள் மாணவர்களுக்கான பாட அலகுகளுக்குள் நின்று விடுகிறார்கள். இதனால் இசை வளர்ச்சிக்கு வாய்ப்பு அற்றுவிடுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

**கேள்வி : இசை வளர்ச்சி அடையாத இந்த நிலைக்குக் காரணமாக எவற்றைக் கூறுவீர்கள்?**



**பதில் :** இசையைக் கற்கின்றவர்கள் வெளிநாடு செல்லும் வாய்ப்புகளினால் தமது இசைத் திறனை கைவிட்டு விடுகிறார்கள். அத்தோடு, மக்கள் மத்தியில் கர்நாடக இசையை வரவேற்கின்ற தன்மை அருகியுள்ளது. இதனால் இசைக்கலைஞர்களுக்கு இசையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அருகிவிட்டன. இசைக் கலை வளர்வதற்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் தடையாக உள்ளன. தொலைக்காட்சியில் தொடர் நாடகங்கள் சினிமாப் படங்கள் எனும் வகையில் பல நிகழ்ச்சிகள் மக்களைக் கவர்ந்துள்ளதால் இசை நிகழ்ச்சிகளை இரசிக்கும் விருப்பம் மக்கள் மத்தியில் குறைந்துள்ளது.

இதனை விட உள்ளூர் இசைக்கலைஞர்களின் இசை ஆற்றலில் மேலான நம்பிக்கை உள்ளவர்களாகவும் மக்கள் இல்லை. கர்நாடக சங்கீதம் தவிர்ந்த மெல்லிசை நிகழ்ச்சிகளை இரசிக்கின்ற ஆர்வம் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளமையும் கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்குப் பெருந் தடையாக உள்ளது.

**நேர்கண்டவர்**
**சைவப் புலவர்**
**செ.குணபாலசிங்கம்**

**கேள்வி : கர்நாடக இசை வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இத்தாக்கத்தின் காரணமாக காலப்போக்கில் கர்நாடக சங்கீதக் கலை இங்கு அழிந்துவிடும் எனக்கருதுகிறீர்களா?**

**பதில் :** அப்படிச் சொல்ல முடியாது. ஏனெனில் கர்நாடக இசையை பல்கலைக் கழக மட்டத்தில் வளர்க்கின்ற வாய்ப்பு இங்கு உண்டு. இதனால் அதைக் கற்கின்றவர்களும் இருக்கவே செய்வார்கள். இவற்றைவிட எமது மக்களின் வாழ்வோடு பிணைந்திருக்கின்ற நாதஸ்வரம் என்ற வாத்திய இசை கர்நாடக இசையை அழிய விடாது பேணி வைத்திருக்கும். இது எமது வாழ்வோடு ஒன்றிய பண்பாடாகும் எனவே கர்நாடக இசை இங்கு அழிந்துவிடும் என்று நினைப்பதே தவறானது என நான் கருதுகின்றேன்.

**கேள்வி : கர்நாடக இசையைக் கற்பதற்கு ஏற்ற கற்றல்முறை எதுவென நீங்கள் கருதுகிறீர்கள்?**

**பதில் :** நான் பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினாலும் இசையைக் கற்பதற்குக் குருகுல முறையே சிறந்தது எனக் கூறுவேன். பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை ஒரு மாணவன் பலரிடம் இசையைக் கற்கிறான். இதனால் அவனிடம் ஒரு பாரம்பரியமான இசை மரபைக் காணமுடியாது. ஆனால், குருகுல முறையில் கற்கின்ற மாணவன் ஒரு பாரம்பரியத்தின் வழியில் தன்னை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறான். அத்தோடு அம்மாணவன் தனது குருவின் பாரம்பரியமான இசைப் பண்பாட்டை, வளர்ச்சியை பெற்றவனாகவும் பேணுபவனாகவும் தன்னை வளர்த்துக் கொள்ள முடிகிறது. இப்பாரம்பரியத்தைப் பேணும் வாய்ப்பினை வழங்குவதால் குருகுல முறையே சிறந்தது எனலாம்.

**கேள்வி : கர்நாடக இசையில் எற்படுத்தப்படுகின்ற ஸ்வரங்கள் குறைந்த இராகங்கள் அமைப்பது பற்றி தங்கள் கருத்து என்ன?**

**பதில் :** ஸ்வரங்கள் குறைவானவையாக புதிய இராகங்களை உருவாக்குவது தவறானது அல்ல. ஏனெனில் தாய் இராகங்கள் எனப்படுபவை 72 மட்டுமே இவையே 7 ஸ்வரங்களில் அமைந்தவையாக உள்ளன. ஏனையவை வேறுபட்டவையாகவே இருக்கின்றன. இராகங்கள் பிரபல்யமாவதற்கு அதனைப் பாடுகின்ற பாடகரின் பிரபல்யமே காரணமாக உள்ளது.

**கேள்வி: பண்ணிசைக்கும் கர்நாடக இசைக்கும் உரிய தொடர்பை விளக்குவீர்களா?**

**பதில் :** பண்ணிசை என்பது தமிழ் இசை வடிவமாகும். இதற்கும் கர்நாடக இசைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பண்ணின் வடிவங்கள் கர்நாடக இசை இராகங்களின் அமைப்பையே கொண்டுள்ளன. இதனால் இவை இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது.

**கேள்வி : வளர்ந்து வரும் கர்நாடக இசைக் கலைஞர்களுக்கு யாது கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில் :** இளைய தலைமுறையினர் பாரம்பரியமான கர்நாடக இசை மீது பற்றும் ஆர்வமும் கொண்டு அதனை வளர்ப்பதற்கு ஏற்ற வழிகளில் முயலவேண்டும். இசைத்துறையில் ஏற்றம் பெறவேண்டுமாயின் சாதகம் பண்ணுவது மிக மிக அவசியமானதாகும்.

ஒரு இசைக்கலைஞனின் சிறந்த வளர்ச்சிக்கு அவன் செய்கின்ற சாதகங்களே படிக்கல்லாக அமையும் இசை ஞானத்தையும், கற்பனை வளத்தையும், சாதுரியத்தையும் பெறுவதற்கு சாதகம் செய்வதைத் தவிர வேறுவழி எதுவும் இல்லை. எனவே அயராது சாதகம் பண்ணி இசைத்துறையில் மேலோங்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசவழமைச் சட்டத்தில் நீதியற்ற பணப்பெருக்கம்

எல்லா நாடுகளிலும் நீதியற்ற பணப் பெருக்கத்தைக் (UNJUST ENRICHMENT) கட்டுப்படுத்துவதற்குத் அந்தந்த நாடுகளில் பலவிதமான சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் ஏற்படுத்தப்பட்டுள் ளன. அதாவது முறைகேடான முறையில் பணம் சேர்ப்பதை எல்லா நாட்டுச் சட்டங்களும் தடை செய்கின்றன. ஏற்றுக் கொள்வதில்லை.

ஆங்கிலச் சட்டங்களில் மிக நாகரிகமான முறையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இதில் மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டம் (Bill of Exchange) பொருள் விற்பனைக் கட்டளைச் சட்டம் (Sale of Goods Oridinance) என்பன முக்கியமானவையாகும். இவற்றை இலங்கையும் பின்பற்றி வருகின்றது.

மோசடிகளைத் தடுப்பதற்காக ஆங்கிலச் சட்ட ஏற்பாடுகள் ( Prevention of Fraud Ordinance) இலங்கையிலும் பின்பற்றப்படுகின்றன. மேற்படி மோசடிகள் தடுப்புக்கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவு மிக முக்கியமானதாகும்.

இதே போல் இன்றும் பணக் கொடுப்பனவுகள் தொடர்பான சட்டங்கள் (Money Lending ACT) பங்குடமைச் சட்டம் (Partnership Law ) எனப் பல ஆங்கிலச் சட்டங்கள் இருக்கின்றன. பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சட்டம் ஏகப்பட்ட வட்டியை ஒருவர் பெற்றுக் கொள்வதை அங்கீகரிக்கவில்லை. கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றுக்கு வருகின்ற போது சட்டவட்டியாக 12% தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதே போல கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இரண்டு பேருக்கு இடையில் பிணக்கு ஏற்பட்டு பணத்தைக் கொடுத்தவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவும் பணத்தைப் பெற்றவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து பூரண விசாரணை ஒன்றை மேற்கொள்ளவும் பொலிஸ் அதிகாரி பணத்தைக் கொடுத்தவருக்கு முதலை மட்டுமே (Capital) பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வட்டி (Intrest) வாங்கிக் கொடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப் படுவதில்லை. அவர்கள் வட்டி பற்றி கதைக்க முடியாது. இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் யாவும் எவரும் நீதியற்ற பணப்பெருக்கம் அடையக் கூடாது என்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டன.

தேசவழமையிலும் இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் உண்டு. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது அன்றே தமிழ்ச் சான்றோர்கள் சொல்லி வைத்தவையாகும்.

'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்பது ஔவை வாக்கு. பொருளுடமை சமுதாயத்தின் சட்ட திட்டங்கள் பொருளாதாரத்தையே மையமாகக் கொண்டவையாகும். ஆகவே தேசவழமைச் சட்டம் பெற்றோர்களது ஆதனங்களுக்குப் பொருத்தமான சட்ட ஏற்பாடுகளைப் பிள்ளைகளுக்கு செய்துவைத்துள்ளது.

ஒரு குடும்பத்தில் மூத்த மகளுக்கு திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்கள் ஏனைய பிள்ளைகளுக்கு மணமுடித்து வைக்கமுன் இருவரும் விபத்தில் அகால மரணமடைந்தால் அல்லது இயற்கை மரணமடைந்தால் அவர்களால் எவருக்கும் வழங்கப்படாத சொத்துக்கள் ஏனைய பிள்ளைகளுக்குச் சமமாகப் பிரித்து கொடுக்கப்படும். இதுவே சொரியல் பங்கு (Undivided Portion) தோன்றக் காரணமாகும்.

இவ்வாறு இறந்த பெற்றோர்களது எஞ்சிய சொத்துக்கள் மணமுடிக்காத பெண்களுக்கும் ஏனைய ஆண்பிள்ளைகளுக்கும் பங்கிடப்படும் போது ஏற்கெனவே ஆதனச்சேர்க்கையோடு அதாவது பெற்றோரிடமிருந்து சீதனம் பெற்றுக் கொண்ட மூத்த மகளுக்கு இறந்து போன பெற்றோர்களது சொத்தில் எந்த விதமான சட்டபூர்வமான உரிமைகளும் இல்லை. அவை மணமுடிக்காத ஏனைய பிள்ளைகளையே சென்றடையும் என்பது தேசவழமைச் சட்டத்தின் ஏற்பாடாகும்.

இது தொடர்பில் பல வாதப்பிரதிவாதங்களும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் நீதிமன்றங்கள் எவரும் நீதியற்ற பணப்பெருக்கம் அடையக் கூடாது என்பதில் அக்கறையாகவே இருக்கின்றன.

ஓரிடத்தில் ஆதனங்களுக்கு ஏக்கமும் இன்னொரு இடத்தில் ஆதனங்களுக்குத் தேக்கமும் இருப்பதை தேசவழமைச் சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. இந்த வகையில் சமத்துவ கோட்பாடு ஒன்றை உள்வாங்கிக் கொண்ட தேசவழமை எவரும் நீதியற்ற பணப்பெருக்கம் (UNJUST ENRICHMENT) அடைவதை ஏற்பதில்லை.

தேசவழமைச் சட்டத்தில் இது ஒரு முற்போக்கான சட்ட ஏற்பாடாகும் என்பதில் ஐயமில்லை.

## சட்டமும் சமூகமும் 05





வழக்கறிஞர்
பொன். பூலோகசிங்கம்

## ஹைக்கூ

தளிர்களெல்லாம்
தெருவோரத்தில்
தட்டுக்களோடு நிற்கின்றன

ஆண்களும்
விலை போகிறார்கள்
திருமணச் சந்தையில்....

வெள்ளைத் தாள்களும்
கருத்தரிக்கின்றன
என் பேனா செய்யும்
கவிதைகளால்...

நான் சொர்க்கத்தை
தினமும் அனுபவிக்கிறேன்
அன்னை மடியில் சாய்வதால்....

அநியாயத்தின்
ஆக்கிரமிப்பினுள்
தூங்கிக் கொண்டிருக்கிறது
நியாயம்...

சம்பளமே இல்லாமல்
இரவு பகலாய்
வேலை செய்கிறது
இதயம்....

விசித்திரன்

## கேள்வி பதில்

**செல்வி அருணாசலம் கலைமகள்**
**அரசடி வீதி, பருத்தித்துறை.**

**கேள்வி:- பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதற்கான விளக்கம் என்ன?**

**பதில்:-** எல்லாச் சமூகங்களிலும் இந்தப்பிரச்சினை இப்போது பூதாகரமாக உருவெடுத்துள்ளது. கடந்த யுத்த காலத்தில் இந்தப் பிரச்சினை தலை தூக்காமல் இருந்தது. அதற்கு அகநிலைக்காரணங்களே காரணமாக இருந்தன. தற்போது சமாதான காலம். ஆனால் புறநிலைக் காரணிகள் தான் தற்போது இந்தத் துர்ப்பாக்கிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. பெண்பிள்ளைகள், சிறுவர்கள் தமது பாதுகாப்புத் தொடர்பில் அக்கறையின்றி இருக்கிறார்கள். ஆகாய மார்க்கமாக வரும் வன்முறைகள் நிறைந்த திரைப்படங்களையும் நாடகங்களையும் தொடர்ந்து பார்த்து (மெகா சீரியல்) தம்மையும் அதற்குள் இசைவாக்கிக் கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள நீதி மன்றங்களில் ஒவ்வொரு கிழமையும் பதினாறு வயதிற்குட்பட்ட சிறுமிகள், மாணவிகள் தொடர்பிலான பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. பல சம்பவங்கள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. சிறுவர் பாதுகாப்புத்தொடர்பில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அவர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்னர் பாடசாலை அதிபர்களை அழைத்துக் கலந்துரையாடும் போது இவ்வாறான ஆபத்துக்கள் எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்கும் சூழ்நிலை இருப்பதாகவே சுட்டிக்காட்டியுள்ளார். அது மிக மிகச் சரியான கூற்றாகும்.

தற்போது இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் மிகக்கடுமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் மூலம் திருமதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது அவரது பிள்ளைகள் தென்னிலங்கையில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்குப் பதிலாக அவர் அடுத்த வருடமே 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்கச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதனை இலங்கை தண்டனைச் சட்டக்கோவையில் இணைத்துக்கொண்டார். அதன் விளைவாக சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட பலர் கடூழியச்சிறைத்தண்டனைக்கு உட்பட்டுள்ளனர். அவர் செய்த சட்ட ஏற்பாடுகளில் ஒன்று இவ்வாறான குற்றங்களை விசாரிக்கும் நியாயாதிக்கம் மஜிஸ்திரேட் நீதிமன்றத்திலிருந்து மேல் நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாகும். இந்தச் சட்ட ஏற்பாடுகள் பற்றிய முழு விபரமும் எதிர்காலத்தில் 'யாழ் ஓசை' யில் விபரமாக வெளியிடப்படும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 04

04

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | ■ | 13 |
| 14 | 15 | ■ | 16 | 17 | 18 | ■ | 19 |
| 20 | 21 | 22 | ■ | ■ | 23 | 24 | 25 |
| ■ | ■ | 26 | ■ | 27 | 28 | 29 | ■ |
| 30 | 31 | ■ | 32 | 33 | ■ | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | ■ | 40 | 41 | 42 |
| ■ | 43 | 44 | ■ | 45 | 46 | 47 | 48 |

**இடமிருந்து வலம்**

1. சூரியன்
6. நன்மை அல்ல
9. பொட்டு
14. முகத்தில் வருவது
16. அரபு நாடு
20. நடிகை (மாறியுள்ளது)
23. பகுதி
27. ஒரு விளையாட்டு
30. முக்கனியில் ஒன்று
32. உடுக்கின் மூலப்பொருள்
34. செவி
36. தலையில் வைத்து பாரம் சுமப்பது
40. தலை
43. உண்
45. கண்ணகியின் கையில் உள்ளது.

**மேலிருந்து கீழ்**

1. கவிச்சக்கரவர்த்தி
3. பெண்
4. இடது அல்ல.
5. யானையின் குரு (தலை கிழ்)
7. விளையாட்டுத் திடல்
12. படம் / இந்தியாவின் நகரம் (குழம்பி யுள்ளது)
15. சுவை
22. கடலில் வருவது
24. காலத்தை காட்டுவது.
27. நாயைக் கண்டால் கையில் எடுப்பது
30. தாய்க்கு ஒப்பானது.
31. புயல் விளக்கு
32. காதணி
35. மெல்லிய இழை
38. மாதம்
40. கொஞ்சம்

குறுக்கெழுத்து போட்டி 02க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | சோ | க | வ | ன | ம் | ■ | வ |
| க | ப | டி | ■ | ■ | க | டு | கு |
| ம் | ன | கா | ■ | இ | ரா | ம | ன் |
| ■ | ம் | ர | ம | ■ | வ | ■ | ற |
| வி | ■ | ம் | ர | ச | ■ | ஆ | ■ |
| ரு | சி | ■ | தி | ரி | கு | ல | ம் |
| ம் | வி | ப | ம் | ■ | து | ய | ர |
| பு | ல் | லா | ந் | தி | ■ | ம் | க |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **எஸ்.சீலன்**
சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

2. **அ.கீர்த்திகா**
4ஆம் குறுக்கு
யாழ்ப்பாணம்.

3. **ச.சிவகுமார்**
பருத்தித்துறை
யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 04 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
யாழ் ஓசை - வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்

# பூதத்தம்பி

04

**(சென்ற வாரத் தொடர்ச்சி)**

5. 'வெட்டறா மூலிகை' ஒன்றினைப் பூதத்தம்பி தன் கொண்டையில் முடிந்து வைத்திருந்ததாகவும், அதனை அறிந்திருந்த அந்திராசி, அதனை எடுத்து விட்டு பூதத்தம்பியின் சிரசினை கொய்யுமாறு பணித்ததாகவும் நாடகம் புலம்பும்.

மயில்வாகனப் புலவர் தனது யாழ்ப்பாண வைபவ மாலையில் விபரிக்கும் பூதத்தம்பி வரலாறு நம்பகத்தன்மையான தல்ல என்பது ஜோன் ஏச் மார்டின் என்பாரது கருத்தாகும். சம்பவம் நடந்து 78 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாண வைபவ மாலையை எழுதிய மயில் வாகனப் புலவர் தான் செவி வழி கேள்விப்பட்டவற்றினையும் இணைத்துப் பூதத்தம்பியின் கதையை விபரித்துள்ளார்.

ஆனால், பூதத்தம்பியின் மரணத்தின் சாட்சியாக விளங்கிய பால்தேயஸ் பாதிரியாரின் குறிப்புக்கள் நம்பகத் தன்மை யானவையாகும். அக் குறிப்பின் படி ஒல்லாந்தருக்கெதிராக யாழ்ப்பாணக் கோட்டையில் சதி ஒன்று நடந்தது. டொன் லூயிஸ் பூதத்தம்பியும் மன்னாரைச் சேர்ந்த ஒருவனும், ஐந்து போர்த்துக் கேயரும் ஒருங்கிணைந்து இச்சதியினைச் செய்தனர். பிடிபட்டு கொடூர தண்டனைக் குள்ளாகினர் என்று அறியமுடிகின்றது.

இலங்கை அரசினால் 1849 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நிர்வாக அறிக்கையில் விபரிக்கப்படும் கால ஒழுங்குச் சம்பவங்களில், 1658, செப்டம்பர் மாதம் ஒல்லாந்தருக்கெதிராக யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் அரசியல் சதி நடந்தது. அதில் 'டொன் லூயிஸ் பூதத்தம்பும் சில போர்த்துக்கேயரும் சம்பந்தப்பட்டு இருந்தார்கள் அவர்களை டொன் மனுவல் அந்திராடோ (அந்திராசி) முதலியார் கண்டுபிடித்தார். சதிகாரர்கள் கொல்லப் பட்டார்கள்' எனக் குறிக்கப்பட்டுள்ளது. பிலிப் கன்ஜமனாடன் என்பவரின் The vinea Taprobanea என்ற நூலில் எழுதப்பட்டுள்ளதாக பிரிற்றோவின் குறிப்பிலிருந்து டொன் லூயிஸ் பூதத் தம்பிக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான இரகசிய தொடர்புகளை அறிந் திருந்தும் அவற்றினை தெரிவிக்காது மறைத்து வைத்திருந்தமைக்காக, 1658 இல் கல்தேரா பாதிரியாரின் தலை துண்டிக்கப்பட்டது என அறிய முடிகிறது.

யாழ்ப்பாணக் குறிப்புக்களிருந்து பின் வரும் முடிவுகளைப் பெறளண்ணளமுடிகிறது

1. பூதத்தம்பி முதலியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வரலாற்றில் இடம் பெற்ற ஒரு முக்கிய அதிகாரி.

2.ஒல்லாந்தரால் துரோகியால் குறிப்பி டப்படும் பூதத்தம்பி அந்நியரே இந்த மண்ணில் இருந்து துரத்தி விடுவதற் கான முயற்சிகளில் ஈடுபட்டு அவமாகப் பிடிபட்டு வீரமரணமடைந்தவன்.

3.இந்த மண்ணிலிருந்த போர்த்துக்கேய அந்நிய ஆதிக்கத்தினை அகற்றுவதற் காகப் போராடிய முதல் புரட்சியாளன் சங்கிலி செகராசசேகரனாவான்.அதனை அடுத்து ஒல்லாந்த அந்நிய ஆதிக்கத் தினை யாழ்ப்பாண மண்ணிலிருந்து புரட்சியாளனாக செயற்பட்டவன் பூதத்தம்பி முதலியாவான்.

4.யாழ்ப்பாண மக்கள் பூதத்தம்பியைப் போற்றினர் என்பது அவனைப் போற்றிய பல்வேறு வாய் மொழிக் கதைகளிலிருந் தும் அவளது கதையைக் கூத்தாக ஆடிய திலிருந்தும் அறிய முடிகிறது.

**பூதத்தம்பி விலாசம்**

பூதத்தம்பி நாடகத்தினை தனது கருத்திற்கு ஆதாரமாக கொள்ளும் யாழ்ப்பாணச் சரித்திய ஆசிரியர் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பூதத்தம்பி நாடகம் செய்த மாதோட்டத்துச் சுவான் கொஸ்தான் மகன் தாவீது என்பவன் இச்சம்பவத்திற்குச் சமீப காலத்தவனாதலால் அவன் உண்மையை ஆராய்ந்தே பாடியிருக்க வேண்டும் என் பதும், பாடியவன் தான் கிறிஸ்வதனாதலால் கிறிஸ்தவனாகிய அந்திராசிமேல் அபவாதஞ்சுமத்த மனம் பொருந்தானென் பதும், உண்மை ஒரு பக்கமும் பழியொரு பக்கமுமாக அரிய சம்பவம் எக்காலத்தும் எவ்விடத்திலும் நிகழ்வது இயல்பே என்பதும் துணியப்படும் என்கிறார்.

அக்காலத்தில் பூதத்தம்பி நாடகம் குறித்துக் பல வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்துள்ளது. முத்துத்தம்பிப்பிள்ளையின் சத்தியவேத பாதுகாவலன் கடுமை

**கலாநிதி க.குணராசா**

யாகச் சாடியுள்ளது. சாடலின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. தாவீது கிறிஸ்தவன் என்பது நிச்சய மல்ல. ஏனெனில், ஒரு சைவனைப் போல கடவுள் வணக்கம் செய்கிறார்.

2. அந்திராடோவை (அந்திராசி) ஒரு தமிழ் குருகுலத்தவன் என்பதுந் தவறு அவன் ஒரு சிங்களவனெனப் பல்டேயஸ் பாதிரியார் காட்டியிருக்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

'உன்னைச் சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை காலம் செய்த கோலமடி கடவுள் செய்த குற்றமடி......' என்பது பழைய தத்துவார்த்தமான சினிமாப்பாடல்.

யாழ்.மண்ணில் நடந்தேறுகின்ற கலாசாரச் சீர்கேடுகளின் போக்குகளை அவதானிக்கும் போது மேற்படி பாடல் வரிகளே மனதில் எதிரொலிக்கின்றன. 'யாழ்ப்பாணக் கலாசராம் கந்தபுராணக் கலாசாரம்', 'யாழ்ப்பாணம் ஒரு சிவபூமி' இப்படிப் பலவாறெல்லாம் சமயப் பேரறிஞர்களால் விதந்து போற்றப்பட்ட யாழ்ப்பாணம் இன்று நெறி பிறழ்ந்து வழிதவறிச் செல்வது சமூக அபிமானிகளின் மனதில் வேதனையை ஏற்படுத்துகின்றது. முன்னோர்களால் ஆகர்ஷித்து வளர்க்கப்பட்டு வந்த தமிழரின் கலாசார அடையாளங்கள் அதன் ரேகைகளே தெரியாதளவிற்கு மங்கி மறைந்து செல்கின்றன என்பது கண்கூடு.

இது ஒருபுறமிருக்க குடாநாட்டில் கலாசார துர்நடத்தைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதற்கு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளும் விதிவிலக்கல்ல என்பதே சோகம். அதற்கு முத்தாய்ப்பாக பாடசாலைக்குச் செல்வதாக கூறிச் செல்லும் மாணவ மாணவிகள் பாடசாலை கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ரகசியமாக, மறைவான இடங்களில் தங்கள் காமப்பசிகளைத் தீர்க்கும் சம்பவங்கள் பரவலாக ஒப்பேறுவதாக சமூக அபிமானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மையில் குடாநாட்டில் உள்ள பிரபல மகளிர்பாடசாலை ஒன்றில் பெற்றோர்களிற்கான கூட்டம் ஒன்று நடந்ததாம். அங்கு பல விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டனவாம். பாடசாலைக்குச் செல்வதாக கூறிவிட்டு வரும் சில மாணவிகள் பாடசாலைக்குச் செல்லாது ஆண் நண்பன் என்ற போர்வையில் பழகும் எதிர்பாலினத்தைச் சேர்ந்தவர்களுடன் மறைவான இடங்களுக்குச் சென்று சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதாகவும் அதனால் பலவித வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படுவதாகவும் பெற்றோர்களுக்கு கண்டிப்புடன் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

பாடசாலைக்குச் செல்வதாக கூறிச் சென்ற உயர்தர வகுப்பு மாணவி ஒருவர் யாழ்.சுப்பிரமணியம் பூங்காவில் ஆண் நண்பன் ஒருவனுடன் சென்றதாகவும் பூங்காவில் மறைவான இடமொன்றில் பாடசாலை உடையை களைந்து விட்டு வேற்றுடையை மாற்றியதாகவும் அப்பகுதியில் நின்ற ஒருவர் தெரிவித்தார். எப்படி இருக்கிறது எமது கலாசாரம்? உடை மாற்றும் செயற்பாடுகள் அந்தரங்கத்தில் நடைபெறக்கூடியதே தவிர அம்பலத்தில் நடைபெறக்கூடாது. அதுவும் பெண்பிள்ளைகள் உடை மாற்றும் பண்பாடு என்பது முக்கியமானது. மிக அவதானத்துடனும் விழிப்புடனும் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் பலர் பார்த்திருக்க எவ்வித கூச்சமோ வெட்கமோ இன்றி சர்வ சாதாரணமாக ஒரு கட்டிளமைப் பருவப் பெண் உடை மாற்றுகிறாள் என்றால் எமது கலாசாரம் எங்கே போகிறது! பாருங்கள்!

**பலர் பார்த்திருக்க எவ்வித கூச்சமோ வெட்கமோ இன்றி சர்வ சாதாரணமாக ஒரு கட்டிளமைப் பருவப் பெண் உடை மாற்றுகிறாள் என்றால் எமது கலாசாரம் எங்கே போகிறது! பாருங்கள்!**

குடாநாட்டில் உள்ள பிரதேச வைத்தியசாலை ஊழியர் ஒருவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ் வைத்தியசாலைக்குத் தினமும் கர்ப்பிணிப்பெண்கள் வந்து போகின்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் முறை தவறிய உறவால் வேண்டத்தகாத கர்ப்பத்திற்கு ஆட்பட்டுள்ளனர் என்றும் அதிலும் குறிப்பாக 20 வயதிற்கும் குறைவான பதின்ம வயதுடைய பெண்களும் உள்ளடங்குவதாகச் சொல்லி ஆதங்கப்பட்டார். இவர்களில் பெரும்பாலானோர் பாடசாலை செல்லும் மாணவிகள் என்பதே சோகம் தரும் விடயமாகும். கிராமப்புறங்களிலும் சரி நகர்ப்புறங்களிலும் சரி தற்போது திருமணமாகாது கர்ப்பம் தரிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறன.

இத்தகைய சம்பவங்கள் வெளியுலகிற்குத் தெரியாமல் குடத்துள் விளக்குப் போல அமுக்கப்பட்டு விடுகின்றன. இவற்றை துணிச்சலுடன் வெளிக்கொணர[illegible] பின்னடிக்கின்றன. இதற்குப் பல பின்னணிக் காரணங்கள் இருந்தாலும் சமூகப் பொறுப்புக் கருதி சில விடயங்களை கோடிட்டுக் காட்டுவதில் தவறு இல்லை. இதன்மூலம் எம் சமூகத்தை ஓரளவுக்கேனும் விழிப்படையச் செய்யமுடியும். பிள்ளைகள் விடயத்தில் குறிப்பாக பெண்பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் கண்டிப்புடனும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஆசிரியர்களும் மாணவர்கள் விடயத்தில் மிக அவதானத்துடன் இருக்க வேண்டும். மேற்படி சம்பவத்தைப் போலவே பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் சில மாணவிகள் கர்ப்பம் தரித்ததாகவும் பின்னர் கருக்கலைக்கப்பட்டதாகவும் அதிர்ச்சிகரமான தகவல்கள் கசிந்துள்ளன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் அசண்டையீனத்தாலேயே இத்தகைய சம்பவங்கள் நேருகின்றன. எது எப்படியோ மாணவிகள் விடயத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் கண்டிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். இல்லையேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதைத் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாது போய்விடும்.

ஆசிரியர்கள் பார்த்துக்கொள்வார்கள் எனப் பெற்றோரும் பெற்றோர்கள் பார்த்துக் கொள்வார்கள் என ஆசிரியர்களும் கருதும் மனநிலை மாறவேண்டும்.



தற்போது போர் ஓய்ந்து போயுள்ள நிலையில் மக்களின் அன்றாட வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் அவதானிக்கப்பட்டு வரும் நிலையில் எமது கலாசாரபண்பாட்டிலும் நேர்மறையாக தாக்கங்கள் செலுத்துகின்றமையை இங்கு நடைபெறும் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. 'மாஸ்லோ' என்ற உளவியல் அறிஞரின் கருத்துப்படி ஒரு மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகளுடன் பாதுகாப்பு தேவைகளும் பூர்த்தி செய்யப்படுமிடத்து பாலியல் தேவை ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்ற நியாயமான வாதம் ஏற்புடையதே. முன்னரெல்லாம் யுத்தம் நடைபெற்ற போது மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் எல்லாம் தகர்க்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு இருந்தமையினால் இத்தகைய பாலியல் ரீதியான நாட்டம் குறைவடைந்திருந்தது. ஆனால், தற்போது போர் ஓய்வடைந்து அமைதி திரும்பியுள்ளதை அடுத்து இத்தகைய பாலியல் கிளர்ச்சி மனத்தில் எழுவது தவிர்க்கமுடியாதவை. ஆனால் இத்தகைய பாலியல் உணர்வுகள் வக்கிரத்தன்மைக்கு வித்திடக்கூடியது. அப்படி பாலியல் வக்கிர உணர்வுகள் மனதில் மேலெழும் பட்சத்தில் மனிதனுக்கும் விலங்குகளிற்கும் எவ்வித பேதங்களும் இருக்காது என்பதே உண்மை.

தற்போது பாடசாலை மாணவர்களுக்கு போதிய பாலியல் விழிப்பூட்டல் செயற்பாடுகள் ஏற்படுத்தப்படுவது அவசியம். இதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது பங்களிப்பை வழங்கமுடியும். மனித வாழ்க்கை சக்கரத்தில் கட்டிளமைப் பருவம் என்பது முக்கியமான பருவம் அதிலும் பதின்ம வயதுடைய மாணவப்பருவம் என்பது மகத்தானது. இத்தகைய பதின்ம வயதுப்பருவத்தில் எது சரி எது பிழை என்ற விவாதத்திற்கே இடமிருக்காது. அத்துடன் பாலியல் உணர்ச்சிகளும் மேலிட பாலியல் வன்புணர்ச்சிகளும் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கிறது. எனவே இத்தகைய பருவ வயதுடைய மாணவர்கள் விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் கவனமாக அணுக வேண்டும். இல்லையேல் வழி தவறிச் செல்லும் போக்கிற்கு வித்திடக்கூடிய அதிகபட்ச சாத்தியக்கூறுகளை கொண்டிருக்கும் நிலமையும் காணப்படும்.

குடாநாட்டில் உள்ள நகர்ப்புறப் பாடசாலைகளிலும்சரி, கிராமப்புறப்பாடசாலைகளிலும் சரி பாலியல் கல்வி கட்டாயமாக்கப்படல் வேண்டும். இது பற்றிக் கதைப்பது தவறு,இது நாகரிகமல்ல என்ற நிலை மாற்றப்படல் வேண்டும். இல்லையேல் இப்படியான பாலியல் துஷ்பிரயோகங்கள் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நிகழ்வதைத் தடுக்க முடியாது போய்விடும் என்பது யதார்த்தம்.

உ.திலீப்மரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக் கழகத்துக்கு புதிய நிர்வாகக் குழு தெரிவு

தம்பட்டை, அட்டாளைச்சேனை புளூஇலவன் விளையாட்டுக் கழகத்தின் 2010 - 2011ஆம் வருடங்களுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் அட்டாளைச்சேனை 7ஆம் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர் முன்னிலையில் நடப்பு வருட நிர்வாகத்திற்காக பின்வருவோர் கழக அங்கத்தவர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - எம்.சீ. றவூப், செயலாளர் - ஏ.டப்ளியு.எம். றுமைஸ், பொருளாளர் - ஆ.எல். சர்ஜுன், உபதலைவர் - ஏ.எல். பாஹிர், உப செயலாளர் - என்.எம். தாரீக், விளையாட்டுக் குழுத் தலைவர் - ஜே. வஸீர், விளையாட்டுக் குழு உபதலைவர் கே.எல். ஹம்ஸாத், தொழில்நுட்ப உத்தியோகத்தர் - ஜே.எம். நிஸார், கணக்காய்வாளர் - இசட். கஸ்ஸாலி உட்பட நிர்வாக உறுப்பினர்களாக ஏ.கே. நிஸார்தீன், எம்.எச். அப்துல் றகுமான், எஸ்.எல். முபாறக், ஏ.ஆர்.பதிவூதீன்.ஏ.ஆர். சலாப்தீன், ஏ.எஸ். மன்சூர், எம்.எஸ். இசைத்தீன், எம்.ஐ. மனார், எஸ். ஐயூப் சபையில் தெரிவானார்கள்.

இக் கழகத்தின் முறைப்பாடுகளையும் பிரச்சினைகளையும் விசாரிப்பதற்காக ஐந்து பேர்கள் கொண்ட மேன்முறையீட்டுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். தாஜுத்தீன், கிராம உத்தியோகத்தர் யு.கே. கரீம், அதிபர்களான எம்.ஏ. அன்சார், எம்.எச். அப்துல் றகுமான் உட்பட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வாரத்தில் ஒரு தடவையே கழிவுகள் அகற்றப்படுவதாக விசனம்

(மருதமுனை மேலதிக நிருபர்)

பாண்டிருப்பு - மருதமுனை - பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களின் பிரதான வீதிகளில் கல்முனை மாநகர சபையானது வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே கழிவுகளை அகற்றி வருவதனால் பொது மக்கள், பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் சூழல் பாதிப்படைந்து வருகிறது என மருதமுனை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

கல்முனை மாநகர சபை முதல்வருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மருதமுனை அல்லாத ஏனைய பிரதேசங்களில் தினமும் பிரதான வீதிக் கழிவகற்றல்கள் நடைபெற்று வரும் போது இங்கு மாத்திரம் வாரத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்படுவது முறையற்றதல்ல.

பொறுப்பான அதிகாரிகளின் கவனயீனத்தினாலா அல்லது பிரதேசப் புறக்கணிப்பினாலா இவ்வாறு நிகழ்ந்து வருகின்றது.

பிரதான வீதிகளில் கழிவுகள் பெருமளவில் சேர்வதனால் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவும் சந்தர்ப்பம் உள்ளதாகவும் மக்கள் அஞ்சுவதுடன் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர்.

இவ் விடயத்தைக் கருத்திற் கொண்டு மாநகர சபையினர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# கலாசார உத்தியோகத்தர்களுக்கு திருகோணமலையில் பயிற்சி பட்டறை

(நற்பிட்டிமுனை மேலதிக நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள கலாசார உத்தியோகத்தர்களின் கணினி அறிவையும், நாடகங்களுடன் தொடர்புபட்ட கலை நுணுக்கங்களையும் விருத்தி செய்யும் நோக்குடன் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சு பயிற்சிப் பட்டறைகளை நடாத்தவுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் டீ.டபிள்யூ. யூ. வெலிகல தெரிவித்தார்.

இதன் படி இன்றும் நாளையும் திருகோணமலை முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தில் கணினிப் பயிற்சி நெறி நடாத்தப்படவுள்ளது. இதே வேளை 16 ஆம், 17 ஆம் 18 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு சின்ன உப்போடை மன்றேசா மண்டபத்தில் நாடகப் பயிற்சிப் பட்டறையும் நடாத்தப்படவுள்ளது.

இக் கணினி பயிற்சி நெறி, மற்றும் நாடகப் பயிற்சிப் பட்டறை தொடர்பான கடிதங்கள் கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# 4 மாடி வகுப்பறைக் கட்டிட நிர்மாணத்திற்கு 4.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அட்டாளைச்சேனை அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலையில் புதிய நான்கு மாடி வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

புதிய கட்டட நிர்மாணத்திற்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து அமைச்சு ரூபா 4.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பாடசாலை அதிபர் கே.எம். சுபைர் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நடும் விழாவில் தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். அகமட்கிபாஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

புதிய மாடிக் கட்டட நிர்மாணத்தின் மூலம் அல் முனீறா பெண்கள் உயர் பாடசாலையில் நீண்ட காலமாக நிலவும் வகுப்பறைப் பற்றாக்குறை நிவர்த்திக்கப்படும் என அதிபர் ஜனாப் சுபையிர் நம்பிக்கை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் பெண்கள் மாத்திரம் கல்வி பயிலும் ஒரே பாடசாலையான அல் முனீறா வித்தியாலயத்தில் நீண்ட காலமாக நிலவும் வகுப்பறை பற்றாக் குறையை நிவர்த்திக்குமாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனம், வீடமைப்பு நிர்மாணம், நீர்வழங்கல் மற்றும் கிராமிய மின்வலுவூட்டல் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையிடம் பாடசாலைச் சமூகம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க புதிய கட்டடத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மட்டு. பிராந்திய சுகாதார அலுவலகத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு வைபவம்

(காங்கேயனோடை நிருபர்)

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் எயிட்ஸ் விழிப்புணர்வு வைபவம் நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார அலுவலகத்தில் கடந்த முதலாம் திகதி புதன்கிழமை எயிட்ஸ் விழிப்புணர்வு வைபவமொன்று நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு வைபவத்தில் மட்டக்களப்பு பிராந்திய தாய், சேய் நல வைத்தியர் டாக்டர் நவலோஜன், திட்டமிடல் பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் எம். தமிழ் தாஸன், தொற்று நோயியல் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி காயத்திரி கௌரிபாலன் உட்பட வைத்திய அதிகாரிகள் அலுவலக அதிகாரிகள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு உரைகள் இங்கு இடம்பெற்றதுடன் இது தொடர்பான வீடியோ காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.

இலங்கையில் இதுவரை ஆயிரத்து 247 பேர் எச்.ஐ. வி. தொற்றுக்கு இலக்காகியிருப்பதாக சுகாதார புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்ற மூவருக்கு அபராதம்

(அக்கரைப்பற்று மேலதிக நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு, நாவற்காடு, பெரியகுளம் ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த மூன்று பேரை அக்கரைப்பற்றுப் பொலிஸார் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட மூன்று பேரும் கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் ரி. சரவணராஜா ஒருவருக்கு ஆறாயிரம் ரூபாவீதம் அபராதமும் மற்ற இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபாவீதம் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

# அழகியற்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு இம்மாதம் நியமனம் வழங்கும் வைபவம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அழகியற்கலைப் பட்டதாரிகள் 3174 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவம் இம்மாதம் இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே. முஹம்மட் தம்பி தெரிவித்தார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழி கவின்கலைப் பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்பொழுது கல்வியமைச்சில் நடைபெற்று வருகின்றன. இப்பணி நிறைவுற்றதும் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனாவால் கையளிக்கப்படும் எனவும் மேலதிக செயலாளர் ஜனாப் முஹம்மட் தம்பி குறிப்பிட்டார். நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் நிலவும் நாட்டியமும் அரங்கியலும், நடனம், சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கு இவ்வாசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் கவின்கலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிலவும் வெற்றிடங்கள் குறித்த விபரம், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களூடாக கல்வியமைச்சுக்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளது. இவ் வெற்றிடங்களின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வும் இம்மாதம் இடம்பெறவுள்ளது. இதற்கான பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இதன்போது 35 பேர் மௌலவி ஆசிரியர்களாக இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்படவுள்ளனர் எனவும் மேலதிக செயலாளர் கே. முஹம்மட் தம்பி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குட்பட்டவர்களில் காணப்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றைக் குறைப்பதற்கான இடையறுப்பு அணுகுமுறைகளும் பற்றிய பார்வை.

II



ஆக்கம்
ஸ்ரீ.நதிபரன் B.A. (Hons)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதனைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களை மீளவும் தமது வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை வழங்கவேண்டும்.

இதற்கு உள வளத்துணையாளர்கள் மற்றும் உள சமூகப் பணியாளர்களது தேவையானது பெரிதும் உணரப்பட்டுள்ளது. தகுதியான மேற்படி பணியாளர்கள் மூலமே பாதிப்படைந்தவர்களது நிலையை, தேவைகளை மதிப்பீடு செய்ய முடியும்.

பெரும்பாலும் கிராமப் புறங்களில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் கல்வியறிவு அற்றவர்களாகவே காணப்படுவர். எனவே பாதிப்புற்றவர்களும் போதிய விழிப்புணர்வின்றி தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளை - நீண்ட காலத்தில் ஏற்படும் விளைவுகள் பற்றிய தெளிவான அறிவூட்டல்கள் இல்லாமல் இருப்பர். எனவேதான் மதிப்பீடு செய்யும்போது உரியவாறு அவர்களை நெறிப்படுத்துவது கட்டாய தேவையாகும்.

இவ்வாறு மதிப்பீடு செய்யும்போது பணியாளர்கள் பல்வேறு சவால்களை மற்றும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும். இதற்குக் கிராமங்களில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை உரியவாறு ஒழுங்குபடுத்தி மக்கள் மத்தியிலிருக்கும் எதிர்மறை எண்ணங்களை இல்லாது செய்ய வேண்டும்.

இதற்குக் கிராமத்திலுள்ள பல்வேறு முக்கிய தரப்பினர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பாக கிராமசேவையாளர்கள், சமூகத் தலைவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மாது, கல்விமான்கள் என கிராம மட்ட முக்கிய உறுப்பினர்களது உதவியை நாடலாம். பின்னர் பாதிப்புற்றோருடன் தொடர்புகள் ஏற்படுத்தி நாம் யார்? நாம் எங்கிருந்து வருகிறோம்? எமது சேவையின் நடுநிலைத் தன்மை அதன் நோக்கம்? என்பவை பற்றி உரிய முறையில் அறிவுறுத்துவது பணியாளரின் தலையாய கடமையாகும்.

இவ்வாறு இனங்காணப்பட்டோரில் பல்வேறு வகையான சித்திரவதைகளுக்கு உட்பட்டவர்கள் இருக்கலாம். அதாவது உடலியல் ரீதியான சித்திரவதை, உளவியல் ரீதியான சித்திரவதை, பாலியல் ரீதியான சித்திரவதை மற்றும் இவை மூன்றும் சேர்ந்த சித்திரவதை எனப் பல வகையான சித்திரவதைகளுக்கு ஒருவர் உட்பட்டிருக்கலாம். அவருக்கு உட்படுத்தப்பட்ட சித்திரவதைகளைப் பொறுத்து அவரில் தாக்கங்களும் அமைந்திருக்கும்.

இங்கு தாக்கங்கள் என்று கூறும்போது பொதுவாக உடல், உள ரீதியான தாக்கங்கள் ஏற்படலாம். இதனால் உணர்வு ரீதியான பாதிப்புகள், நடத்தை ரீதியான பல மாற்றங்கள் எனப் பல்வேறு தாக்கங்கள் காணப்படலாம். எனவே பாதிப்படைந்தவருக்கு ஏற்பட்டிருக்கும் தாக்கங்களை அவர் கூறும் முறைப்பாடுகள் மூலம் ஓரளவு அறியலாம்.

சித்திரவதை மூலம் உடலியல் ரீதியாக ஏற்படும் பாதிப்புகள் எவை எனப் பார்த்தால்,

1. கடுமையான உடல் வலிகள் காணப்படும் (Extreme Physical Pain)
2. கடும் உடல் ரீதியான களைப்பு/ சோர்வு ((Extreme Physical Exhaustion)
3. உடலின் கட்டமைப்பை சிதைக்கும் அல்லது நிரந்தர ஊனமாகக்கூட மாற்றும் உடல் இயலாத நிலையைத் தோற்றுவிக்கும் (Disfiguration and permanent disability)

(தொடரும்)

# சாத்தான்களின் உலகம்



அது சாத்தான்களின் உலகம் ??..
சபிக்கப்பட்டவர்கள் மட்டுமே அங்கு
சாதாரண பிரஜைகள்....
பாவச் சாக்கடையில்
மூழ்கி எழுந்ததால் மட்டுமே
வாழ்வதற்காய்
பரிந்துரைக்கப்பட்டவர்கள்..

நாங்கள் அங்கு
ஆண்டவன் குழந்தைகளாய்
அவதரித்தோம்.
எங்கள் ஆசிர்வாதத்தைக் கண்டு
அருவருத்துக்கொண்டது
அந்த உலகம்!

எங்கள் சுத்தம் அந்த உலகை
அசுத்தப்படுத்துவதாக
அச்சப்பட்டார்கள்
எங்கள் பூரணம் அவர்கள் உலகை
வெறுமைப்படுத்துவதாக
வெட்கப்பட்டார்கள்...
எங்கள் தோழமை அவர்களை
துன்பப்படுத்துவதாகத் துடித்துப்போனார்கள்

அவர்களின் நிர்வாணங்களின் முன்பு
எங்கள் ஆடைகள் அசிங்கப்பட்டன
அவர்களின் காமங்களின் முன்பு
எங்கள் காதல்கள் காயப்படுத்தப்பட்டன
அவர்களின் வேசங்களின் முன்பு
எங்கள் பாசங்கள் பரிகசிக்கப்பட்டன

அந்தப்பாவ உலகைப் பரிசுத்தமானது என
பறைசாற்றிக்கொண்டார்கள்
அந்த மூட உலகை முழுமையானது என
முழங்கிக்கொண்டார்கள்
பாவிகள் என எங்களை பட்டியலிட்டுக்
கொண்டர்கள்..

எங்கள் இருப்பு அவர்களை இழிவுபடுத்துவதாய்
எழுச்சி கொண்டார்கள்.
சாத்தான்களின் நீதிமன்றில் சாட்சிகள் மட்டும்..
குற்றவாளிக் கூண்டில் குரல்வளை
நெரிக்கப்பட்டபடி நாம்

- ஒப்பிலா-

# வாசகர் ஓசை

வீரகேசரி அபிமான வாசகர்களுள் யானுமொருவன் யாழ்ப்பாணத்தில் வீரகேசரியின் யாழ் பதிப்பு அச்சேற்றப்பட வேண்டுமேன்ற ஓர் அவா என் மனதில் நீண்டகாலமாகக் குடிகொண்டிருந்தது. அந்த அவாவை நிறைவு செய்யும் வகையில் யாழ் ஓசை வார இதழ் வெளிவந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி.

பத்திரிகா தர்மத்தின் முக்கிய குறிக்கோள் நடுநிலைமை ஆகும். எந்தவொரு அரசியல் பக்கமும் சாராது செய்திகளை உள்ளது உள்ளபடி வெளிக்கொணரும் வகையில் வீரகேசரி தன் கடமையைச் சரிவரச் செய்கின்றது. அதன் சகோதர பத்திரிகையான யாழ் ஓசை அதிக பக்கங்களுடன் மிகவும் குறைந்த விலையில் மலர்ந்துள்ளது. சகல பெறுமதிமிகுந்த விடயங்களைத் தாங்கி வெளிவருவது மேலும் ஒரு சிறப்புவாய்ந்த அம்சமாகும்.

யாழ் ஓசையின் ஓசை யாழ்மக்கள் அனைவரினது காதுகளிலும் ஒலிக்கவேண்டும். தவழும் பருவத்தில் இருக்கும் யாழ் ஓசையை வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு யாழ் மக்களுடையதே.

யாழ் ஓசையே! நீ புறப்பட்டுவிட்டாய்! எத்தகைய சவால்கள் வரினும் தொடர்ந்து நடைபோடு! நிச்சயம் நீ வெகுவிரைவில் யாழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிடுவாய்!

ம.க.ஸ்ரீதரன்
இளைப்பாறிய கணக்காளர்
உடுவில் கிழக்கு
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி அகழிப்பு திட்டப்படி முழுமைப்படுத்துமாறு கோரிக்கை

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி ஆரம்ப இடமான பருத்தித்துறை - தொடக்கம் - மந்திகைச் சிலையடிச் சந்திவரையான 3 கி.மீ நீளமான வீதி அகழிக்கப்படாமல் சீர்செய்யப்பட்டு வருவதை கண்டித்து பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் பலவும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

போக்குவரத்து நெரிசல் மிக்க இந்த 3 கி.மீ நீளமான பிரதான வீதியை அகலிக்க வீதியின் இரு மருங்கிலுமுள்ள குடியிருப்பாளர்கள் வர்த்தகர்கள் பின் நோக்கி நகர்ந்து ஒத்துழைப்பை வழங்க முன் வந்துள்ள போதிலும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான 34 கி.மீ நீளமான பிரதான வீதியில் 3 கி.மீ வீதியை மாத்திரம் அகலமாக்காமல் விடுவது எதிர் காலத்தில் போக்குவரத்தில் பாரிய விபத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

எனவே எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு இப்போதே இக்குறுந்தூர வீதியையும் அகலமாக்கிப் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புப் பணியைப் பூர்த்தி செய்ய வேண்டுமென பொது அமைப்புக்கள் விடுத்துள்ள கோரிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பருத்தித்துறை வர்த்தகர் சங்கம், பருத்தித்துறை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன மகஜர்களைச் சமர்ப்பித்துள்ளன.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பருத்தித்துறை வாழ் மக்களாகிய எமக்குப் பிரதான போக்குவரத்துப் பாதையாக விளங்குவது பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து ஆரம்பிக்கும் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியே. இவ் வீதி ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் பிரதான வீதியின் மத்தியிலிருந்து எட்டு மீற்றர் அல்லது ஏழு மீற்றர் வரை அகலமாக்குவது என்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடந்த கூட்டங்களில் அரச அதிபர், பிரதேச செயலர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் ஒன்று கூடி முடிவெடுத்தனர்.

இக்கூட்டத்தில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கு பற்றியிருந்தனர். மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். நாமும் பங்குபற்றியிருந்தோம்.

ஆனால் தற்போது இவ்வீதி பருத்தித்துறையை அணமிக்கும்போது மாலி சந்திக்குப் பின் அகலம் குறையத் தொடங்கியுள்ளது. இதனை நாம் அவதானித்துள்ளோம்.

இவ் வீதி பருத்தித்துறையை அண்மிக்க மேலும் அகலம் குறைந்து மந்திகைக்கு அப்பால் ஒரு சில வருடங்களுக்கு முன்பு சீர்செய்த வீதிக்குமேலேயே கல் பரவி தார் ஊற்றுவதை அவதானிக்க முடிகின்றது.



மேலும் பருத்தித்துறை நோக்கி வரும் சாவகச்சேரி, கொடிகாமம் வீதிகள் மந்திகையில் இணைவதால் மந்திகையில் இருந்து பருத்தித்துறை வரை வாகன நெரிசல் அதிகமாகவுள்ளது. எனவே வீதி அகலமாக்க வேண்டியது கட்டாய தேவையாகும்.

இவ்வீதி அகலமாக்குவதற்காக அரச அதிபர், பிரதேச செயலர், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் நேரடியாக வந்து வீடுகள், கடைகள் யாவற்றையும் உடைத்துப் பின் நகர்த்தித் தரும்படி கேட்டுக் கொண்டனர். அதேபோல் மக்களும் வர்த்தகர்களும் நகரின் அபிவிருத்தியின் பொருட்டு இழப்பீடுகோராமல் தாங்களே தமது எல்லைகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் அடையாளமிட்ட எல்லைக்கு நகர்த்தியும் கடைகளை உடைத்தும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

இதன்போது பலரின் கடைகள் மீள இயங்க முடியாதுபோயுள்ளன. இவ்வாறு பல இலட்சம் ரூபா இழப்புக்களை இம் மக்கள் வீதி அபிவிருத்திக்காகத் தாங்கிக் கொண்டார்கள்.

ஆனால் தற்போது வீதியின் அகலம் இங்கு குறைந்தும் பருத்தித்துறை நகரை வீதி அடையாமலும் விரைவாக முற்றுப் பெறவுள்ளதாக அறிய முடிகின்றது. தயவு செய்து போக்குவரத்து நெரிசலில் திணறும் மந்திகை - பருத்தித்துறை வீதியை பருத்தித்துறை துறைமுகம் வரை முன்பு முடிவெடுத்தது போல் வீதியை அகலமாக்கி நகர அபிவிருத்திக்காக இழப்புக்களைத் தாங்கிக் கொண்ட மக்களுக்கு ஒரு நல்ல பலனை ஏற்படுத்தித் தருமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் பல பொது அமைப்புக்கள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் , யாழ். அரச அதிபர், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடம் கோரிக்கைகளை விடுத்துள்ளன.

**- வடமராட்சி நிருபர்.**

# பொதுச் சந்தை - பஸ் நிலையம் இடமாற்றம் கிளிநொச்சி மக்களுக்கே பெரும் ஏமாற்றம்



கிளிநொச்சி நகருக்கான பொதுச் சந்தை மற்றும் மத்திய பஸ் நிலையம் ஆகியவை நகருக்கு அப்பால் புற நகர்ப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை பொருத்தமற்ற நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் சகல அரச திணைக்களம் மற்றும் வங்கிச் சேவைகள், வர்த்தக தொழில் துறை நடவடிக்கைகள் நீதிமன்றம், பிரபல பாடசாலைகள், வடமாகாண சபையின் செயலகங்கள் உட்பட சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வரும் போது மேற்குறித்த பொதுச் சந்தை, புதிய பஸ் நிலையம் முதலானவை நகருக்கு அப்பால் தூர இடத்திற்கு மாற்றப்பட்டமைக்குப் பொது மக்கள் மத்தியிலும் அரச உத்தியோகத்தர்கள், பொது ஸ்தாபனங்கள் எனப் பலதரப்பட்டவர்கள் மத்தியிலும் அதிருப்தி நிலவியதை காணமுடிந்தது.

இதேவேளை, கிளிநொச்சி நகருக்கான அபிவிருத்தித்திட்டம் சரிவர முன்னெடுக்கப்படவில்லை எனவும் இதனால் பாதிக்கப்போவது பொது மக்கள் தான் எனவும் யாழ் ஓசைக்குத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் தவறான நடவடிக்கை காரணமாக கிளிநொச்சி நகருக்கான முக்கிய செயற்பாடுகளான பொதுச் சந்தை மற்றும் மத்திய பஸ் நிலைய செயற்பாடுகள் அமைந்ததாக பலரும் கருதுகின்றனர்.

இதேவேளை, நகர போக்குவரத்துப் பிரச்சினைக்கு ஒரு தற்காலிக தீர்வு கிட்டியுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற தூர இட தனியார் பஸ் சேவைகள் கிளிநொச்சி பஸ் டிப்போ சந்திக்கு சமீபமாக உள்ள முன்னைய சந்தை அமைவிடத்திலிருந்து பயணத்தை மேற்கொள்வதெனவும் உள்ளூர் பஸ் சேவைகள் கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மத்திய பஸ் நிலையத்திலிருந்து செயற்படுவதெனவும் முடிவாகியுள்ளது.

**- கே.வி.கே. திருலோகமூர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# முடியாத கதைகள் பல...

விசித்திரன்

பரந்து கிடக்கும் நீலவானில் நட்சத்திரப்பூக்கள் ஏராளமாய் நிறைந்து கிடந்தன. கரிய போர்வையால் தன்னை மூடிக் கொண்டு இரவுப் பெண்ணவள் நிசப்தமாக உறங்கிக்கொண்டிருந்தாள். மயான பூமியாய் எதுவித அசைவுமின்றி அமைதியாக கழிந்து கொண்டிருந்தது இரவு.

பொன்னையாவுக்கு விழிகளில் தூக்கம், ஏனோ வர மறுத்தது. படுத்து பல மணிநேரமாகியும் கண்கள் மூடவில்லை. தனிமையான சூழல், நீண்ட நாட்களின் பின்னரென வருகை, யாருமில்லா வேதனை என்பன... அவரை ஆக்கிரமிக்கத் தொடங்கின. இவைகளினால் சிந்தனை தான் பலதிசைகளில் ஓடிக்கொண்டிருந்தனவே தவிர நித்திரை சிறிதும் அவரை ஆட்கொள்ளவில்லை.

வீட்டின் முன்னறையிலே தான், தரப்பாள் படங்கைப்போட்டு படுத்திருந்தார் அவர். அருகிலே எச்சில் துப்புவதற்காக ஒரு பேணி. இவை தான் அவரது படுக்கையை அலங்கரித்திருந்தன. மல்லார்ந்து வானத்தை வெறித்த படி படுத்திருந்தார். கூரைகள் இல்லாமல் கிடக்கு, வானமும் விண்மீன்களும் அவரது பார்வையில் தெளிவாய் சிக்கின, வெடித்த காயிலிருந்து கழன்று, காற்றோடு கலந்து போகும் இலவம்பஞ்சாய், மேகங்கள் விலகி ஓடிக் கொண்டிருந்தன. பொன்னையாவின் மனதில் விரக்தியே படிந்திருந்தது. எதையும் இரசிக்கும் மனநிலையோடு, அவர் இருக்கவில்லை. வேதனைகளே அவரைச் சுற்றி வட்டம் போட்டுக் கொண்டிருந்தன. ஆழ் மனசு விம்மிக் கொண்டிருந்த வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகளோடு போராடி வென்று விட்ட அவருக்கு, இப்போது எதையும் தாங்கிக்கொள்ளும் சக்தி இல்லை.

ஒரு வேதனையான விடயத்தை சந்தித்தாலே, மனசு குழந்தையாக சிணுக்கத்தொடங்கி விடுகின்றது. அதிகளவான விண்பூக்களை இவரது விழிகள் விரைந்து கணக்கிடத்தொடங்கின. சிறிது நேரத்திலேயே களைத்துப்போயின. உறக்கம் மெதுமெதுவாய் அவரோடு சங்கமாகிப் போனது. பொன்னையா, பாவப்பட்ட மனுஷன், கடந்து போன ஒன்றரை வருடங்களின் முன் அந்தக் கிராமத்தையே அகதியாக்கியவர் அன்பினால் ! விவசாயத்தை வாழ்க்கையாகக் கொண்ட பொன்னையா அக்காலத்தில் பஞ்சத்தையே பறந்தோட வைத்த ஒரு கடின உழைப்பாளி.

உழைப்புத்தான் அவரது உயிர். இத்தகைய உழைப்பாளி, ஒருபோதும் உலோபியாக இருந்தது கிடையாது. இல்லை என்று வருபவர்களுக்கு கணக்குப்பார்க்காமல் கொடுப்பார். கொடுக்கும் போதும் அவரிடமும் ஒரு குணமிருந்தது.

பசியென்று வருபவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட, தூண்டிலையே கொடுக்க வேண்டுமென்பதுதான் அவரது கொள்கை, வாழ வழிதெரியாமல் வன்னி மண்ணில் எவனும் இருக்கக்கூடாதென தன்னிடம் வருபவர்களிடம் அன்போடு, ஒரு வேண்டுகோள் விடுப்பார். அவரைப் போலவே அவரது குடும்பமும் அனைவரையும் அரவணைத்துப் போவார்கள்.

கணவனது பேச்சே, தனக்கு வேதவாக்கென வாழும் மனைவி சிவகாமி பிள்ளைகளோடு சரி, புருசனோடும் சரி, தன்னை நெருங்கும் அத்தனை மனிதர்களையும் உடனே நம்பிவிடுவாள். யாரையும் சந்தேகம் கொள்ளத் தெரியாது. ஏதாவது கஷ்டம் வந்துவிட்டால் உடனே கடவுளிடம் ஓடிச் சென்று கண்ணீர் சிந்திக் கதறுவாள். தன் உறவுகளுக்கு ஒன்றும் நேர்ந்து விடக்கூடாதென்று சதா நேரமும் விரதமும் கோயிலும் குளமுமாக அதுவே அவளது வாழ்வாகிப்போனது. சராசரித் தமிழ்ப் பெண்ணாகவே சிவகாமியின் வாழ்க்கையும் சுழன்று கொண்டிருந்தது.

தம் செழிப்பான வாழ்க்கையைப் போலவே, தாம்பத்தியத்தை உறுதி செய்ய இரு பிள்ளைகளையும் பெற்று, வளர்த்து, ஆளாக்கி, இன்று திருமணப் பருவத்தில் மூத்த மகனான குமாரையும், உயர்தரம் படித்துக் கொண்டிருந்த ரேகாவையும் இரு கண்மணிகளாய் தாங்கிக் கொண்ட பொன்னையா அன்பான மனைவி அருமையான இரு குழந்தைகள். வந்தாரை வளமோடு வாழ வைக்கும் வன்னி மண் என, அவருடைய உலகம் சந்தோச வனமாகவே தெரிந்தது.

வீட்டில் விரைவிலேயே ஒரு மங்கள காரியம் நடக்கவேண்டும் என தன் மனைவியிடம் சொல்வார். சிவகாமி குமாருக்கு... ஒரு கல்யாணத்தை கட்டி வச்சிட்டால்... பிறகு ரேகா மட்டும் தானே. நீ.. அவனைக் கேளு...! சம்மதிச்சானென்டால் கெதியா முடிச்சிடலாம். சிவகாமியை தூண்டி விட்ட இவர் மகனின் முடிவுக்காய் காத்திருப்பார்.

தன் பிள்ளைகளுக்குத் தம் வாழ்க்கையைத் தெரிவு செய்யும் உரிமையைக் கொடுத்திருந்தார். எந்தளவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றோமோ, அந்தளவுக்கு பிள்ளைகள் தடம்மாறி விடுவார்கள் என்பது அவரது எண்ணம். அதனால் தான் வழிமாறாத வகையில் தன் பிள்ளைகளை சுதந்திரம் கொடுத்து வைத்திருந்தார் பொன்னையா.

தாய் கேட்டபோது, தனது காதல் விவகாரத்தை போட்டுடைத்தான் குமார். முதலில் பொன்னையாவிடம் கூறத் தயங்கிய சிவகாமி, பின்னர் சொல்லிவிட்டாள். அவன் விரும்பமே தன் விருப்பமெனக்கூறி, கரையோரப் பிள்ளையான மேகலாவை சிறப்பாக மகனுக்கு கட்டிவைத்து விட்டார். சாதி, மதம், எல்லாம் அவருக்கு இரண்டாம் பட்சமேதான்! உள்ளங்கள் உண்மையானதாக இருந்தால்போதும் குடும்பத்தில் அங்கத்தவர்கள் அதிகரிக்க மகிழ்ச்சியும் அதிகரித்து அவர்களை திக்குமுக்காடச் செய்தது.

எப்போதும், மனைவி கையால் சாப்பிட்டு விட்டு, அவரே பின்னிவைத்திருந்த கயிற்றுக்கட்டிலை முற்றத்து வெளியில் போட்டுத்தான் தூங்குவார் அப்படி இரவை இரசித்துக்கொண்டு தூங்குவதில் அவருக்கொரு அலாதிப் பிரியம். அவரை விட்டுப் பிரிந்திராத டெவிலும், பூனை ஜிம்மியுடன் ஒன்றாக வந்து அவரின் கட்டிலுக்குக் கீழே படுத்துக் கொள்வார்கள். அவைகளோடு செல்லக்கதைகள் பேசிப் பேசியே உறங்கிப்போய்விடுவார். மீண்டும் அதிகாலை, எழுந்தால், ஏதாவது வேலையோடு பொழுது கரைந்துவிடும்.

இப்படியே கால நாட்காட்டி வெகுவேகமாய் கிழிந்து கொண்டிருந்தது.

2006 ஆம் ஆண்டு....

அங்கு நிறுவனம் ஒன்று முதலுதவி வகுப்புகளை நடத்தியது. அதில் ரேகாவும் சென்று சேர்ந்தாள். அப்படி ஒரு நாள் அனைத்து மாணவர்களும் வகுப்பிலே இருக்க,மிக் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. அதிலே பொன்னையாவின் புதல்வி ரேகாவும் உயிரிழந்தாள்.

பிள்ளைகளை இழந்த உறவுகள் நடைபிணங்களானார்கள். மன நோயாளிகளாய் அரற்றினார்கள். என்ன செய்வது, எதுவுமே நடக்கவில்லை. பொன்னையா குடும்பமும் அடங்கிப்போனது. ஒரு பெண்குழந்தையான ரேகாவையும் பறிகொடுத்த பின் அவர்கள் உலகம் சுருங்கிப்போனது. அவரும் கொஞ்சம் கொஞ்சமாய் நோய்களுடைய உறவினரானார். சிவகாமி கடவுளே கதியென்றாகிப்போனாள். அப்போது தான் வன்னியில் போர் மேகம் சூழத்தொடங்கியது. இடப்பெயர்வுகள் தாய் மண்ணிலிருந்து துரத்தத் தொடங்கின. இவரின் குடும்பமும் ஓடத் தொடங்கியது. குண்டுகளின் பார்வையிலிருந்து தப்புவதற்காக எங்கெல்லாமோ ஓடினார்கள். இடையில் ஓர் இரவில், பொன்னையாரைத் தவிர, ஏனைய அனைவரும் போருக்கு இரையானார்கள்.

அதுவரை காலமும் சோலைவனக் கிளியாய், கூடியிருந்த உறவுகள் அனைவரும், வாழ்வுத் தடயமே இல்லாமல் போன போது... காட்டிலே தனித்த கலைமானாய் துடித்தார். முதுமை உரிமை கொண்டாடத் தொடங்கியிருந்த வேளையில் இனி எப்படி வாழ்வேன், எங்கு வாழ்வேன் எனத் தவித்தார்.

நாளுக்கு நாள், குண்டுகளால் துரத்தப்பட்டு மரண ஓடைகடந்து வவுனியா அகதி முகாம் வந்து சேர்ந்தார். தரப்பாள் கூடாரம் தஞ்சமானது. ஒவ்வொரு நாளும் நரக வேதனையோடு கழிந்தது. யாருமே இல்லாமல் அநாதையாக ஒரு வருட வாழ்வைக் கழித்த போதுதான் மீள்குடியேற்றம் எனும் செயற்திட்டம் ஆரம்பமானது. தாய் மண்ணைத் தழுவப்போகும் ஆனந்தத்தில், அவரது வேதனைகள் மறைந்து போய்விட்டன.

பல நாட்கள் காத்திருந்து நேற்று மாலை தான் ஊர்வந்து சேர்ந்தார். விழிகள் நனைய மண்ணிலே இறங்கினார். சுடுகாடாய் மாறிக்கிடந்தது அவர் பிறந்து வாழ்ந்த மண்.

பதிவுகள் பரிசோதனைகள் முடிந்து தனது காணிக்கு வந்தபோது, எங்கோ ஓர் தேசம் வந்ததான உணர்வு. எல்லாமே தலைகீழாகிக் கிடந்தது. ஓ வெனக் குழறியழத் தான் தோன்றியது.

இந்த வீட்டைப் பார்த்த போது அவருக்குத் தன் மனைவி பிள்ளைகளின் நினைவு தான் வந்தது. ஆதங்கம் அழுகையாக வெளிக்கிளம்ப, வாய்விட்டு அழுதார், வீட்டின் சுவர்களைத் தவிர, வேறு எதுவுமே வீட்டோடில்லை. அவரது வீடுபோலவே ஏனையவர்களின் நிலையும், அலங்கோலமாய்க் கிடக்கும் வீட்டைக் காணப் பொறுக்கவில்லை.



காய்ந்து கிடந்த நித்தியகல்யாணிச் செடியை ஒடித்து, முற்றத்திலே கிடந்த குப்பைகளை ஒதுக்கினார். வீட்டினுள் கிடந்த ஓட்டுத்துண்டுகள், கண்ணாடிச்சிதில்கள் என்பனவற்றைப் பொறுக்கி அகற்றிய போது, சூரியன் மறைந்து இருள் பரவத் தொடங்கிவிட்டிருந்தது. முன்வீட்டு சந்திரன் கொண்டு வந்து கொடுத்த சாப்பாட்டுப்பொதியை, சாப்பிட விருப்பமின்றிப் போக, முன் அறையிலேயே படுத்துவிட்டார். கடந்த கால அழகான நாட்கள் மனதை நெருடின. அதுதான் பொன்னையா தூக்கமின்றிப் படுத்திருந்தார்.

மறுநாள்:- காலைப்பொழுது பிரகாசமாக விடிந்தது. தனிமையாக எழுந்து தவிப்போடு காலைக்கடன்களை முடித்தார். சந்திரன் தேத்தண்ணி கொண்டு வந்து கொடுத்துவிட்டு, தகரம் வாங்கப்போகவேண்டுமென ஞாபகப்படுத்தி விட்டுப்போனான். தன்குடும்பத்தோடு வாழ்ந்த காலங்கள் இவரை மீண்டும் கண்கலங்க வைத்தன. மீள்குடியேறியும் மீளாத துயரோடு தகரம் வாங்குவதற்காக புறப்பட்டார். அந்தத் தகரங்களை வாங்கினால் தானே, வானம் பார்க்கும் வீட்டை வெயில் மழையிலிருந்து காத்து கூரை போடலாம். பொன்னையா நிறுவனத்தினரின் அலுவலகம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுங் காற்றும் கடற் கொந்தளிப்பும் நெடுந்தீவுக்கான படகுச் சேவையும்

சூப்பர் ஸ்ரார் யாரென்று கேட்டால் சின்னப்பிள்ளையும் சொல்லும் என்ற சினிமாப் பாணியில் நெடுந்தீவின் தேவை என்ன என்று கேட்டால் முதலில் அனைவருமே நல்ல படகுச் சேவை என்பார்கள். அந்த அளவுக்கு இந்தச் சேவையின் அவசியம் குறித்து நெடுந்தீவு மக்கள் எதிர்பார்ப்புக்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உலகின் எந்த ஒரு மூலையிலும் நெடுந்தீவில் காணப்படுவது போன்ற பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கும் நிர்வாகத்தின் கீழான போக்குவரத்துச் சேவை இருக்கும் என்று இந்த மக்கள் நினைத்தும் கூடப் பார்க்கமாட்டார்கள் அவ்வளவுக்கு போக்குவரத்து நிலை மோசம்.

நெடுந்தீவு மக்கள் காலங்காலமாக அனுபவித்துவரும் இந்தத் துயரத்திற்கு விடிவு தேவை. கடுங் காற்று கடல் கொந்தளிப்பு நிறைந்த காலம் என்றால் இங்கே சேவையில் உள்ள அரச படகுகள் நிச்சயம் பழுதடைந்தேயாக வேண்டும். இல்லாவிடில் எங்கோ ஓரிடத்தில் பிழையிருப்பதாகவே கருத வேண்டும் என்பதே நியதியாகும்.

அரசாங்கம் மக்களின் போக்குவரத்தில் அக்கறை காட்டியே வந்துள்ளது என்பதற்கு நெடுந்தீவுச் சேவைக்கென வழங்கப்பட்ட படகுகள் அனைத்துமே சான்றாகும் அரசாங்கம் படகுகளை வழங்கினாலும் அதைப்பராமரிக்கும் அதிகாரிகளின் கண் மூடிக்கிடந்தால் கொஞ்சங் கொஞ்சமாகப் படகு பழுதடைய வேண்டியதுதான். நெடுந்தீவுக்குக் கிடைத்த நெடுந்தீவுக் கடலை சமாளிக்கக்கூடிய சிறந்த படகுகளெல்லாம் வெகு சீக்கிரத்திலேயே பழுதடைந்து போவதற்குப் படகுக்கான அதிகாரிகள் மட்டுமல்ல படகில் பணியாற்றும் ஊழியர்களும் கூடக் காரணமாகிவிடுகிறார்கள்.

சேவை முடிந்ததும் துறைமுகத்தில் நங்கூரமிட்டுவிட்டு இறங்கிவரும் ஊழியர்கள் மறுநாள் சேவை ஆரம்பமாகும் நேரத்தில் தான் படகிற்கு வருகின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். படகுப் பராமரிப்பில் ஊழியர்கள் கூடுதல் அக்கறை காண்பிக்க வேண்டும். நெடுந்தீவு படகுச் சேவையில் பணியாற்றுபவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் இங்குள்ள மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக யாழ்.நகரிற்குச் செல்ல வேண்டிய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமல்ல அவர்களும் அதே தேவைகளுக்காக யாழ்.நகர் செல்ல வேண்டியவர்களே. எனவே கடமைக்கும் மேலான சேவை உணர்வு அவர்களிடத்தில் நிச்சயம் தேவை.

இப்போது சேவையில் இருந்த குமுதினிப் படகு பழுதடைந்து ஊர்காவற்துறையில் திருத்தவேலைகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளது. அந்தப்படகு சேவைக்கு உகந்தது என்றாலும் உகந்ததல்ல என்றாலும் கூட அது நல்லமுறையில் புனரமைக்கப்பட வேண்டும் என்பதில் நெடுந்தீவு மக்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது. மக்களின் வாழ்வோடு இணைந்தது. 1985.05.15 ஆம் திகதி கடலில் இடம்பெற்ற துயரச் சம்பவத்தையும் அதில் பலியான மக்களையும் சுமந்து மீண்டும் நெடுந்தீவில் கரை சேர்த்த படகு அது. அரச படகுகள் மீன்பிடி வள்ளங்கள் சிறிய பிளாஸ்டிக் படகுகள் என்பவற்றிலேயே மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. மழை கடுங்காற்று கடல் கொந்தளிப்பு உள்ள காலங்களில் மக்களை ஏற்றி இறக்கும் இது போன்ற படகுகளில் பயணிக்கும் இந்த மக்கள் படும் அவலங்களை நேரடியாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக எந்தவொரு அதிகாரியும் துணிந்து இறங்கியதாக சரித்திரம் கிடையாது. ஆனால் பழுதடைந்த படகைத் திருத்திய பின் கடல் குளம் போல அமைதியாகக் கிடக்கும் நேரம் பார்த்து அதில் சிறிது தூரம் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு குமுதினி நாளை சேவையை ஆரம்பிக்கிறது. நேற்று வெள்ளோட்டம் விடப்பட்டது என்று அறிக்கைகளைவிட்டு மகத்தான சாதனை புரிந்துவிட்டதாகப் பெருமை பேசுவதே வரலாறாகிப்போய்விட்டது. இந்த நிலை மாற வேண்டும்.





**கடுங்காற்று, கடல் கொந்தளிப்பு நிறைந்த காலம் என்றால் இங்கே சேவையில் உள்ள அரச படகுகள் நிச்சயம் பழுதடைந்தேயாக வேண்டும்.**

வெய்யில், மழை, கடற்கொந்தளிப்பு என்ற கால வேறுபாடுகளின்றி திறந்த படகுகளில் பயணிக்கும் மக்கள் தினமும் ஏதோ ஒரு வகையில் இன்னலுக்கு உள்ளானபடியே பயணிக்கிறார்கள். வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதிகளையே உரிய முறையில் புனரமைக்க முடியவில்லை. நேற்றுத் திருத்திய வீதியை இன்றைக்கு குண்டும் குழியுமாகவே காணமுடிகிறது. இந்த நிலையில் கடலில் ஓடித்திரியும் படகை இவர்களால் எப்படிப் பாதுகாப்பாகப் புனரமைக்கமுடியும். எது எப்படியிருந்த போதும் நெடுந்தீவுக்கான ஓர் அத்தியாவசிய தேவையான படகுச் சேவை தடங்கலின்றி ஒழுங்கான முறையில் தினசரி மூன்று தடவைகள் இடம்பெறக் கூடியதான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மீன்பிடி வள்ளங்கள் திறந்த படகுப்பயணங்கள் என்ற அசௌகரியங்கள் தொடர்வதும் பழுதடையும் படகுகளால் ஒருநாள் ஓடி மறுநாள் நிற்கும் சேவையும் இச்சேவையை இலவச போக்குவரத்துச் சேவை என்று தம்பட்டம் தட்டுவதும் அர்த்தமற்றது.

இப்போது அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் பல்வேறு வசதிகளும் கொண்ட புதிய படகு ஒன்று நெடுந்தீவு மக்களின் சேவைக்காக விரைவில் வரவுள்ளதாக இனிப்பானசெய்தி கிடைக்கிறது. 1983 இல் நெடுந்தீவு படகுகளில் வயர்லஸ் தொலை தொடர்புக் கருவி பொருத்தப்பட வேண்டும் எனவும் அதன் அவசியம் குறித்தும் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் அப்போதைய இயந்திரப் பொறியியலாளரான ஆர்.நித்தியானந்தானிடம் சுட்டிக் காட்டியதும் அது அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நினைவுக்கு வருகின்றது. புதியபடகில் இந்த வசதியும் ஏற்படுத்தப்பட வேண்டும் இது அவசியமானதும் அத்தியாவசியமானதுமாகும். இதனைக் கவனத்தில் எடுப்பதுடன் புதிய படகுடன் புனரமைத்து மீளவும் நெடுந்தீவு மக்களுக்காக சேவைக்கு வரவுள்ள குமுதினியையும் சிறந்த முறையில் பராமரித்துப் பாதுகாக்க அரச படகுகள் தொர்பான பணிமனை ஒன்றை நெடுந்தீவில் அமைக்கவும் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் எடுக்க வேண்டும்.

ஏனெனில் நெடுந்தீவின் முக்கிய தேவை என்ன என்பது எவரைக்கேட்டாலும் ஓர் ஒழுங்கான படகுச்சேவையே என்பார்கள்.

- தாருந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டத்தில் இயங்கிவரும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள்



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டறவுச் சங்கங்கள் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கமுடியாத நிலையில் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கி வருவதாக கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் 24 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தபோதிலும் ஒரு சில சங்கங்களைத் தவிர எனைய சங்கங்கள் நட்டத்தில் இயங்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள், கொள்வனவு அதிகாரிகள் போன்றோரின் நிர்வாகச்சீர்கேடுகள், முறையற்ற செயற்பாடுகள், ஊழல் நடவடிக்கைகள் போன்ற காரணங்களினாலேயே இச்சங்கங்கள் நட்டத்தில் இயங்கும் நிலை உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, காரைநகர் போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாமல் திண்டாடுவதாகவும், சில கூட்டுறவுச் சங்கங்களில் மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக வழங்கப்பட்டு வந்த 2875 ரூபாவும் தற்போது வழங்கப்படுவதில்லை என்றும் இதனால் யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கத்தில் அனைத்து ஊழியர்களும் சேர்ந்து மாதச்சம்பளம் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சில கூட்டுறவுச் சங்கங்கள் ஆட்குறைப்புச் செய்துள்ளதோடு தீடீரெனப் பல கிளைகளையும் மூடிவிட்டதாகவும், மூடப்பட்ட கிளைகளில் வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பொருட்களை வேறு கிளைகளுக்கு மாற்றியுள்ளதாகவும் இதனால் நிவாரணம் பெறும் மக்கள் நீண்ட தூரம் சென்று குறிப்பிட்ட கிளைகளில் நிவாரணப் பொருட்களைப் பெற வேண்டியுள்ளதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற வாசகத்துடன் ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்' என்ற கூற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதே கூட்டுறவுச் சங்கங்களாகும்.

கடந்த காலங்களில் குறைந்த விலையில் தரமான நுகர்வுப் பொருட்களை பாவனையாளருக்கு வழங்கி பொது மக்களிடையே நன் மதிப்பைப் பெற்று விளங்கிய கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தனியார் கடைகளை விட கூடுதலான விலைக்கே பொருட்களை விற்பனை செய்து வருவதால் கூட்டுறவுக் கடைகளின் பக்கமே பொது மக்கள் எட்டிப்பார்க்காத நிலை உருவாகி வருகிறது.

ஏ- 9 பாதை பூட்டப்பட்ட போதும், பொருளாதாரத்தடை விதிக்கப்பட்ட காலங்களிலும் தேவையான பொருட்களைக் குறைந்த விலையில் கூட்டுறவுச்சங்கங்கள் பொது மக்களுக்கு வழங்கிவந்ததோடு இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களையும் பெருமளவில் வழங்கி வந்ததால் யாழ்.மாவட்ட மக்கள் தமது அன்றாட அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்காக கூட்டுறவுச் சங்கங்களையே நம்பியிருந்த காலம் ஒன்று இருந்தது.

இன்று இந் நிலை மாறி சங்கக் கடைகளில் சாமான் விலை என்று சாதாரண மக்களும் பேசிக்கொள்ளும் வகையில் பொருட்களின் விலை உயர்வாக உள்ளது.



தனியார் கடைகளில் 55 ரூபாவுக்குப் பெறக்கூடிய நாட்டரிசியை கூட்டுறவுச் சங்கங்கள் 60 ரூபாவுக்கும் தனியார் கடைகளில் 36 முதல் 40 ரூபா வரையில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு டசின் தீப்பெட்டியை கூட்டுறவுச் சங்கங்கள் 48 ரூபாவுக்கும் விற்பனை செய்து வருகின்றன.

இவ்வாறே மிளகாய், மல்லி, உருளைக்கிழங்கு, உழுத்தம் பருப்பு சீரகம், தேயிலை போன்ற பொருட்களும் தனியார் கடைகளை விட கூட்டுறவுச் சங்கங்கக் கடைகளில் அதிக விலைக்கே விற்கப்பட்டு வருகின்றன.

உள்ளூரில் கொள்வனவு செய்வதும், கொள்வனவில் சிலர் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. அநேகமாக எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் சொந்தமாக லொறிகளை வைத்திருந்த போதிலும் அவர்கள் கொழும்புச் சென்று பொருட்களைக் கொள்வனவு செய்வதில் கவனம் செலுத்தாது உள்ளூரில் கொள்வனவு செய்வதன் மர்மம் தங்களுக்குப் புரியவில்லையெனக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், பொது முகாமையாளரும் சேர்ந்து ஊழல் மோசடியில் ஈடுபடுவதைக் கண்டித்து மேற்படி கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் கடந்த காலத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்கு முன்னால் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது ஆர்ப்பாட்டம் தொடர்பாகவும் எடுத்துக் கூறினர்.

2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலாபத்தில் இயங்கி வந்த யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது பாரிய நட்டத்தில் இயங்கி வருகிறது. இந்த நட்டத்திற்குக் காரணமாகவும், பொறுப்பாகவும் இருக்கின்றவர்கள் சங்கத்தின் தலைவரும் பொது முகாமையாளருமே தவிர எமது ஊழியர்கள் அல்ல என அவர்கள் மேலும் கருத்துத் தெரிவித்தனர்.

ஊழல்களும் மோசடிகளும் நிறைந்த எமது தலைமைத்துவத்தின் தவறான வழி நடத்தல்களால் நாங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளோம். குறிப்பாகப் பொது முகாமையாளரைச் சந்திக்கச் சென்றால் இப்போது சந்திக்க முடியாது என்று கூறுவதுடன் தகாத வார்த்தைகளாலும் ஏசுகின்றனர்.

அவர்கள் செய்யும் ஊழல்களை வெளியே சொன்னால் வேலை போய்விடும் அல்லது பிரச்சினைகள் ஏற்படும். இவர்களைப் பற்றி விமர்சித்த ஊழியர்களைப் பழிவாங்கும் முயற்சியாகப் பதவியில் இருந்து இறக்குவது, மற்றும் இடமாற்றம் செய்வது போன்றவையும் நடைபெற்றுள்ளன.

அரசியல் கட்சிகளின் பெயர்களைச் சொல்லி அச்சுறுத்துவதுடன், சில ஊழியர்கள் வேறு வழிகளிலும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி 28 பேருக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்துக்கான சான்றுக் கடிதம் ஒருவருட காலமாகியும் இன்னும் வழங்கப்படவில்லை.

**ஊழலும் கொள்ளையும்** நிறைந்த இந்தத் தலைமைத்துவத்தை மாற்றவேண்டும் நட்டத்தில் இயங்கி வரும் எமது கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் இலாபமடையச் செய்ய வேண்டும். நிரந்தர நியமனக் கடிதத்தைப் பெற்றுத்தர வேண்டும் வாழ்க்கைச் செலவுப் பணத்தை மீண்டும் பெற்றுத் தர வேண்டும் என்றும் அமைச்சரிடம் வலியுறுத்தினர்.

அவர்களது கோரிக்கைகளுக்குக் கௌரவ அமைச்சர் பதிலளிக்கையில், உங்களது பிரச்சினைகளுக்கு நிச்சயமாக நல்லதொரு தீர்வு காணப்படும். அது வரைக்கும் அமைதியாக இருந்து ஒத்துழைப்பைத் தர வேண்டும். அனைவரும் தமது மாதாந்த ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மீண்டும் உங்களை நேரில் சந்தித்து இப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை வழங்குவேன் என்றும் உறுதியளித்தார்.

இதே வேளை யாழ்.மாவட்டத்தில் உள்ள அச்சுவேலி, நல்லூர் போன்ற ஒரு சில கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்குப் பொருட்களை வழங்குவதோடு சிறந்த நிர்வாகத்தில் சிறப்பாக இயங்கிவருவதாகவும் கூறப்படுகிறது.

கௌரவ அமைச்சர் அவர்களும் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள், அரசாங்க அதிபர் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு பொது மக்களுக்கு நியாயமான விலைகளில் பொருட்கள் விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதோடு, நட்டத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மீட்டெடுத்து இலாபத்தில் இயங்கச் செய்ய வேண்டுமென்றும் கூட்டுறவுத்துறை ஊழியர்களும், பொதுமக்களும் வேண்டுகோள் விடுகின்றனர்.

**—வட்டுக்கோட்டை நிருபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 4 இல் பிறந்தவருக்குரிய பலன்கள் - இராகு

சர்வவல்லமையுள்ள இராகு பகவானின் ஆதிக்கத்திற்குரிய எண்ணான 4 ஐப் பற்றிப் பார்ப்போம். (சாதகத்தின் படி) நவக்கிரகங்களின் பலத்தில், இராகு பகவான் தான் பலவான் என்றாலும், எண்களை சாத்திரத்தில் நான்கு எண் அவ்வளவு வலிமை மிகுந்த எண்ணாகச் சொல்லப்படவில்லை! சூரியனின் எண்ணான 1 ஆம் எண்ணைச் சார்ந்தே இதன் பலன்களும், நடைமுறைகளும், அதிர்ஷ்டங்களும் உள்ளன! மேலும் 1 ஆம் எண்ணிற்கு மிகவும் நட்புடையதாகவும் விளங்குகிறது.

வெளிநாட்டு எண்கணித மேதைகள் இதை (4 எண்) யுரேனஸ் என்னும் கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாகக் கூறுகிறார்கள். இவர்கள் வாய்ப் பேச்சில் இன்பம் காண்பவர்கள். நாவன்மை அதிகமுள்ள இவர்கள் வீட்டிலும், வீதியிலும், காபி, டீக்கடைகளிலும், கோவில்களிலும் ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும், கையை ஆட்டி, குரலை ஏற்றி, இறக்கி, உணர்ச்சியுடன் பேசி மக்கள் மனதைக் கவருவார்கள். பலமணி நேரம் பேசும் இயல்பினர். எப்போது ஒரு சனக்கூட்டம் இவர்களைச் சுற்றியே நிற்கும்.

இவர்கள் இரகசியங்களைக் காப்பாற்ற மாட்டார்கள். எந்த ஒரு விஷயத்தையும், வேலையையும், அடுத்தவரிடம் சொல்லிப் புலம்பாது இருக்கமாட்டார்கள். இவர்களிடமிருந்தே திட்டத்தை அறிந்து கொண்ட இவர்களது நண்பர்கள் அந்தத் திட்டத்தை அவர்களே விரைந்து சென்று செயலாற்றி, வெற்றி பெற்று விடுவார்கள். எனவே இவர்கள் அதிர்ஷ்டமான வாழ்க்கை வாழ வேண்டுமானால் முதலில் நாகாக்க வேண்டும்.

### இவர்களது தொழில்கள்

ஒப்பந்த தொழில்கள், கார், லாரி, இரும்பு சம்பந்தப்பட்ட தொழில்கள், பேச்சாளர்கள், சோதிட நிபுணர்கள் ஆகியவை இவர்களுக்கு ஒத்து வரும். இவர்களில் பலருக்கு நல்ல ஆராய்ச்சி மனப்பான்மையும் உண்டு! துப்புத் துலக்கும் பணிகளிலும் விரும்பி ஈடுபடுவார்கள்.

### திருமண வாழ்க்கை

பெரும்பாலும் இளமையிலேயே இவர்களின் திருமணம் அமைந்துவிடும். மனைவியுடன் எப்போதும் விதண்டாவதம் செய்பவர்களானாலும் குடும்ப பாசத்திலும் அன்பிலும் சிறந்தவர்கள். தூய்மையே மிகவும் புனிதமாகப் போற்றுவார்கள். தாங்கள் காதலித்தவர்களை சமூகத்தின் கட்டுப்பாட்டையும், எதிர்ப்பையும் மீறி மணந்து கொள்ளும் வேகமும், தைரியமும் உண்டு!

### பாபுஜீ

இவர்கள் 1, 8 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களை மணந்து கொண்டால் (பிறவி எண் மற்றும் கூட்டு எண்) நல்ல திருமண வாழ்க்கை அமையும். 5 அல்லது 6 எண்களின் பிறந்த பெண்களும் இவர்களுக்கு நன்மையே செய்வார்கள். இருப்பினும் 4 ஆம் திகதிகளில் பிறந்த ஆண்கள், 6 ஆம் எண்ணில் பிறந்தவர்களுடன் திருமணம் செய்து கொண்டால் அவர்களது பொருளாதார வசதிகள் முன்னேற்றமடையும். இவர்கள் தங்களுடைய திருமணத்தை 1 அல்லது 6 எண்ணாக வரும் திகதிகளில் (திகதி எண் அல்லது கூட்டு எண்) வைத்துக் கொண்டால், திருமண வாழ்வின் இன்பத்தை அடையலாம்.

### நண்பர்கள்

பொதுவாக 1, 2, 4, 6 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களை நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் வைத்துக் கொள்ளலாம். 8 ஆம் திகதி பிறந்தவர்களை நண்பர்களாக வைத்துக் கொள்ளலாமே தவிரப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. 1 ஆம் எண்காரர்கள் இவர்களைத் தங்கள் ஆளுமைக்குள் கொண்டு வந்து, இவர்களையும் முன்னேறச் செய்வார்கள்.

### 4 ஆம் தேதி பிறந்தவர்கள்

இவர்கள் கரகரப்பாகப் பேசுவார்கள். கண்டிப்பும், அதிகாரமும் நிறைந்து பேசுவார்கள். இவர்களுக்குத் துணிச்சலும், பலமும் அதிகம். பொலிஸ், போர் வீரர்கள் போன்று உடல்வாகு அமையும். அடிக்கடி இவர்களுக்குச் சோதனைகள் ஏற்படும். அதைக் கண் கலங்காமல், செயல்பட்டு வெற்றி அடைவார்கள். இளமையிலேயே திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது! குடும்ப பாரத்தைச் சுமக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். கணவன் மனைவி அன்யோன்யம் உண்டு! தெய்வ பக்தியும் இருக்கும்.

### 13 ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் துன்பங்களையே அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்பார்கள். உண்மை அதுவன்று! சோதனை இல்லையேல் சாதனை இல்லை. இவர்களது இளமைக் காலப்போராட்டங்கள் எல்லாம் பிற்காலத்து வசதியான வாழ்விற்கு அடித்தளமாக அமைந்துவிடும். காரணமில்லாமல் பலருடைய எதிர்ப்பையும், விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டியது வரும். இவர்கள் யாருக்கு உதவுகிறார்களோ, அவரே இவர்களுக்குத் துரோகம் செய்வார்கள். கடலில் அலை ஓய்வதில்லை. அதைப்போன்றுதான் இவர்களது பிரச்சினைகளும். இருப்பினும் தங்களின் கடும் உழைப்பால் பேரும் புகழும், பெருஞ்செல்வமும், மிகச் சிறப்பாகத் தேடிக் கொள்வார்கள். எதிர்பாராமல் வரும் துன்பங்களெல்லாம் எதிர்பாராமலேயே விலகி ஓடும். ஆணவம் கொண்டு செயலாற்றினால் துன்பம் நிச்சயம். நேர்மையும், கடுமையான உழைப்புமே இவர்களை உயர்த்தி விடும்.

### 22 ஆம் திகதி பிறந்தவர்கள்

அதிக நண்பர்களும், நல்ல பேச்சு சாமர்த்தியமும் உண்டு. நிர்வாகத் திறமையும், பிடிவாதமும் உண்டு. எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்று குறுக்கு வழியில் துணிந்து இறங்கி விடுவார்கள். பின்பு அதனால் பிரச்சினைக்குள்ளாவார்கள். இவர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். இல்லையெனில் இவரைச் சேர்ந்தவர்களே கவிழ்த்து விடுவார்கள். வீம்புக்காகச் சில செயல்களில் ஈடுபட்டால். தோல்விகளே மிஞ்சும். அரசியல், சினிமா, போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டங்கள் உண்டு. தீய நண்பர்களைத் தெரிந்து அவர்களை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

### 31 ஆம் திகதி பிறந்தவர்கள்

சுய திருப்தியே இவர்களுக்கு முக்கியமாக இருக்கும். பணம் இவர்களைத் தேடி வர வேண்டுமே தவிர, இவர்கள் பணத்தைத் தேடினால் கிடைக்காது. தீவிரத் தன்மையும் அதிகாரம் செய்வதும் இவர்கள் குணம். உலக சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

மனோசக்தி மிகுந்தவர்கள். ஆன்மிகம், சோதிடம், வேதாந்த ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உண்டு. எதிரிகளைத் துணிவுடன் சந்திப்பார்கள். உலகத்தில் உள்ள பல விஷயங்களையும், இவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். மற்ற மனிதர்களை உடனே எடை போடும் சாமர்த்தியம் உண்டு. அரசியலில் ஈடுபட்டால் நல்ல பதவிகள் கிடைக்கும்.




''வாஸ்து ஜோசியரால எனக்கும் அடுத்த வீட்டுக்காரருக்கும் பயங்கர சண்டை!''
''ஏன்? என்ன நடந்தது...?''
''வீட்டின் இடதுபக்கம் ஜன்னல் வைக்கச் சொன்னார். இடது பக்கம் தான் அடுத்த வீட்டுக்காரரின் பாத்ரூம் இருக்கு...!''




''காலிலே காயம் எப்படி ஏற்பட்டது? - டாக்டர்''
''சுருட்டுப் பிடிக்கிறதை நிறுத்தீட்டேன் அது தான்...!'' - வந்தவர்
''சுருட்டுப் பிடிப்பதை நிறுத்தியதற்கும் காலில் ஏற்பட்ட காயத்துக்கும் என்ன சம்பந்தம்?'' டாக்டர்.
''சுருட்டு கீழே விழுந்து காலை சுட்டு விட்டது டாக்டர்!''




''எதுக்கு ஆபீசுக்குப் பால் கொண்டு போறீங்க?''
''பால் குடிக்கலேன்னா எனக்குத் தூக்கம் வராது!''




''என்னடி தொப்புள்ள இருந்து புகை வருது?''
''வயிற்றேரிச்சல்... அடுத்த வீட்டில் எல்.சீ.டி. டீ.வி வாங்கி இருக்காங்க!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு பற்றிய விழிப்புணர்வு உயர்கல்விக்கோர் திறவுகோல்



**உலகெங்கும் 6,000 க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள், கல்விசார் அமைப்புகள் அயெல்ஸ் கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் நுழைவு அனுமதி வழங்குகின்றன.**




நன்றி :- ஆங்கில இணையம்

**அபி.தேவகுமார்**

அயெல்ஸ் உலகில் முதன்மையான ஆங்கில மொழிக்கான திறனாய்வுப் பரீட்சையாகும். இப் பரீட்சையில் கிடைக்கப் பெறும் கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில், ஆங்கில மொழி பேசும் நாடுகளில் உயர் கல்வி, குடியுரிமைபெறல் போன்ற காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு சராசரி கணிப்பின் படி 1.4 மில்லியனுக்கும் அதிகமானோர் 135 க்கும் அதிகமான நாடுகளில் இருந்து இப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவ் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் மிகை வேகத்தில் அதிகரித்துச் செல்கிறது. உலகெங்கும் 6,000 க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள், கல்விசார் அமைப்புகள் அயெல்ஸ் கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் நுழைவு அனுமதி வழங்குகின்றன.

இதனால் உலகெங்கும் ஆங்கில மொழி திறனாய்வுப் பரீட்சை முறைக்கு கற்போரின் எண்ணிக்கையும், பயிற்சி மையங்களும் பெருகிவருகின்றன.

அயெல்ஸை உலகில் பிரசித்திப் பெற்றதும் நம்பமுகமான கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் (University of Cambridge ESE / Examination), பிரிட்டிஷ் கவுன்சில் (British Counsil), ஐடிபி அவுஸ்திரேலியா (IELTS : IDP Australia) ஆகிய மூன்றும் இணைந்து நிர்வகித்து வருகின்றன.

இவை இன்று உலகெங்கும் 500 க்கும் அதிகமான தேர்வு மையங்களை கொண்டு, ஒவ்வொரு மாதமும் நான்குக்கும் மேற்பட்ட தேர்வுகளை நடாத்தி வருகின்றன. தேர்வுக்கு தோற்றுபவர்கள் தாம் வாழும் நாட்டில், தமக்கு அண்மித்த நகரத்தில் தோற்ற முடியும்.

IELTS என்பதன் முழுச்சொற்றொடர் International English Language Testing System என்பதாகும். தமிழில் 'சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுப் பரீட்சை' அல்லது 'சர்வதேச ஆங்கில மொழிக்கான தேர்வு முறை' எனப்படும். இதனை ஐ ஈ எல் டி எஸ் என்று எழுதினாலும், உச்சரிக்கும் போது 'அயெல்ஸ்' என்றே உச்சரிக்கவேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [03.12.10 முதல் 10.12.10 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

**மேஷம்**

மேஷ ராசி அன்பர்களுக்கு ஓரளவுக்கு அனுகூலமான பலன் ஏற்படும். குடும்ப நிலையில் அனுகூலமான பலா பலன்கள் ஏற்படும் நிலையுண்டு. தொழில் ஸ்தான நிலையில் வேலைப்பளு, அலைச்சல் என்பன ஏற்பட்டு மறையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. உடல் நிலையில் சிறுசிறு சுகயீனம் மருத்துவ செலவு ஏற்படும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பெண்களுக்கு மன மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

**இடபம்**

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலா பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் அனுகூலமான விடயங்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு.

வரவு சிறப்பாக அமையக்கூடிய பலன்கள் ஏற்படும். குடும்ப நிலையில் மகிழ்வும் மன நிறைவுகளும் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு அனுகூல நிலையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி அமையும்.

**மிதுனம்**

மிதுன ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலா பலன்களே ஏற்படும். தொழில் நிலையில் சற்று அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் சற்று மந்தமான பலன்கள் இருக்கும். சற்று சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. தேவையற்ற பிரச்சினைகளில் சிக்கும் நிலை ஏற்பட பலனுண்டு.

கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு சுமாரான பலன் ஏற்படும். மாணவர்கள் முயற்சி தேவை.

**கடகம்**

கடகராசி அன்பர்களுக்கு அனுகூலமான சிறப்பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையில் முன்னேற்றமும் நிறைவும் ஏற்படும். குடும்ப நிலையில் மகிழ்வும் மன நிறைவும் அமைந்திருக்கும். பணவரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

**சிம்மம்**

சிம்மராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் சற்று அலைச்சல் நிலைகள் இருக்கும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் சிறுசிறு இழுபறி நிலைகள் தொடரும். பணவரவு மத்திமமான நிலையில் அமையும் பலனுண்டு. கடன் விவகாரங்களில் சிறு சிறு மந்த நிலை தொடரும். பெண்களுக்கு மத்திமபலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

**கன்னி**

கன்னி ராசி அன்பர்களுக்கு மத்திமமான பலாபலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு கொள்ள வேண்டும். தொழில் நிலைகளில் சிறுசிறு அலைச்சல், வேலைப்பளு அமைந்திருக்கும். குடும்ப நிலையில் மனச்சஞ்சலம், செலவுகள் அமையும் பலனுண்டு. பணவரவு ஓரளவிற்கு அனுகூலமான நிலையில் அமைந்திருக்கும். கடன் விவகாரங்களில் சற்று மந்தமான நிலை தொடரும். பெண்களுக்கு மகிழ்ச்சியுண்டு. மாணவர்கள் முயற்சி கொள்ள வேண்டும்.

**துலாம்**

துலா ராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் சிறப்பாக அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் மேன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும், மன நிறைவுகளும் அமையும் பலன் உண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. பண வரவு திருப்திகரமான நிலையில் அமைகின்ற பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலையில் வேலைப்பளு,அலைச்சல் அமைந்திருக்கும். குடும்ப நிலையில் மனச்சஞ்சலம், செலவீனம் என்பன ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு கொள்ள வேண்டும். பண வரவு ஓரளவிற்கு அனுகூலமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சற்று மந்தமான செயற்பாடு அமைந்திருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

**தனுசு**

தனுசுராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலா பலன்கள் அமைய இடமுண்டு. பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமைந்திருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் வெற்றிகள் அமைய அனுகூலமுண்டு. கடன் நிலைகளில் சற்று நன்மைகள் அமைய இடமுண்டு. பெண்கள் முயற்சி நிலை எடுக்க வேண்டும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

**மகரம்**

மகர ராசி அன்பர்களுக்கு சிறப்பான பலா பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் அனுகூலமான பலன்கள் அமையும். குடும்ப நிலையில் மகிழ்வும் மன நிறைவும் அமைந்திருக்கும். பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலன் உண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றி ஏற்படும். கடன் விவகாரங்களில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு மனமகிழ்வு ஏற்படும். மாணவர்களுக்கு [illegible] உண்டு.

**கும்பம்**

கும்ப ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல நிலை இருக்கும். குடும்ப நிலையில் சற்று அலைச்சல், மனச் சஞ்சலம் அமைந்திருக்கும். தொழில் நிலையில் வேலைப்பளு, பிரயாணம் என்பன ஏற்படும். பணவரவு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் கூடிய கவனம் கொள்ள வேண்டும். கடன் விவகாரங்களில் இழுபறி நிலைகள் தொடரும். பெண்களுக்கு மகிழ்வு உண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.

**மீனம்**

மீன ராசி அன்பர்களுக்கு சிறப்பான வெற்றிகள் அமையும். தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் அதிகம் அமைந்திருக்கும். குடும்ப நிலையில் நல்ல மகிழ்வும் மன நிறைவும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். எடுக்கும் விடயங்களில் பூரணமான வெற்றி ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்றவாரத் தொடர்ச்சி)

பண்டைய சமூகத்தில் பரவலாக வழக்கிலிருந்த நாக என்ற தனிநபர் பெயர் சமகாலத்தில் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த தமிழ், சிங்கள மன்னர்களின் பெயர்களிலும் காணப்பட்டன. இதற்கு உதாரணமாக துல்லநாஹ (கி.மு.119), கல்லநாஹ (கி.மு.109-103), சோறநாஹ (கி.மு. 63-51), மகாநாஹ (கி.பி.7-19) இளநஹ (கி.பி.33-43), மல்லநாஹ (கி.பி.136-143), குஜநாஹ (கி.பி.186-187) குஞ்சநாஹ (187-189), ஸ்ரீநாஹ ( கி.பி. 189-209), அபயநாக (231-240) ஸ்ரீநாஹ கி.பி.240-242), போன்ற மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். இதில் நாஹ என்ற பெயர் மன்னர்களின் இயற்பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வருவதையும், ஸ்ரீநாஹ என்ற பெயருக்குரியவர்கள் மாறிமாறி அநுராதபுரத்தில் ஆட்சி செய்ததையும் நோக்கும் போது இப்பெயர் குலப்பெயராக அல்லது வம்சப் பெயராகப் பயன்படுத்தியிருக்கலாம் எனக் கூறலாம். மேலும் இதில் வரும் மன்னர்களின் பெயர்கள் பாளி மொழிக்கு ஏற்ப திரிபடைந்திருந்தாலும் அவர்களில் சிலரைத் தமிழ் அரசர்களாகவும் அடையாளம் காணமுடிகிறது (பத்மநாதன் 2006).

ஆதியில் நாகவினக் குழு அல்லது அப்பெயர் கொண்ட மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்திருந்தும் வரலாற்று மூலங்களில் அநுராதபுரத்திற்கு வடக்கிலுள்ள பிராந்தியமே நாகதீபம் என அவ்வினத்தின் பெயரால் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது நாகதீபத்துடன் நாக இனமக்களுக்குள்ள உறவையும், வரலாற்றுத் தொடர்பையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இதற்கு இலங்கையின் ஏனைய பிராந்தியங்களில் வாழ்ந்த மக்கள் படிப்படியாக பிராகிருத மொழி பேசிய மக்களுடன் கலப்புற்ற போது நாகதீபத்தின் பூர்வீகக் குடிகளான நாகர் மொழியால் தம்மை தமிழராக்கிக் கொண்டமையும், மதநம்பிக்கையில் நாக வழிபாடு தமிழர் வழிபாட்டுடன் இரண்டறக் கலந்தமையும், மொழி, பண்பாட்டால் அருகிலுள்ள

## மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்

தமிழகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுடிருந்தமையும் காரணம் எனக் கூறலாம். இந்த வேறுபாடுகளால் நாக தீபம் அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உட்படாத பிராந்தியமாக வளரக் காரணமாகியது. இந்த உண்மையை வரலாற்று மூலங்கள் நாகதீபத்தை தனித்து அடையாளப்படுத்துவதிலிருந்த அறிய முடிகிறது.

4

அநுராதபுர அரசை முதன்மைப்படுத்திக் கூறும் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்ஸம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப்போராட்டத்தை தீர்த்துவைத்ததாகக் கூறுகிறது (Mahavamsa 8:54). இதில் மஹாவம்ஸம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும் இந்நூல் எழுதப்பட்ட கி.பி 5ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதை இவ் வரலாற்றுச் செய்திகள் உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம். ஆதிகாலத்தில் இந்தியாவை அடுத்து இலங்கையுடன் அதிக அளவில் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்ட வரலாறு கிரேக்க, உரோம நாட்டு வணிகர்களுக்கு உண்டு. இவ்வுறவுகள் பெரும்பாலும் வடஇலங்கைத் துறைமுகங்களுடாக நடைபெற்றதை மாதோட்டம், கந்தரோடை, பூநகரி, சாட்டி போன்ற இடங்களில் பெறப்பட்ட கிரேக்க உரோம நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள், மதுச்சாடிகள், நாணயங்கள் என்பன உறுதி செய்கின்றன. இவ்வணிக உறவுகள் பற்றிக் கூறும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நாட்டவரது நூல்களில் இலங்கையில் இருந்த முக்கிய கரையோரப்பட்டினங்களில் ஒன்றாக 'நாகதீப' என்ற இடம் கூறப்பட்டிருப்பதுடன், அவ்விடம் அவர்கள் வரைந்த தேசப்படத்தில் இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Weera-kody 1997:87). இது பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் நாகதீபம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். இக்கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் 1936 இல் வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொற்சாசனத்தில் வரும் இடப்பெயரும் காணப்படுகிறது. கி.பி.3-4ஆம் நூற்றாண்டுக்குரிய இச்சாசனத்தில் 'நாகதிவ' என்ற இடத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை பற்றிக் கூறப்படுகிறது (Paranavitana 1982:79-80). இந்த 'நாகதிவ' என்ற பெயர் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாகதீபம் என்பதில் எந்த ஐயமுமில்லை. இச்சாசனத்தில் காணக்கூடிய சிறப்பம்சம் சாசனத்தில் பிராகிருத மொழியுடன் சில தமிழ்ச் சொற்களின் செல்வாக்கு கலந்திருப்பதுடன் 'நாக' என்ற இடப்பெயரை எழுதுவதற்கு வடமொழிக் 'ஹ' (ga) வுக்குப் பதிலாக தமிழுக்குரிய 'க' (ka) பயன்படத்தப்பட்டிருப்தாகும். இந்த வேறுபாடுகள் இச்சாசனத்தை நாக தீபத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் எழுதியிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டு பிடிக்கப்பட்ட கி.மு.1ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சாசனம் ஒன்று இங்கிருந்த நாகநகர் பற்றிக் கூறுகிறது (Karunaratne 1984:82). இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் 'நஹநஹர' (Naganara) என எழுதப்படும் இப்பெயர் இச்சாசனத்தில் தமிழில் ந(ா)கநகர் (Nakanakar) என எழுதப்பட்டுள்ளது (படம்-4).



படம் 4

நகர் என்பது ஒரு தமிழ்ச் சொல். இது தமிழிலும் மலையாளத்திலும் நகர் (Nakar) எனவும், வடமொழியில் நஹர (Nagara) என்றும் அழைக்கப்படும். ஆனால் பேராசிரியர் பரணவிதானா இப்பெயரை நகர என வாசித்திருப்பதன் மூலம் இதை வடமொழி சார்ந்ததாக எடுத்துக் கொள்கிறார். (Paranavi-tana 1970: 112) ஆனால் ஆதிப்பிராமிச் சாசனங்களில் மெய்யெழுத்தை குறிக்கப் புள்ளிகள் இடப்படாததால் அவை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மெய்யெழுத்தாக எடுத்து வாசிக்க வேண்டியுள்ளது. இதனால் சாசனத்தில் 'நகர' என்ற சொல்லின் இறுதியில் வரும் எழுத்தை 'ரா' (ra) என வாசிக்காது 'ர்' (r) என வாசிப்பதே பொருத்தமாகும்.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(தொடரும்)

## வாழ்க வளமுடன் வளர்க் உமது சேவை

யாழ் மக்களின் கடந்த பல வருடங்களாக நீறு பூத்த நெருப்பாக முடங்கிக்கிடந்த கனவு இன்று யாழ் ஓசை மூலம் நினைவுபடுத்தப்படுவதையிட்ட மிகவும் மகிழ்வடைகிறோம்.

நாடு அமைதியடைந்து அமைதிப்பூங்காவாக மாறிவரும் இவ்வேளையில் அமைதிப் பூங்காவில் பூத்த மலராக யாழ் ஓசை பூத்து குலுங்குவதில் அதை நுகர்ந்து வாசனை அனுபவிக்கும் எம் சந்ததியினருக்கான ஓர் வரப்பிரசாதமாக யாழ் ஓசையின் ஜனனம் அமைந்துள்ளது. அதனை நாம் வரவேற்கிறோம். எனவே உங்கள் பணி எமது யாழ்.குடாவில் சிறப்பாக தொடர்வதற்கு எமது இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள். தங்கள் பணி பாரெங்கும் பரவட்டும் வாழ்க வளமுடன் வளர்க் உமது சேவை

குடும்பம்
மேற்கு 02.

## நிலை பெற வாழ்த்துகிறேன்

யாழ் ஓசை பத்திரிகையை நிறை
வாய் வரவேற்கிறோம். எம் மண்
ணில் புதிதாய் வந்தாலும் வலிதாய்
நிலை பெற வாழ்த்துகிறேன்.

ஆர்.ஜெ.பிரகலாதன்
உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறை வாழ்வியல் சம்பவங்களை நகைச்சுவையூடாக வெளிக்கொணர்ந்த நாடக விழா

மனித வாழ்க்கை முறையில் கலை மிக முக்கியமான வாழ்வியல் கூறாக உள்ளது. இத்தகு கலைகளுள் நாடகக்கலையும் ஒன்றாகும். நாடகமானது தாம் வாழும் சமூகத்துடன் எளிமையான முறையில் தொடர்பு கொள்ளக் கூடியதும் மக்களை கவர்ந்திழுக்கக் கூடியதுமான கலைவடிவமாக விளங்குகின்றது.

நாட்டிலே ஏற்பட்ட நீண்ட யுத்தத்திற்கும் ஒடுக்கு முறைக்கும் இடையில் இரவுப்பொழுதுபோக்குகள் இல்லாத் நிலையில் நாடகக் கலையிலும் யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் ஒரு தேக்க நிலை காணப்பட்டது. யுத்தம் முடிவடைந்த நிலையில் இரவுப் பொழுதுகளில் நாடகக்கலையானது துளிர் விடுகின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது.





இரவுப்பொழுதினை யாழ்ப்பாண மக்கள் சுவாசிக்கின்ற வேளையில் படிப்படியாக கிராமங்கள், ஆலயங்கள், கல்வி நிறுவனங்கள் தங்களது நிகழ்வுகளைப் படிப்படியாக ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வேளையில் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் செம்மணி வீதியில் உள்ள சி.சி. த.க.பாடசாலை விளையாட்டு மைதானத்தில் யூன் 21 முதல் யூலை02 வரையான காலப்பகுதியில் மக்கள் களரியின் நாடக விழாவானது சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்துக்குத் தனது நாடகப் பயணத்தை மேற்கொண்ட மக்கள்களரியின் நாடக விழாவானது மகிழ்ச்சி கரமான இரவுப்பொழுதுகளை எமக்கு வழங்கியுள்ளது.

### மக்கள் களரி

மக்கள் களரி நாடக நிறுவனமானது பராக்கிரமநிரியல்ல, ஏச்.ஏ.பெரேரா போன்ற புகழ் பெற்ற நாடகக்கலைஞர்களினால் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந் நாடக நிறுவனமானது இலங்கையின் நவீன நாடகக் கலாசாரத்தின் முன்னெடுத்தலாக நாடகப்பயணத்தை ஆரம்பித்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

மக்கள் களரியின் சிறப்பம்சம் ஆனது அதன் ஆற்றுகை வெளியும், அரங்கமைப்புமே என்பதில் மிகையில்லை. நாற்றிசைகளிலும் பார்வையாளர்கள் இருந்து பார்க்கக்கூடிய எமது பாரம்பரிய அரங்கான வட்டக்களரி முறையில் ஆற்றுகை வெளியானது செவ்வக முறையில் அமைந்தமை இதன் சிறப்பாகும். இவ் அரங்கானது நான்கு பக்கங்களிலும் படிப்படியாக உயர்த்தப்பட்ட இருக்கைகளில் சுமார் 500 தொடக்கம் 800 வரையான பார்வையாளர்கள் ஒரே நேரத்தில் இருந்து பார்க்கக்கூடியதாக தமது நடமாடும் அரங்கை அமைத்துள்ளது. இவ்வரங்கு அமைத்ததும் தொழில் நுட்ப விடயங்களை ஒழுங்குபடுத்தியதும் ஆற்றுகையாளர்களே என்பது சிறப்பம்சமாகும்.

மக்கள் களரியானது இலங்கையில் வெவ்வேறு பிரதேசங்களுக்கும் சென்று தங்களது நாடகப்பயணியை ஆற்றி வருகிறது. அரங்க செயல் முனைப்புகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் தமது நாடக செற்பாடுகள் மூலம் அக்குறிப்பிட்ட காலங்களில் முக்கியமாக சக்திகளாக திகழ்ந்து இருக்கின்றன. அந்நோக்கில் இலங்கை நாடக வரலாற்றில் மக்கள்களரி அமைப்பினருக்கும் காத்திரமான பங்கு உண்டு என்பது மிகையில்லை.

**ஆற்றுகை செய்யப்பப்பட்ட நாடகங்கள்:**

**(1) சரண்தாஸ்**
**(2) மாயப்படை**
**(3) திருடன் வந்தான் (சிறுவர் நாடகம்)**
**(4) தேவலோகப்பயணம்**
**(5) செக்கு**
**(6) மிருச்சகடிக(சிங்களமொழியில்)**
**(7) தாகம்**
**(8) இருட்டும் வெளிச்சமும்**
**(9) எருக்கலம்பூ**

இவற்றுடன் யாழ்ப்பாணத்து நாடகங்களான அற்றைத்திங்கள், அபிக்ஞான சாகுந்தலம் என்பனவும் ஆற்றுகை செய்யப்பட்டன. அத்தோடு ரவி பந்து வித்தியாபதி மற்றும் கோபாலகிருஸ்ணர், சத்தியன் ஆகியோரின் தாளதாளம் எனும் இசைவிருந்தும் இடம்பெற்றது.

### நாடகங்களின் தன்மை

நாடகங்களானது சிங்கள மொழி மூலமாகவும் தமிழ் மொழி மூலமாகவும் ஆற்றுகை செய்யப்பட்டன.

சரண்தாஸ் நாடகமானது சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் ஆற்றுகை செய்யப்பட்டது. இங்கு ஆற்றுகையாளர்களான சிங்கள தமிழ் கலைஞர்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்ட பாங்கை அவதானிக்க முடிந்தது. சிங்களக் கலைஞர்கள் தமிழ் மொழி பேசியும் தமிழ் கலைஞர்கள் சிங்கள மொழி பேசியும் ஆற்றுகை நிகழ்த்தினார்கள்.

யார் தமிழர்கள் யார் சிங்களவர்கள் எனக் கண்டு பிடிக்கமுடியாத அளவிற்குத்தமது நடிப்புத் திறனை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆற்றுகை செய்யப்பட்ட நாடகங்களை பொதுவாக நோக்கும் போது ஆழமாகச் சிந்திக்கவேண்டிய கருத்துக்களை நகைச்சுவை பாணியூடாக சிரிக்க வைத்து சிந்திக்கவைக்கின்ற உத்தியைக் கையாண்டுள்ளமை தனிச்சிறப்பம்சமாகும்.

நாடகத்திறன் உடைய கருத்து வெளிப்பாடு, ஆற்றுகையாளர்களின் நடிப்பு, வெளிப்பாட்டுத்திறன், பாத்திரப்பொருத்தம், நாடக உரையாடல்கள், நடனஅசைவுக்கோலங்கள், பாடல்,கருவிகளின்இசை என்பன இணைந்த தன்மையை அவதானிக்க முடிந்தது. மேலும் பாத்திர பொருத்தத்திற்கேற்ப வேடஉடை, ஒப்பனை, எளிமையான கைப்பொருட்கள், அதன் பயன்படுதன்மை, அரங்கப்பொருட்களாக எளிமையான பொருட்களும் அதன் பயன்பாடும் சிந்தனையை வெளிப்படுத்தக்கூடிய குறைந்தளவான காண்பிய வெளிப்பாடு என்பன இந்நாடகத்தின் தரத்தை மேல் உயர்த்தி நிற்கின்றன.

பாடல் மூலம், கதை சொல்லல் மூலம் நாடகம் நகர்த்திச் செல்லப்படும் உத்தி, மரபுவழி ஆற்றுகைகளின் இசைக் கோர்வை, ஆடல் முறை என்பவற்றை தத்துருவமாகப் பயன்படுத்தி நவீன முறைக்கு கொண்டுவந்துள்ளமை சிறப்பாகும். நடிகனின் நடிப்பு வெளிப்பாட்டுக்கு பிரதான சாதனமான உடலின் உடல் வெளிப் பயன்பாடு (Body-Language) அனைத்து ஆற்றுகையாளர்களாலும் அற்புதமாக வெளிப்படுத்தப்பட்டது. நடைமுறை யதார்த்தமான கதைக்கரு ஊடாக நடைமுறை சார் விடயங்களைச் சிந்திக்கத் தூண்டிய படைப்புக்களாக விளங்குகின்றன. ஆற்றுகையாளர்கள் இயல்பான நடிப்பு வெளிப்பாட்டுக்கு ஏற்ப பாத்திர மேற்கொள்ளலை மேற்கொண்டமையும், வெவ்வேறு வகையான பாத்திரங்களை ஏற்கும் போது ஒவ்வொன்றுக்கும் இடையில் வேறுபாட்டை வெளிப்படுத்தியமையையும் அவதானிக்க முடிகின்றது.

### ஆற்றுகையாளர்கள், பார்வையாளர்கள்

மக்கள்களரியின் அரங்க அமைப்பானது ஆற்றுவோர், பார்ப்போர் உறவை நெருக்கமான நிலைக்கு இட்டுச்சென்றது என்பது மிகையல்லை. நாற்பக்கங்களிலும் படிப்படியாக உயர்த்தப்பட்ட இருக்கையிலிருந்து நடுவே நடைபெறுகின்ற ஆற்றுகை பார்ப்போர் பார்க்கும் போது துல்லியமான நடிப்பு வெளிப்பாட்டை ஆற்றுகையாளர்களிடம் இருந்து பெறமுடிகின்றது. ஆற்றுகையாளர்களும் நாற்பக்க பார்வையாளர்களைக் கருத்திற்கொண்டு பார்வையாளர்களது எதிர்வினைகளுக்கு மதிப்பளித்தும் தமது நாடக ஆற்றுகையினை நிகழ்த்தினர். குறிப்பாக திருடன் வந்தான் என்னும் சிறுவர் நாடகத்தில் பார்வையாளர்களிடம் வினாக்களைத்தொடுத்து அவர்களை இணையவைத்தது சிறப்பான விடயமாகும். ஆற்றுகையாளரது நடிப்பு வெளிப்பாட்டை எதிரே உள்ள பார்வையாளர்களது எதிர் வினைகளில் கண்டு களிக்கமுடிந்தமை நாடகரசனையை மேலும் மெருகூட்டியது எனலாம். முடிவாக மக்கள் களரியின் நாடகப் பயணமானது யாழ்பாண நாடகக் கலை ஆர்வலர்களுக்கு விருந்தளிக்கும் ஒன்றாக அமைந்தது. இவ்வாறான நாடக நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் போது நாடக வளர்ச்சிப்போக்கில் படிமுறை வளர்ச்சி ஏற்படும். மக்கள் களரி நாடகக்குழுவினர் வாழ்வியல் நடைமுறைக்கருதுக்களை நகைச்சுவை உத்தி ஊடாகப் பயன்படுத்தி வெளிப்படுத்தியமை சிறப்பம்சமாகும். மேலும் அதன் அரங்களிக்கையும் அரங்கமைப்பும் மக்கள் களரியின் நாடகப் பயணத்தை வெற்றிப்பயணமாகமாக்கியது.

**- எஸ்.ரி.குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாவது நடுவரை விரும்பாத இந்தியா




சர்வதேச கிரிக்கெட் உலகில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் களநடுவரின் தீர்ப்பை ஆட்சேபனைக்குட்படுத்தி அதனை மூன்றாவது நடுவரின் தீர்ப்புக்கு உட்படுத்தும் செயற்திட்டத்துக்கு இந்திய கிரிக்கெட் சபை தொடர்ச்சியாக தனது எதிர்ப்பினை தெரிவித்து வருகிறது.

களத்தில் இருக்கின்ற இருநடுவர்களினதும் தீர்ப்பினை ஆட்சேபனைக்குட்படுதி அதனை மூன்றாவது விடுகின்ற சந்தப்பத்தில் அது கள நடுவர்களை அவமதிக்கின்ற செயற்பாடாகவும் அதே நேரம் அவர்களது நம்பிக்கையற்ற ஒரு நிலையை தோற்றுவிப்பதற்கு ஏற்றதாக விடும் என தெரிவித்துள்ள இந்திய முன்னணி வீரர்கள், நட்சத்திர வீரர்கள் மற்றும் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்கள் என சகலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மூன்றாவது நடுவரிடமிருந்து கிடைக்கின்ற தீர்ப்புக்கள் ஆட்டத்தை அல்லது போட்டியை திசைதிருப்பி விடுவதற்கு அதிகமான சாத்தியங்கள் அமைந்து விடுகின்ற அதேவேளை கள நடுவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்ற நிலையும் ஏற்பட்டு ரசிகர்களிடத்திலும் தர்மசங்கடத்தை தோற்றுவித்து விடுவதாகவும் கிரிக்கெட் அவதானிகள் மற்றும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அதே போல் இந்திய கிரிக்கெட் சபை மட்டுமல்லாது உலகின் 90 வீதமான அணிகளும் அதன் முன்னணி வீரர்களும் இதனை ஏற்று வருகின்றார்கள். ஒட்டு மொத்தத்தில் மூன்றாவது நடுவரின் தீர்ப்பபை விமர்சனத்துக்குள்ளாகி வருகின்றது. எனினும் இந்த மூன்றாவது நடுவரின் தீர்ப்பினால் சாதாகத்தன்மையை அடைகின்ற அணி திருப்த்தி கொண்டாலும் அது கிரிக்கெட் விளையாட்டுக்கு அழகு அல்ல என்பதே மறுக்க முடியாத உணமையாகும்.

சர்வதேச கிரிக்கெட் சபையானது (ஐ.சி.சி) இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதிலொரு முக்கியமான விடயம் என்னவெனில் மூன்றாவது நடுவரின் தீர்ப்பு என்ற விடயத்தில் எந்தவொரு நடுவரும் வரவேற்பதாகவும் தெரியவில்லை.

இந்த நடைமுறையானது ரன் அவுட்டுக்கு பொருதமானதாக இருக்கலாம். ஏனைய ஆட்டமிழப்புகளுக்கு இது பொருந்தாது. அந்த வகையில் பந்து வீச்சாளரும் சரி துடுப்பாட்ட வீரரும் சரி மூன்றாவது நபரான விக்கெட் காப்பாளரும் சரி அல்லது களத்தடுப்பாளர்களாக இருந்தாலும்சரி எவராக இருந்தாலும் விளையாட்டை உணர்வுபூவமாகவும் நேர்மையுடனும் விளையாடுவது கிரிக்கெட்டுக்கு அழகையும் வீரர்களுக்கு கௌரவத்தையும் ரசிகர்களுக்கு திருப்தியையும் அளிக்கிறது.

## நியூஸி. வாழ்வா சாவா போராட்டம்

அண்மைக்காலமாக சர்வதேச கிரிக்கெட்டில் பிரகாசித்து வருகின்ற இந்திய அணி தொடர்ச்சியான வெற்றிகளை குவித்து முத்திரை பதித்து வருகின்றது. அந்த வகையில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது சர்சவதேந ஒரு நாள் போட்டியில் 8 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்தை வீழ்த்தியது மட்டுமல்லாது பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தில் அபாரமாக செயற்பட்டதை மறுப்பதற்கில்லை.

இந்த வெற்றியானது கௌதம் கம்பிர் தலைமையிலான இந்திய இளம் அணியின் இரண்டாவது வெற்றியாகும். அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி அதிரடி ஆட்டக்காரர் விரேந்திர சேவாக் சுழலில் மாயாயாலம் காட்டும் ஹர்பஜன்சிங் மற்றும் மாஸ்டர் பெட்ஸ்மன் சச்சின் டெண்டுல்கர் ஆகிய முன்னணி வீரர்கள் அணியில் இல்லாத போதிலும் தொடரை வெல்லும் நோக்கில் இந்த இளம் அணி தனது முழுத்திறமையையும் வெளிக்காட்டி வருகின்றது.

தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளையும் வென்றுள்ள நிலையில் நாளை நடைபெறவிருக்கின்ற மூன்றாவது போட்டி மட்டுமல்லாது அனைத்து போட்டிகளுமே நியூஸிலாந்து அணிக்கு வாழ்வா சாவா நிலைய தோற்றுவித்திருக்கின்றது.

எனினும் இந்திய அணி எந்த விதமான அழுத்தங்களுமே இல்லாத நிலையில் மூன்றாவது போட்டியை சந்திக்கவிருக்கின்றது. பங்களாதேஷிடம் ஒரு நாள் தொடரை பறிகொடுத்த நியூஸிலாந்து அணி இந்திய தொடரை தனது போராட்ட குணத்தை வெளிப்படுத்தும் என்றே நம்பப்பட்டது. எனினும் அந்த நம்பிக்கையை பொய்ப்பிக்கும் வகையிலேயே அது விளையாடிய டெஸ்ட் தொடர் அமைந்திருந்தது.



தற்போது நடைபெற்று வருகின்ற ஒரு நாள் தொடரிலும் நியூஸிலாந்து அணி சோபை இழந்து காணப்படுகிறது. இந்நிலையில் நியூஸிலாந்தின் பந்து வீச்சோ அல்லது துடுப்பாட்மோ தமக்கு ஒரு பொருட்டல்ல என்ற விதத்தில் இந்திய அணி வீரர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இருந்த போதிலும் நடைபெறவிருதக்கின்ற மூன்றாவது போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்துக்கு நியூஸிலாந்து அணி தள்ளப்பட்டிருக்கின்றது.

இது இவ்வாறிருக்கையில் ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரவரிகைப்பட்டியலில் முதலாவது இடத்திலிருக்கின்ற இந்திய அணி சர்வதேச ஒரு நாள் தரவரிசைப்பட்டியலில் 128 புள்ளிகளுடன் முதலிடத்திலிருக்கின்ற அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி அதிலும் முதலிடத்தை பெற்று விட வேண்டும் என்ற வைராக்கியத்தில் விளையாடி வருகின்றது. இந்திய அணியின் வைராக்கியத்துக்கு சாதகத்தன்மைகளும் அமைந்து விடுகின்றன.

மேலும் இந்திய அணியுடன் கடுமையான போட்டித்தன்மையை காட்டிவருகின்ற இலங்கை அணியும் தற்போது ஐ.சி.சி. தரவரிசைப்பட்டியலில் 2 ஆவது இடத்தில் பதிந்து கொண்டுள்ளது. இந்நிலையில் அடுத்து அமைகின்ற தொடர்களை பொறுத்தே ஐ.சி.சி. யின் பட்டியலில் முதலிடத்தை பிடிக்கின்ற அணி எது என்பது தெரியவரும்.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் அந்த அணி தற்போது ஆஷஸ் தொடரில் பங்கேற்று வருவதால் அது தற்போதைக்கு ஒரு நாள் தொடரை பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் குறைவானதாகவே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday December 03, 2010